

கல்கி
சந்திரா
KALKI நவம்பர் 15, 1953
4 அண

கல்கி

பொருளடக்கம்

மலர் 13 | இதழ் 16
1953 நவம்பர் 15
விஜய ௵ ஐப்பசி 30

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.



பிறப்பு: 26-11-1897 : பிரிவு : 29-10-1953

உயர்திரு பி. எஸ். மூத்துவேலப்ப கவுண்டர் அவர்கள் கோபி-புதுப்பாளையத்திலே பழம் பெருங் குடியிலே தோன்றி, தமது இளமை தொடங்கியே அஞ்சா நெஞ்சும் அழியா அன்பும் கொண்டு உலையா முயற்சியோடு ஆறு தொண்டு ஆற்றிய அறநெறிச் செல்வர்.

சைவாகம முறையிலே விசேஷ தீட்சை பெற்றுச் சிவபூசையைத் தமது இறுதி நாளன்றும் வழுவாது புரிந்த புண்ணியர். சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன்னரே பெருந்தொகை திரட்டியும் தாமே ஈந்தும் பாரியூர் ஸ்ரீ கொண்டத்துக் காளியம்மன் கோயிலைச் சிறப்புறப் புதுப்பித்து அன்னை பராசக்தியின் அரும்பெரும் பக்தரானவர். இத் திருப்பணி ஒன்றே அவர்தம் மங்காப் புகழை இம்மாநிலத்தில் என்றும் நிலை நாட்டுவதாகும்.

ஆத்மீக வாழ்வுக்கும் கல்வி அபிவிருத்திக்கும் காந்திய வளர்ச்சிக்கும் அவர் ஈந்த பொருளும், புரிந்த சேவையும் அளவிலடங்கா. குறிப்பாக கோபி வைர விழாப் பள்ளி நிலையங்களும், கூகலூர் காந்தி கல்வி நிலையமும் தமது அருமைத் தந்தையார் பேரால் தாமே ஆரம்பித்து நடந்து வரும் "செங்கோடப்பா" ஆரம்ப நிலையமும் இவர்தம் தனிப் பெருங் கருணைக்கு இலக்கானவை.

அன்னாருக்கு மனைவியாரும், பெண்மக்களிருவரும் சகோதரர் இருவரும் (திரு. பி. எஸ். குழந்தையப்ப கவுண்டர், திரு. பி. எஸ். நல்லாக் கவுண்டர் எம். எல். ஏ.) சகோதரியார் ஒருவரும் (திரு கே. கே. சுப்பண்ண கவுண்டர் அவர்களின் மனைவியார்), பல பேரன், பேத்திமார்களும் உளர்.

இப்பெருந்தகையார் 29—10—'53 மாலை 5 மணிக்கு திடீரென மாரடைப்பால் தமது பருவுடம்பு நீத்துப் புகழுடம்பு எய்தினார்கள்.

30—10—1953 அன்று இவர் தம் பிரிவு குறித்து வருத்தம் தெரிவித்து அவர் தம் சார்பு பெற்ற கல்வி, கூட்டுறவு நிலையங்கள் யாவும் நகரிலுள்ள பண்டகசாலைகள் பலவும் மூடப்பட்டன.

இவர்தம் நல்லுயிர் இறைவன் திருவடியில் என்றும் மாறாத பேரின்பத்துள் திளைப்பதாக! சாந்தி.

கல்கி

மலர் 13

தமிழ்த் திருநாடு தன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. —பாரதியார்

இதழ் 16

செந்தமிழ் நாடு சிறந்திடவே!

விஜய வருடம் செந்தமிழ் நாட்டின் சரித்திரத்தில் ஒரு முக்கியமான வருடம். இந்த ஆண்டில் தமிழ் நாட்டின் வருங்காலத்தை நிர்ணயிக்கக் கூடிய பல நிகழ்ச்சிகள் நடந்திருக்கின்றன. அவற்றில் முக்கியமானது சென்னை இராஜ்யத்திலிருந்து ஆந்திர ஜில்லாக்கள் பிரிந்து தனி இராஜ்யமாக அமைக்கப் பட்டதாகும். இந்தப் பிரிவினை முன்னதாகவே நடந்திருக்க வேண்டியது. அதைத் தடை செய்து வந்தது ஆந்திர சகோதரர்கள் சென்னை நகரின் மீது கொண்டாடிய பாத்தியதை. சென்ற ஆண்டில் சென்னை நகரில் நடந்த தமிழ் விழாவின் போது ராஜாஜி இதைப் பற்றி வெளிப் படையாகச் சொன்னார். “தூணை இரண்டு கைகளினாலும் சேர்த்துக் கட்டிக் கொண்டு ‘போக வேண்டும்’ ‘போக வேண்டும்’ என்று சொல்லுவது போல், சென்னை நகர் மீது உரிமை கொண்டாடிக் கொண்டே ஆந்திர ராஜ்யம் கேட்கிறீர்கள். அதனால்தான் உங்களுக்கு ஆந்திர ராஜ்யம் கிட்டவில்லை! தூணை விட்டு விடுங்கள்! பிறகு நீங்கள் பிரிந்து போவதற்குத் தடை எதுவும் இராது!” என்றார்.

இதைக் கேட்டு ஆந்திர சகோதரர்கள் ராஜாஜியின் மீது எரிந்து விழுந்தார்கள். அவர்கள் திட்டிய திட்டுக்களுக்கும் கொடுத்த சாபங்களுக்கும் அளவில்லை. எனினும், சத்தியம் ராஜாஜியின் பக்கம் இருந்தபடியால் அந்தச் சாபங்களும் திட்டுக்களும் அவரை ஒன்றும் செய்யவில்லை. வட நாட்டுத் தலைவர்களுக்குச் சென்னை நகர் சம்பந்தமான நியாயா நியாயம் அவ்வளவாக விளங்கவில்லை. ‘ஆந்திரர்களுக்கும் சென்னையில் ஒரு பங்கு கொடுத்தால் என்ன?’ ‘ஐயோ! பாவம்! சில வருஷங்களாவது தலைநகரைச் சென்னையில் வைத்துக் கொள்ளட்டுமே?’ என்று சொன்னார்கள்.

ராஜாஜி உறுதியாக இருந்து வடநாட்டுத் தலைவர்களுக்கு நியாயத்தையும் உணர்த்தினார். இதனால் சென்னை நகரம் தமிழ் நாட்டைச் சேர்ந்ததாயிற்று.

ஆந்திர சகோதரர்கள் சென்னையைக் கைவிட நேர்ந்தது. அவர்களுடைய தனி இராஜ்யக் கோரிக்கையும் கிட்டியது.

கர்னூலைத் தலைநகராகக் கொண்டு இராஜ்யம் நடத்தத் தொடங்கி யிருக்கிறார்கள்.

சில காலத்துக்கு முன்பு வரையில் பூனையும் எலியும் போல் சண்டை யிட்டுக் கொண்டிருந்த ஆந்திரத் தலைவர்கள் இப்போது ஒன்று சேர்ந்திருக்கிறார்கள்.

காங்கிரஸை நிர்மூலம் செய்வதற்காகக் குழப்பவாதிகளுடனும் வகுப்புவாதிகளுடனும் சேர்ந்து யு. டி. எப். கட்சி அமைத்த ஸ்ரீ டி. பிரகாசம் இன்று காங்கிரஸ் வாதிகளுடன் ஒத்துழைத்து இராஜ்யம் நடத்துகிறார்.

மாஜி காங்கிரஸ் மந்திரிகளை லஞ்சம் முதலிய குற்றங்களுக்காகச் சிறையில் வைத்துப் பார்க்க விரும்பிய ஆந்திரகேசரி, மாஜி காங்கிரஸ் மந்திரிகளில் ஒருவரான ஸ்ரீ சஞ்சீவி ரெட்டியை உதவிப் பிரதம மந்திரியாக இன்று ஏற்றுக் கொண்டிருக்கிறார்.

அம்மாதிரியே காங்கிரஸையும் ஸ்ரீ பிரகாசத்தையும் மூர்த்தண்யமாக எதிர்த்த கிருஷிகலோக் கட்சியும் மேற்படியார்களுடன் ஒத்துழைக்க முன் வந்திருக்கிறது. கடைசியாக, கிருஷிகலோக் கட்சியின் பிரதிநிதி ஸ்ரீ லச்சண்ணாவும் மந்திரி சபையில் சேர்ந்து விட்டார்.

ஆந்திர இராஜ்யம் விரைவாக முன்னேற்றம் அடையும் என்பதில் ஐயமில்லை. முன்னேற்றத்திற்குரிய இயற்கை வசதிகள் பல ஆந்திர இராஜ்யத்தில் இருக்கின்றன. துங்கபத்திரை, கிருஷ்ணா, கோதாவரி, வடபெண்ணை நதிகளைக் கொண்டு ஆந்திர ராஜ்யத்தை நீர்வள-நிலவளத்தில் இணையில்லாத நாடாகச் செய்ய முடியும். மேற்கூறிய ஜீவநதிகளின் மூலம் ஆண்டு தோறும் சென்று கடலில் கலக்கும் தண்ணீரில் ஒரு பகுதியை அணை போட்டுப் பயன் படுத்தினால் அந்த நாட்டில் ராயலசீமை உள்படப் பஞ்சம் என்ற பேச்சே தலைகாட்டாமல் செய்யலாம்.

ஆந்திர ராஜ்யத்தில் பல மின்சார உற்பத்தித் திட்டங்களை அமைத்துத் தொழில் வளத்தையும் பெருக்கலாம்.

துங்கபத்திரை அணைக்கட்டுத் திட்டம் இந்த வருஷத்தில் பூர்த்தியாகி யிருக்கிறது. இதனாலேயே ஆந்திர நாடு பெரிதும் வளம் பெறப் போகிறது.

"புதிய தனி இராஜ்யம் பெற்றோம்" என்ற உற்சாகமும் பெருமிதமும் ஆந்திரர்களின் உள்ளங்களில் பொங்கி வழிகின்றன. இவையும் முன்னேற்றத்துக்குப் பெரிதும் சாதனங்களாயிருக்கும்.

'விசால ஆந்திர இயக்கம்' ஒன்று நடந்து வருகிறது. இந்த இயக்கத்தின் நோக்கம் ஹைதராபாத் இராஜ்யத்தில் தற்சமயம் அடங்கியுள்ள ஒரு பெரிய பிரதேசத்தை (தெலிங்கானாவை) ஆந்திர ராஜ்யத்தில் சேர்த்துக் கொள்வதாகும். இது நிறைவேறும்போது ஹைதராபாத் நகரம் ஆந்திர ராஜ்யத்தைச் சேரும்.

இந்த 'விசால ஆந்திர' இயக்கம் ஆந்திரர்களுக்கு உற்சாகமும் ஊக்கமும் அளித்து வரும்.

ஆந்திர சகோதரர்கள் விரைவில் அடையப் போகும் உன்னத நிலை குறித்து நாம் மகிழ்ந்து அவர்களைப் பாராட்டுகிறோம்.

நம் அண்டை வீட்டுச் சகோதரர்கள் நன்றாக இருந்தால், அதுவே நமக்கு மகிழ்ச்சி தருவதாகும். அது நமக்கு ஒரு படிப்பினையாகவும் உதாரணமாகவும் இருக்குமாதலால், இரட்டிப்பு மடங்கு மகிழ்ச்சி அடைய வேண்டிய காரியம்.

*　　*　　*

ஆந்திர ராஜ்யம் பிரிந்த பின் எஞ்சியுள்ள சென்னை இராஜ்யத்தில் முக்கியமான பகுதி நம் அருமைச் செந்தமிழ் நாடுதான்.

மலையாளமும் தென் கன்னடமும் நாளையோ மறுநாளோ நம்மை விட்டுப் பிரிந்து போய்விட வேண்டியவை. மலையாளிகளையும் கன்னடியர்களையும் நாம் துரத்த வேண்டிய அவசியமே இல்லை. அவர்களே பிரிந்து போகத்தான் செய்வார்கள்.

அவர்கள் சிலகாலம் நம்முடன் இருந்த போதிலும் கூட, எஞ்சியுள்ள சென்னை இராஜ்யத்தில் மிகப் பெரிய பகுதி செந்தமிழ் நாடுதான். ஆகையால், இதைத் 'தமிழ் ராஜ்யம்' என்று சொல்வதில் முறைத்தவறு ஒன்றுமில்லை. அரசியல் அமைப்பு விதிகளின்படி அரசாங்க ரீதியாகத் தற்போது 'தமிழ் ராஜ்யம்' என்று ஒப்புக்கொள்ள மாட்டார்கள். மலையாளமும் தென் கன்னடமும் பிரிந்து போன பிறகுதான் ஒப்புக் கொள்வார்கள். அதுவரையில் தமிழர்கள் 'தமிழ் ராஜ்யம்' என்று சொல்லிக் கொள்வதில் யாதொரு தடையுமில்லை.

தமிழ் இராஜ்யம் கிடைத்து விட்டது. செந்தமிழ் நாடு தமிழர்களுக்காகத் தமிழர்களைக் கொண்டு தனி அரசாட்சி நடத்தும் நிலையை அடைந்து விட்டது.

அடுத்தபடியாக என்ன நடக்கப் போகிறது!

செந்தமிழ் நாடு செழித்திடவும் சிறந்திடவும் முன்னேறவும் வழி துறைகளை வகுத்து வேலை செய்யப் போகிறோமா!

பிற மாகாணங்களுடன் ஒப்பிடும்போது தமிழ் நாட்டில் இயற்கை வசதிகள் குறைவு. காவேரி ஒன்றுதான் ஜீவநதி. அதை மேட்டூர் அணைக்கட்டு மூலம் எவ்வளவு தூரம் பயன்படுத்தலாமோ அவ்வளவும் பயன்படுத்தியாகி விட்டது. காவேரி மூலம் நீர்வளம் பெற்றுள்ள பிரதேசம் சுமார் ஒன்றரை ஜில்லாக்கள்தான்.

ஏனைய தமிழகத்தில் இரண்டு மூன்று ஜில்லாக்களில் நன்செய்ப் பயிர் செய்யக் கூடிய நீர்ப்பாசன வசதிகள் மிகச் சொற்பமாயிருக்கின்றன.

தமிழ் நாட்டில் முக்கால் வாசிப் பிரதேசம் வானம் பார்த்த சீமை. மழை பெய்தால்தான் விவசாயமும் விளைவும் உண்டு. மழை இல்லாவிட்டால் விளைவும் இல்லை; மக்களுக்கு வேறு தொழில் வசதிகளும் அதிகம் இல்லை.

இவ்வாறு இயற்கை வளங்கள் குறைவாக இருந்த போதிலும், அந்தக் குறையை இட்டு நிரப்பக்கூடிய ஒரு வளத்தில் தமிழ்நாடு சிறந்து விளங்குகிறது. அதுதான் அறிவு வளம்.

தமிழ் மக்கள் அறிவாளிகள் என்பது உலகம் அறிந்த உண்மை. தமிழ் நாட்டிலிருந்து வடநாட்டுக்கோ அயல் நாடுகளுக்கோ போகிற தமிழர்கள் அனைவரும் நமக்கு அந்தப் பெருமையையும் பிரபலத்தையும் அளித்து வருகிறார்கள்.

வெளி நாடுகளிலிருந்து தமிழ் நாட்டுக்கு வருவோரும் தமிழர்களின் அறிவு வளத்தைப் பாராட்டத் தவறுவதில்லை.

இயற்கை வளத்தில் உள்ள குறைவுகளை அறிவின் வளத்தைக் கொண்டு இட்டு நிரப்பலாம்.

செந்தமிழ்நாடு செழித்தோங்கிடச் செய்யலாம்; உலகத்தின் முன்னிலையில் சிறந்து விளங்கச் செய்யலாம்; முன்னேற்றப் போட்டியில் இணையில்லாத வெற்றி அடையும்படி செய்யலாம்.

இவ்வளவுக்கும் இன்றியமையாத நிபந்தனை தமிழ் மக்கள் தங்கள் அறிவு வளத்தை நல்ல முறையில் பயன் படுத்துவதாகும்.

அறிவின் சக்தியை நல்லதற்கும் பயன் படுத்தலாம்; தீயதற்கும் பயன் படுத்தலாம்.

ஒருவரை யொருவர் காலைப் பிடித்து இழுத்து விடுவதில் அறிவின் சக்தியைப் பயன் படுத்தினால் எளிதில் அதோகதியை அடையக் கூடும்.

அதோகதியை அடையும் மார்க்கம் சுலபமான மார்க்கமும் ஆகும்

கீழ் நோக்கிச் சென்று படுபள்ளத்தில் விழுவது மிக எளிது; மேல் நோக்கி ஏறுவது தான் கஷ்டமான காரியம். அதற்கு மிக்க மனோதிடம் வேண்டும்; பொறுமையான உழைப்பு வேண்டும்.

தமிழ் மக்களின் அறிவுத்திறனோடு ஒற்றுமையும் சகோதர பாவமும் ஒத்துழைக்கும் திறனும் சேர்ந்து விட்டால், செந்தமிழ்நாடு செழிப்பதிலும், சிறப்பதிலும் யாதொரு சந்தேகமும் இல்லை.

இதற்கு மாறாக, வேற்றுமைகளையும் பூசல்களையும் வளர்த்துத் தீய சக்திகளைப் பரப்புவதில் அறிவைச் செலுத்தினோமானாலும், அதோகதி அடைவதிலும் சந்தேகம் இல்லை.

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே — நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே!"

என்று பாரதியார் கூறியது, தற்போதைய தனி அரசாங்கம் பெற்ற தமிழ் மக்களை நோக்கிக் கூறிய தென்றே வைத்துக் கொள்ளலாம்.

*　　*　　*

செந்தமிழ் நாடு செழித்தோங்கிச் சிறந்து விளங்குவதற்கு உடனடியாகச் செய்ய வேண்டிய காரியங்கள் சில இருக்கின்றன.

1. உணவுப் பற்றாக் குறையை ஒழிக்க வேண்டும் இயற்கை வளம் இல்லாத இடங்களைச் செயற்கை முறையில் வளப்படுத்த வேண்டும். செந்தமிழ் நாட்டுக்கு வேண்டிய உணவுப் பொருள் முழுதும் இந்த நாட்டிலேயே உற்பத்தியாவதற்கு வேண்டிய உபாயங்களைத் தேட வேண்டும்.

2. உற்பத்தியாகும் உணவை வாங்கி உண்பதற்கு மக்களிடம் பொருள் வளம் பெருகுவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

3. வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க வேண்டும். உயர்தரப் பள்ளிக்கூடங்களிலும் கலாசாலைகளிலும் படித்து விட்டு வெளியில் வந்து வேலை கிட்டாமல் வாழ்க்கையையே வெறுக்கும் நிலையில் இன்று பல்லாயிரக் கணக்கான இளைஞர்கள் இருந்து வருகிறார்கள். அவர்களுக்குத்

தக்கவேலை தேடித் தந்து தங்களுக்கும் நாட்டுக்கும் பயனுள்ளவர்களாகச் செய்ய வேண்டும்.

4. படிக்காத கிராமவாசிகளிடையிலும் வேலையில்லாத் திண்டாட்டம் குடிகொண்டிருக்கிறது. ஒரு வருஷம் மழை இல்லாவிட்டால் ஆயிரக்கணக்கான விவசாயத் தொழிலாளிகள் வேலை தேடி வேறு ஜில்லாக்களுக்குப் போக வேண்டியிருக்கிறது. இந்த நிலையைப் போக்கி அந்தந்த ஜில்லாவின் இயற்கை வசதிகளை யொட்டிய பல்வகைத் தொழில்களை ஏற்படுத்த வேண்டும். எல்லாவற்றிலும் முக்கியமாக, இன்றைய தினம் கைத்தறித் தொழிலாளரிடம் பரவியுள்ள பஞ்சத்தை;யும் வேலை யில்லாக் கொடுமையையும் உடனடியாகப் போக்க வேண்டும்.

5. தமிழ் நாட்டில் படித்தவர்கள், படிக்காதவர்கள் என்ற புதிய சாதிவேற்றுமை உண்டாகாதபடி தடுக்க வேண்டும். அடுத்த சில ஆண்டுகளுக்குள் 'தமிழ் நாட்டில் எழுதப் படிக்கத் தெரியாத சிறுவர் சிறுமியரே இல்லை' என்ற நிலையை ஏற்படுத்த வேண்டும்.

6. பணக்காரர்கள் ஒரு பக்கம் பணக்காரர்களாகிக்கொண்டே போகவும் ஏழைகள் ஏழைகளாகவே இருக்கவும் இடம் இன்றி, நாட்டில் உற்பத்தியாகும் பொருள்களும் ஏற்படும் வசதிகளும் அனைவருக்கும் ஏறக்குறைய பரவலாகக் கிடைக்கும்படி செய்ய வேண்டும். தேசத்தின் அமைதிக்குப் பங்கமில்லாத சட்ட ரீதியான முறைகளில் இது செய்யப்பட வேண்டும்.

தமிழ் மக்கள் தங்கள் அறிவைச் சரியான முறையில் பயன்படுத்தினால் இவையெல்லாம் விரைவில் நிறைவேறக்கூடிய காரியங்கள்தான்.

அகண்டமான சமுத்திரத்துக்கு நடுவில் உள்ளவன் தாகத்துக்குத் தண்ணீர் இல்லாமல் தவிக்கும் நிலையைப் பற்றி அறிந்திருக்கிறோம்.

அதுபோல், அறிவு எவ்வளவுதான் இருந்தாலும், அதில் வேற்றுமையும் துவேஷமும் போட்டியும் பொறாமையும் கலந்து விட்டால், அந்த அறிவானது வாழ்க்கையில் முன்னேறுவதற்குப் பயன் படாமற் போய் விடும்.

புதிய தமிழ் ராஜ்யம் ஆரம்பமாகி யிருக்கும் இச்சந்தர்ப்பத்தில் தமிழ் மக்கள் தங்கள் அறிவைச் சரியான முறையில் பயன்படுத்த வேண்டும். பிரிவினை, வேற்றுமை, துவேஷம், பூசல், பொறாமை முதலிய தீய சக்திகளுக்கு இடங் கொடுக்கக் கூடாது.

அரசியல் வாதிகள் சுயநல காரணங்களை முன்விட்டு மேற்கூறிய தீயசக்திகளை வளர்ப்பதற்குப் பார்ப்பார்கள். இதற்குள்ளேயே அந்த வேலையைத் தீவிரமாகத் தொடங்கி விட்டார்கள். பொது மக்கள்தான் அத்தகைய அரசியல்வாதிகளை நேர் வழிப்படுத்த வேண்டும்.

“ஒற்றுமையாக இருந்து செந்தமிழ் நாட்டின் மேன்மைக்குத் தொண்டு செய்வதானால் செய்யுங்கள்; இல்லாவிட்டால், உங்கள் சொந்த வேலையைப் பார்த்துக் கொண்டு போங்கள்; நாட்டைக் கெடுத்து நாசமாக்காதீர்கள்” என்று கண்டிப்பாகச் சொல்லிவிட வேண்டும்.

ராஜாஜி எதிர்ப்பு ஏன்?

செந்தமிழ் நாட்டின் முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டையான தீய சக்திகள் பல இருக்கின்றன; அவை பல துறைகளில் பல வடிவங்களில் வேலை செய்து வருகின்றன.

அந்தத் தீய சக்திகளில் ஒன்று தமிழ் நாட்டுக் காங்கிரஸ் கட்சிக்குள்ளேயே இருந்து வருகிறது. சில சமயம் அது அடங்கி யிருக்கிறது; சில சமயம் 'புஸ்' என்று கிளம்புகிறது.

காங்கிரஸ் அமைப்புக்குள் இயங்கும் அந்தத் தீய சக்தி ராஜாஜி எதிர்ப்பாகப் பரிணமித்திருப்பதைப் பற்றி நேயர்கள் தினப் பத்திரிகைகளில் படித்திருப்பார்கள். “கல்கி”யைத் தொடர்ந்து படித்து வரும் நேயர்கள் அதைக் குறித்துச் சிறிதும் வியப்படைந்திருக்க மாட்டார்கள்.

ராஜாஜி சென்னை இராஜ்யத்தின் முதன் மந்திரிப் பொறுப்பை ஏற்க வேண்டுமென்று சென்ற ஆண்டு ஆரம்பத்தில் பிரஸ்தாபம் வந்தபோது நாம் அதை ஆதரிக்கவில்லை.

முதன் மந்திரிப் பொறுப்பை ராஜாஜி ஏற்றுக் கொண்டால் அவர் வெளியில் உள்ள பல தீய சக்திகளுடன் போராடுவதுடன் காங்கிரஸ் அமைப்புக்குள் புகுந்திருக்கும் சுயநல வாதிகளுடனும் போராட வேண்டி யிருக்கும் என்றும் எதிர் பார்த்தோம்.

“இன்று ‘தாங்கள்தான் முதன்மந்திரி பதவி ஏற்று இம் மாகாணத்தை அரசியல் குழப்பத்தி லிருந்தும் அராஜகத்தி லிருந்தும் காப்பாற்ற வேண்டும்’ என்று சொல்கிறவர்கள், நாளைக்கு நெருக்கடி தீர்ந்ததும் உள்ளிருந்தே குழி பறிக்கப் பார்ப்பார்கள்” என்று கூறினோம்.

இவ்வளவு கஷ்டங்களை ராஜாஜி தமது முதிய பிராயத்தில் எதற்காக மேற்போட்டுக் கொள்ள வேண்டும் என்று கருதினோம். யாரால் இம் மாகாணத்துக்கு அபகீர்த்தியும் அவகேடும் வந்ததோ அவர்களே எப்படியேனும் சமாளிக்கட்டும் என்றும் சொன்னோம்.

கண்ணன் காட்டிய வழியைக் கடைப்பிடிப்பவரான ராஜாஜி தமது சொந்தக் கஷ்டங்களைக் கவனியாமல் மிக நெருக்கடியான நிலைமையில் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். குழப்பக்காரர்களையும் கலகக்காரர்களையும் சமாளித்து இந்த மாகாணத்தை அராஜகப் படுகுழியில் விழாமல் காப்பாற்றினார். இதைக் கண்டு வட இந்தியா வியந்தது; உலகத்தின் அரசியல் பிரமுகர்கள் எல்லாரும் அதிசயப்பட்டார்கள்.

அச்சமயம் அவ்வளவு செயற்கரிய காரியங்களை ராஜாஜி சாதித்தபடியினால் தான் பண்டித ஜவாஹர்லால் நேரு இன்று ராஜாஜி எதிர்ப்பாளரை நோக்கி, “அடாடா! உங்களுக்கு வேறு நல்ல குணம் ஒன்று மில்லாவிட்டாலும் நன்றி உணர்ச்சி கூடவா இல்லாமல் போய் விட்டது!” என்று சொல்லிக் காட்டலாயிற்று.

சாதாரணமாகப் பத்து வருஷங்களில் செய்யக் கூடிய காரியங்களைச் சென்ற ஒன்றேகால் வருஷ காலத்தில் ராஜாஜி சாதித்திருக்கிறார். அவற்றில் முக்கியமான சில சாதனைகளை இங்கே ஞாபகப் படுத்திக் கொள்ளலாம்.

1. குழப்பக்காரர்களும் வகுப்புத் துவேஷிகளும் சேர்ந்த கபந்தக் கட்சியார் சென்னை இராஜ்ய சர்க்காரைக் கைப்பற்றி நாட்டை அராஜகக் கலவரங்களில் ஆழ்த்தாமல் தடுத்தார்.

2. ஒழியவே ஒழியாது என்று கருதிய உணவுக் கண்ட்ரோலைத் துணிவுடன் ரத்து செய்து பாரத

தேசத்துக்கே வழி காட்டினார். மக்கள் அதற்குப் பிறகுதான் 'உண்மையில் சுதந்திரம் அடைந்தோம்' என்று உணர்ந்து மகிழ்ந்தார்கள்.

3. தமிழ் நாட்டின் தானியக் களஞ்சியமான தஞ்சை ஜில்லாவானது, குத்துப்பழி—வெட்டுப் பழிக் கூச்சல் நிறைந்த படுகொலைக்களமாக மாறும் நிலைமையில் இருந்தது. அந்த ஜில்லாவில் விவசாயத் தொழில் சென்ற ஆண்டில் பாதகமடைந்திருந்தால் நாட்டின் பஞ்ச நிலைமை பதின் மடங்கு கொடுமையாயிருக்கும். விவசாயத் தொழில் பாதுகாப்புச் சட்டத்தை அவசரச் சட்டமாகக் கொண்டு வந்து நிறைவேற்றித் தஞ்சை ஜில்லா நெற்களஞ்சியத்தைக் காப்பாற்றினார். அங்கு இப்போது விவசாயம் தங்கு தடையின்றி ஒழுங்காக நடந்து வருகிறது.

4. ஐந்து வருஷம் இடைவிடாமல் மழை பொய்த்தபடியால் சென்னை இராஜ்ய சர்க்காரின் பொருளாதார நிலைமை மிக்க சீர்கேட்டை அடைந்திருந்தது. இந்திய சர்க்காரோடு போரிட்டு அவசியமான பொருளாதார வசதிகளைப் பெற்றார். அது மட்டுமின்றி, பொருளாதார நிபுணர்கள் பலர் பயமுறுத்தியும் கேளாமல் இரண்டு தடவைகள் பொது மக்களிடம் கடன் கேட்டார். இரண்டு தடவையும் வெற்றியடைந்தார். இரண்டாவது தடவை ஐந்து கோடி ரூபாய் கேட்டதற்கு ஒன்பது கோடி ரூபாய் வசூலாயிற்று. அரசியல் சரித்திரத்திலும் பொருளாதாரத் துறையிலும் என்றும் கேட்டிராத அதிசயம் இது.

5. கைத்தறித் தொழிலாளரைக் காப்பாற்றுவதற்காகப் பெருமுயற்சி செய்தார். இது சம்பந்தமாக இந்திய சர்க்கார் அவருடைய கோரிக்கையை இன்னும் முழுதும் நிறைவேற்றவில்லையென்றாலும் ஓரளவு அவசர நடவடிக்கை எடுக்கும்படி செய்தார். அதோடு, மக்களிடம் கைத்தறித் துணிகளையே வாங்கும்படி தீவிரப் பிரசாரம் செய்தார். கைத்தறித் தொழிலாளரின் நிலை இப்போது சென்ற வருஷத்தைக் காட்டிலும் பெரிதும் அபிவிருத்தி யடைந்திருக்கிறது.

6. இந்த நாட்டில் பிறந்த குழந்தைகள் அனைவரும் குறைந்த பட்சம் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களாக வேண்டும் என்பதற்காகப் புதிய ஆரம்பக் கல்வித் திட்டத்தைக் கொண்டு வந்தார். இதை அவசரக் குடுக்கைகளும் துன்மதியாளர்களும் வெவ்வேறு நோக்கங்களுடன் எதிர்த்தபோதிலும், புதிய கல்வித் திட்டத்தின் தன்மையைப் பொது மக்கள் நன்கு உணர்ந்து கொண்டனர். இந்தியா தேசத்தின் சிறந்த கல்வி நிபுணர்கள் அதைப் பாராட்டுகிறார்கள். பிற மாகாணங்களும் இந்தச் சிறந்த திட்டத்தைப் பின்பற்ற ஏற்பாடுகள் செய்து வருகின்றன.

7. சென்னை நகரம் தமிழ் நாட்டுக்கே உரியது என்பதை வற்புறுத்திப் போராடி நிலைநாட்டினார். இதனால் ஆந்திர சகோதரர்களின் மகத்தான கோபத்துக்கு ஆளானார். அதைப் பொருட்படுத்தாமல் தமது கடமையை நிறைவேற்றினார். நீதிபதி வாஞ்சுவின் தீர்ப்பையும் இந்திய சர்க்கார் மாற்றும்படி செய்தார். ராஜாஜி ஒருவரைத் தவிர வேறு யாராலும் இந்தக் காரியத்தைச் சாதித்திருக்க முடியாது. ஆந்திர சகோதரர்கள் அச்சமயம் எவ்வளவு கோபப்பட்டாலும் பிற்பாடு அவர்களும் தர்ம நியாயத்தையும் ராஜாஜியின் நேர்மையான போக்கையும் உணர்ந்து கொண்டார்கள். கர்நூலில் ஆந்திர ராஜ்ய ஸ்தாபனத்தின் போது ராஜாஜிக்கு அளிக்கப்பட்ட வரவேற்பிலிருந்து இதை நன்கறியலாம்.

நெருக்கடியான ஒரு சமயத்தில் சென்னை மாகாணத்துக்குக் கைகொடுக்க முன்வந்து இவ்வளவு அரும்பெரும் சாதனைகளைச் செய்து முடித்தது ராஜாஜியின் தொண்டு வாழ்க்கைக்கு ஓர் உன்னத சிகரமாக அமைந்திருக்கிறது. ராஜாஜி சம்பந்தப்பட்ட வரையில், இனி ஓய்வு எடுத்துக் கொள்ள அவருக்கு உரிமை உண்டு. அதில் அவருக்கு ஆர்வம் இருப்பதும் இயல்பு.

ஆனால் இவ்வளவு அரும் பெரும் காரியங்களைப் பொது மக்களின் நலத்துக்காகச் சாதித்தவரைக் கிளப்ப வேண்டுமென்று எம். எல். ஏ.க்கள் சிலர் ஏன் அவசரப்படுகிறார்கள் என்பது கேள்வி.

ஏற்கனவே ஒருதடவை இம்மாதிரி முயற்சிகளில் இவர்கள் தலையிட்டதினால் தானே சென்னை ராஜ்யம் ஏறக்குறைய அழிவின் எல்லையை அடைந்தது! அதற்காகத் தானே இவர்கள் சும்மா இருந்த ராஜாஜியைப் போய் அழைத்தார்கள்! பொதுத் தேர்தலின் பாடங்களை அதற்குள்ளே இவர்கள் மறந்து விட்டார்களா!......

இதற்குப் பதில் ஒன்றே ஒன்றுதான். சுயநலத்தினால் கண் மூடப்பட்டவர்களுக்கு எது சரி, எது தவறு என்று அறியும் சக்தி இருப்பதில்லை.

தேர்தலுக்கு நின்ற போது, ஏதேதோ மனக் கோட்டை கட்டிக் கொண்டு நின்றார்கள். ஒவ்வொருவரும் சுயநலம் பற்றிய ஒவ்வொரு காரியத்தையோ பற்பல காரியங்களையோ மனத்தில் வைத்துக் கொண்டு நின்றார்கள். தேர்தல் முடிவில் ஏற்பட்ட நிலையைக் கண்டதும் அந்தச் சுயநலக் கனவுகளை ஒத்திப் போட்டிருந்தார்கள்.

ராஜாஜி முதன் மந்திரி ஆனவுடனேயே சில விஷம மூர்த்திகள் தங்கள் சொரூபத்தைக் காட்ட ஆரம்பித்ததுண்டு. மற்றவர்கள் அவர்களிடம் ''அவசரப்பட வேண்டாம்; பொறுத்திருப்போம்; காலம் மாறும்; அப்போது பார்த்துக் கொள்ளலாம்'' என்று உபதேசித்து வந்தார்கள் போலும்!

''காலம் மாறிவிட்டது; நெருக்கடி போய் விட்டது; இனி ராஜாஜியை அனுப்பி விட்டு நம்முடைய காரியங்களைப் பார்த்துக் கொள்ளலாம்'' என்று கருதிக் கையெழுத்துப் படலத்தைத் தொடங்கி யிருக்கிறார்கள்.

இத்தனை நாள் அவர்கள் பொறுத்துக் காத்திருந்ததே பெரிய காரியம். இனி மேலும் எப்படிக் காத்திருக்க முடியும்! ராஜாஜியே இன்னும் நீடித்திருந்தால் அவரவர்களும் எண்ணி வந்த காரியம் என்ன ஆகின்றதாம்! — புண்ணியவான்கள் இந்தப் பதினைந்து மாத காலம் சும்மாயிருந்தார்களே, அதற்காகவே பொது மக்கள் சந்தோஷப்பட்டு நன்றி செலுத்த வேண்டியதுதான்!

ஆயினும், சட்டசபைக் காங்கிரஸ் கட்சியில் இத்தகைய மனோபாவம் உள்ளவர்கள் மிகச் சிறுபான்மையோராகவே இருக்க முடியும் என்று நம்புகிறோம். மற்றவர்கள் என்ன செய்யப் போகிறார்கள் என்பதைப் பொறுத்துத் தமிழ் நாட்டின் வருங்காலம் நிர்ணயிக்கப்படப் போகிறது.

தமிழ் நாட்டின் நற்பெயருக்கு ஹானி விளைத்துப் பொது மக்களின் நலன்களைப் புறக்கணித்துக் காங்கிரஸுக்கும் குழி தோண்டும் முயற்சிக்குப் பெரும்பாலான எம். எல். ஏ.க்களும், எம். எல். ஸி.க்களும் ஆதரவு தருவார்களா!

அவசர சுயநலக்காரர்கள் பழைய கதைகளையும் அவற்றின் விளைவுகளையும் மறந்து விடலாம். எல்லாருமா மறந்து விடுவார்கள்!

இம்மாதிரி முயற்சிகளினால் நாட்டின் நலத்துக்கும் காங்கிரஸின் பலத்துக்கும் அவர்களுடைய

அரசியல் வாழ்வுக்குமே எவ்வளவு கேடுகள் விளையும் என்பதை மற்றவர்கள் உணராமல் இருக்க முடியுமா!

தமிழ் நாட்டுப் பொது மக்கள் ராஜாஜிக்கு எதிரான முயற்சிகளைப் பற்றி என்ன நினைக்கிறார்கள் என்பதுதான் தெரியாமல் இருக்க முடியுமா!

இவற்றைக் குறித்துச் சிந்திப்பது எம். எல். ஏ. க்கள், எம். எல். ஸி. க்களின் பொறுப்பு.

நம்மைப் பொறுத்த வரையில், இந்தப் பதினைந்து மாத காலமாவது புண்ணியவான்கள் சும்மா இருந்தார்களே! தமிழ் நாடு, இவ்வளவு தூரமாவது நல்ல நிலையை அடைய இடம் கொடுத்தார்களே என்று திருப்தி அடைகிறோம். இனி, எது நடந்தாலும் நடந்துவிட்டுப் போகட்டும். தமிழகத்தின் அதிர்ஷ்டம் எப்படியோ, அப்படித்தானே காரியங்களும் நடக்க முடியும்!

தீமையிலிருந்தும் நன்மை விளையலாம்

நிதிமந்திரி ஸ்ரீ ஸி. சுப்பிரமணியம் சென்ற வாரத்தில் கோயமுத்தூரில் பேசும் போது ராஜாஜி எதிர்ப்புக் கிளர்ச்சியின் ஓர் அம்சத்தைக் குறித்து எடுத்துச் சொன்னார். அதாவது, அந்தத் தீமையிலிருந்தும் ஒரு பெரு நன்மை விளையக்கூடும் என்று கூறினார். அதற்கு அத்தாட்சியும் காட்டிக் காட்டினார்.

ராஜாஜி இந்த வருஷம் மார்ச்சு மாதத்திலேயே விலகிக் கொள்ள விரும்பினார். ஆந்திர சகோதரர்களின் கிளர்ச்சி ஏற்பட்டது. சென்னை நகரின் மீது தமிழர் பாத்தியதை நிலைநாட்டுவதற்காக ராஜாஜி தொடர்ந்து இருப்பது அவசியமாயிற்று.

சென்னை நகரின் மீது தமிழரின் உரிமை நிலை பெற்றதும் ராஜாஜி விலகிக் கொள்ள விரும்பினார். ஜவாஹர்லால்ஜிக்கே எழுதி விட்டார். "ஆந்திர மாகாணம் பிரியும்போது சிலமாத காலம் கவர்னரின் ஆட்சி இருப்பது நலம். பிரிவினை சம்பந்தமாக வீண் மனக் கசப்பு வளராமல் இருக்க அது உதவும். இராஜ்யம் பிரிந்த பிறகு இரண்டு இராஜ்யங்களிலும் புதிய மந்திரி சபைகள் ஏற்படவும் அனுகூலமாகவும் இருக்கும்" என்று எழுதியிருந்தார்.

இச்சமயம் பார்த்துப் புதிய ஆரம்பக் கல்வித் திட்டம் சம்பந்தமான துவேஷக் கிளர்ச்சியைத் தொடங்கினார்கள். அந்தத் திட்டம், பிற்பட்ட வகுப்புகளைச் சேர்ந்த 42 லட்சம் குழந்தைகளைப் படிக்க வைப்பதற்கான திட்டம் என்பது தெளிவாக இருந்தும், அதை ஒரு சாக்காக வைத்துத் திரித்துத் துவேஷப் பிரசாரம் செய்தார்கள்.

வெளியிலே கம்யூனிஸ்டுகள், திராவிடக் கழகத்தார், திராவிட முன்னேற்றக் கழகத்தார் ஆரம்பித்த முயற்சியை, காங்கிரஸுக்குள்ளேயிருக்கும் திராவிடக் கழக அபிமானிகளும் தீவிரமாக ஆதரித்துப் பூசலைக் கிளப்பினார்கள்.

இந்த நிலைமையில் இராஜ்யத்தை விட்டுப் போகக் கூடாதென்று ராஜாஜி மேலும் சிலகாலம் தொடர்ந்து இருக்கும்படி நேர்ந்தது.

இப்போது சில காங்கிரஸ் எம். எல். ஏ.க்கள், எம். எல். ஸி.க்கள் தொடங்கியிருக்கும் முயற்சியினாலும் அத்தகைய நற்பயன் விளையக் கூடும் என்று நிதிமந்திரி ஸ்ரீ ஸி. சுப்பிரமணியம் கூறினார்.

"புதிய தமிழ் இராஜ்யத்தை இப்படிப்பட்டவர்களிடமா ஒப்படைத்து விட்டுப் போவது!" என்று ராஜாஜி மட்டுமின்றிக் காங்கிரஸ் மேலிடத்தாரும் எண்ணக் கூடும் அல்லவா!

புதிதாகப் பொதுத் தேர்தல் நடத்தித் தமிழ்ப் பெருமக்களின் பூரண நம்பிக்கைக்குப் பாத்திரமான பிரதிநிதிகளிடம் தமிழ் இராஜ்யத்தை ஒப்புவித்த பிறகுதான் ராஜாஜி விலக வேண்டும் என்று காங்கிரஸ் மேலிடத்தார் கருதலாம். சென்ற ஆறு வருடத்துக் கதைகளை இந்த மாகாணத்திலுள்ள எம். எல். ஏ. க்கள் சிலர் மறந்துவிட்ட போதிலும், காங்கிரஸ் மேலிடத்தார் மறக்க முடியாதல்லவா! காங்கிரஸ் பலத்தில் தலை சிறந்திருந்த இராஜ்யம் சென்ற பொதுத் தேர்தலின் முடிவில் எந்த நிலையை அடைந்திருந்தது என்பதையும் அவர்கள் நினைவு கூர்ந்திருப்பார்கள் அல்லவா!

இது எப்படியானாலும், ஒரு விஷயம் நிச்சயமாகியிருக்கிறது. ராஜாஜி தாம் விடுத்துள்ள அறிக்கையில், "நான் மந்திரியாயிருந்தாலும், இல்லாவிட்டாலும், இம் மாகாணத்தின் அரசியல் வாழ்வின் தூய்மையைப் பாதுகாக்கப் போராடியே தீருவேன்" என்று உறுதி கூறியிருக்கிறார்.

கவலையுற்றிருக்கும் தமிழ்ப் பெரு மக்களுக்கு ராஜாஜி அளித்திருக்கும் இந்த உறுதி பெரும் ஆறுதலாயிருக்கும் என்பதில் ஐயமில்லை.

எதை மறந்தாலும் பிரார்த்தனையை மறவாதீர்!

இந்தத் தென்னாட்டில் வழக்கமான பருவ மழைகள் பெய்து ஆறு ஆண்டுகளுக்கு மேலாயின என்பது நேயர்களுக்கு நினைவிருக்கும்.

ஸ்ரீ ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் அவர்கள் முதன் மந்திரியாயிருந்த காலத்தில் மழை பொய்த்திருந்த படியால், ஸ்ரீ ரெட்டியார் அவர்கள் "மக்களின் ஒழுக்கம் குன்றி விட்டது; அதனால் மழை பெய்யவில்லை" என்று பல பொதுக் கூட்டங்களில் எடுத்துக் கூறினார்.

காரணத்தை மட்டும் ஸ்ரீ ஓமந்தூர் ரெட்டியார் கூறினாரே தவிர, பரிகாரம் என்ன என்பதைத் தெளிவாக அவர் சொல்லவில்லை.

ராஜாஜி புது டில்லியில் கடைசியாக விடை பெற்றுக் கொண்டு சென்னைக்குத் திரும்பி வந்து விமான நிலையத்தில் இறங்கியவுடனேயே தமிழ் நாட்டில் தொடர்ந்து பல வருஷங்களாக மழை இல்லாமை பற்றித் தமது கவலையை வெளியிட்டார்.

சென்ற வருஷத்தில் முதன் மந்திரி பொறுப்பை ஒப்புக் கொண்டதிலிருந்து, "ஆண்டவனைப் பிரார்த்தியுங்கள்; மழை பொழிய வேண்டுமென்று பிரார்த்தியுங்கள்!" என்று ஓயாமல் சொல்லி வந்தார். "மற்றக் காரியங்களை யெல்லாம் மனிதனுடைய புத்தியைக் கொண்டு சாதிக்கலாம்; ஆனால் மழை பொழியும்படி மனிதனால் செய்ய முடியாது. அதற்குக் கடவுளைப் பிரார்த்திப்பதைத் தவிர வேறு வழி கிடையாது!" என்று கூறி வந்தார்.

அரசியல் கூட்டங்களை ஆஸ்திகப் பிரசாரக் கூட்டங்களாகச் செய்து வருகிறார் என்று அரசியல்வாதிகள் பலரும் புகார் செய்தார்கள்.

ஆனால் பொது மக்கள் ராஜாஜியின் வேண்டு கோளுக்குச் செவி சாய்த்தார்கள். அவருடைய வார்த்தையை நம்பினார்கள். மழை வேண்டிக் கடவுளைப் பிரார்த்தித்தார்கள்.

கோயில்களிலும், கூட்டங்களிலும், வீடுகளிலும், அவரவர்களுடைய உள்ளங்களிலும், தத்தம் இஷ்ட தெய்வங்களைப் பிரார்த்தனை செய்தார்கள்.

விநாயகர், சுப்பிரமணியர், இராமர், கிருஷ்ணன் முதலிய தெய்வங்களிடம் நம்பிக்கை யுள்ளவர்கள் அந்தந்த தெய்வங்களைப் பிரார்த்தித்தார்கள்.

முஸ்லிம்கள் அல்லாவையும், கிறிஸ்துவர்கள் பரமண்டலத்திலுள்ள பிதாவையும் எண்ணிப் பிரார்த்தனை செய்தார்கள்.

"ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" என்ற கொள்கையுடையவர்கள் அந்த ஒரே தேவனைப் பிரார்த்தனை செய்தார்கள்.

சிலர் வருண ஜபம் செய்தார்கள்; சிலர் விராட பர்வம் வாசித்தார்கள்; மற்றும் சிலர் மாரியம்ம னுக்கு விழா எடுத்தார்கள்.

சென்ற ஒரு வருடத்தில் தென்னாட்டு மக்க ளிடையே பிரார்த்தனை மனப்பான்மை பரவி யிருந்ததுபோல் பழைய ஆழ்வார்கள் — நாயன் மார்கள் காலத்திலே கூடப் பரவியிருந்ததில்லை.

மக்களுடைய பிரார்த்தனையின் பலனைக் கண் கூடாகப் பார்த்து வருகிறோம்.

இவ்வாண்டில் இரண்டு பருவ மழையும் அமோக மாகப் பெய்திருப்பதைக் காண்கிறோம்.

மேற்குக் கடற்கரையில் தென்மேற்குப் பருவ மழை பொழிந்து மேட்டூர்—பெரியாறு—பவானி தேக்கங்களில் தண்ணீர் நிறைந்து ததும்புகிறது.

வடகிழக்குப் பருவ மழையும் வழக்கத்துக்குச் சில தினங்களுக்கு முன்னாலேயே தொடங்கிப் பெய்திருக்கிறது.

ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு தமிழ் நாடு உண் மையிலேயே நீர்வளமுள்ள நாடாகக் காட்சி தரு கிறது. ஆறுகளிலும், வாய்க்கால்களிலும் தண் ணீர் கரையைத் தொட்டுக் கொண்டு ஓடுகிறது. பாலாற்றிலும் தென் பெண்ணையிலும் வெள்ளம் பொங்கி வருகிறது. ஏரிகளிலும் குளங்களிலும் ஓடைகளிலும் தண்ணீர் நிறைந்து அலை மோதிக் கொண்டு நிற்கின்றது.

ஆறு வருஷம் தொடர்ந்து மழையின்மையால் வறண்டு போய்க் கிடந்த ராமநாதபுரம்—வட ஆற்காடு மாவட்டங்கள் இன்று எங்கும் தண்ணீர் மயமாகக் காட்சி தருகின்றன.

ஆகையால், ராஜாஜியின் போதனைகளிலும் சாதனைகளிலும் பொது மக்கள் வேறு எதை மறந்தாலும், பிரார்த்தனையை மட்டும் மறக்க மாட்டார்கள் என்று நம்புகிறோம்.

தமிழகத்து அரசியல் நல்லபடியாக நடக் காலும் மறுபடியும் குட்டிச்சுவரானாலும், பொது மக்கள் நல்ல மழை பொழிந்து நாடு செழித்திருக் கச் செய்ய வேண்டும் என்று அவரவர்களுடைய இஷ்ட தெய்வங்களைப் பிரார்த்தனை செய்யத் தவற மாட்டார்கள் என்று நம்புகிறோம்.

அவரும் தொத்திக் கொண்டார்!



ஆந்திர மந்திரி சபையில் கிருஷிக்லோக் கட்சியின் பிரதிநிதி ஸ்ரீ லட்சண்ணா மந்திரிப் பதவி பெற்றார். இனிமேல் மந்திரி சபை விஸ்தரிப்பு இருக்காது என்று உதவிப் பிரதம மந்திரி கனம் சஞ்சீவி ரெட்டி தெரிவித்திருக்கிறார்.

பாரதம் செய்த பாக்கியம்

ஆசியாவின் அரசியல் ஜோதி என்றும், உலகில் சிறந்த ராஜதந்திரிகளில் ஒருவர் என்றும் அகில உலகமும் போற்றும் பண்டித ஜவாஹர்லால் நேருவுக்கு இந்த மாதத்தோடு அறுபத்து நாலு வயது பூர்த்தியாகிறது.

ஆடவர்களின் வயதை அவர்களுடைய தோற்றத்தைக் கொண்டு நிர்ணயிக்கக் கூடாது; அவர்களது உள்ள வலிமையைக் கொண்டே நிர்ணயிக்க வேண்டும் என்று ஒரு பிரமுகர் கூறியுள்ளார். தோற்றத்தில் இளைஞராக இருப்பவரின் உள்ளம் வலிவிழந்து விட்டால் அவரை உண்மையான இளைஞர் என்று சொல்வதற்கில்லை; தோற்றத்தில் வயோதிகராகத் தோன்றும் ஒருவரது உள்ளம் வஜ்ராயுதம் போல் இருக்குமாயின் அவரைக் கிழவர் என்றும் சொல்ல முடியாது என்பது தான் அந்தப் பிரமுகரின் கருத்து.

ஆனால் உள்ள வலிமையில் மாத்திரமல்ல, தோற்றத்தில் கூட பண்டித ஜவாஹர்லால் நேரு இன்னும் இளைஞராகவே இருப்பது அந்த மாபெரும் தலைவரின் தனிச் சிறப்பு ஆகும்; பாரத நாட்டின் பெரும் பாக்கியம் ஆகும்.

இந்தியர்கள் நிர்வாகத் திறமை யற்றவர்கள்; அவர்கள் தங்கள் நாட்டைத் தாங்களே ஆட்சி புரிவதற்குரிய பக்குவத்தை இன்னும் அடையவில்லை என்று பிரிட்டிஷார் சமீபகாலம் வரையில் கூறி வந்தார்கள். அவர்களின் கூற்றுக்கு அணுவளவும் ஆதாரமில்லை என்பது இந்தியா சுதந்திரம் பெற்ற ஒரு சில வருஷங்களுக்குள்ளேயே உலகம் அறிய வெளியாகி விட்டது.

இந்தியா சுதந்திரம் பெற்ற ஆறு ஆண்டுகளுக்குள் ஜவாஹர்லால்ஜியின் புகழ் அகில உலகிலும் வியாபித்திருக்கிறது; அவரது நிர்வாகத் திறமையை அன்னிய நாடுகளும் போற்றி வருகின்றன; ஆசிய நாடுகள் ஜவாஹர்லால்ஜியை ஆசியா முழுவதற்குமே தலைவராகக் கருதுகின்றன.

இருநூறு ஆண்டுகளாகச் சுதந்திரத்தை இழந்திருந்த பாரத நாட்டைச் சுதந்திரம் பெற்ற ஆறே வருஷங்களுக்குள் இவ்வளவு உன்னத நிலைக்குக் கொண்டு வந்த நமது அரும் பெரும் தலைவர் ஜவாஹர்லால்ஜியின் பிறந்த தினம் நவம்பர் மாதம் 14உ வருகிறது. மேற்படி தினத்தில் நேரு ஜெயந்தி வைபவத்தைக் குதூகலத்துடன் கொண்டாடுவோம். நேருஜி இன்னும் பல்லாண்டுகள் வாழ்ந்து இந்தியாவுக்குத் தொண்டு செய்து வர அருள் புரியும்படி இறைவனைப் பிரார்த்தனை செய்வோம்.

ஒரே வருஷத்தில்...!

மனிதரின் வாழ்க்கையில் ஒரு மணி நேரம் எப்படியோ, அப்படியே பெரிய பட்டணத்தின் வாழ்க்கையில் ஒரு வருஷத்தைக் குறிப்பிடலாம். அப்படியிருந்தும், அவ்வளவு குறுகிய காலத்துக்குள் ஒரு நகரின் முன்னேற்றத்துக்கான பல அரிய காரியங்களை ஒருவர் சாதிப்பதெனில், அது போற்றத்தக்க விஷயம் அல்லவா!

சென்னை மாநகர் மேயரின் பதவி காலம் ஒரு வருஷம்தான். அந்த ஓர் ஆண்டுக்குள் யாரும் உருவாக எதையும் சாதிக்க முடியாது; ஆகையால் மேயர் பதவி காலத்தை நீடிக்க வேண்டும் என்று சிலர் வற்புறுத்தி வருகிறார்கள். எனினும் உற்சாகம், உத்வேகம், ஆர்வம், சிரத்தை முதலியன வாய்க்கப் பெற்ற ஒருவர் ஒரே வருஷத்தில் பல நல்ல காரியங்களை நிறைவேற்றலாம் என்பது, சென்ற ஒரு வருஷ காலமாகச் சென்னை மேயர் பதவியைத் திறம்பட வகித்து வந்த ஸ்ரீ செங்கல்வராயன் அவர்களால் நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

இந்த வாரத்திலிருந்து மேயர் பதவியிலிருந்து விலகும் ஸ்ரீ டி. செங்கல்வராயன் காங்கிரஸ் மகா சபையிடம் தளராத பக்தி உள்ளவர்; நாவன்மை படைத்தவர்; கொள்கையில் உறுதியுடையவர். அவர் தாம் மேயர் பதவியிலிருந்த பன்னிரண்டு மாத காலத்துக்குள் நடமாடும் வைத்திய உதவிப் படை, அவசரகால நகர சுத்திப்படை, சாக்கடைத் திட்டம், சேரி அபிவிருத்தித் திட்டம், பிச்சைக்காரர் கஷ்ட நிவாரணத் திட்டம் முதலிய பல முக்கியமான திட்டங்களை உருவாக்குவதில் வெற்றி பெற்றார்.

ஸ்ரீ செங்கல்வராயன் பதவி ஏற்றபோது இருந்ததைக் காட்டிலும் இன்று சென்னைமாநகர் அதிக சுத்தமாகவும் சுபிட்சத்துடனும் விளங்குவதைக் குறித்து அவர் பெருமை அடையலாம்.

ஸ்ரீ செங்கல்வராயன் மேன்மேலும் புகழுடன் பல பொறுப்புள்ள பதவிகளை வகித்து, தேசத்துக்குத் தொண்டு புரிந்து வருவாராக.

நவராத்திரி விழா!

தியாகராயநகர் சாரதா ஸமாஜத்தினர் நவராத்திரி விழாவைச் சிறப்பாகக் கொண்டாடினார்கள். ஒவ்வொரு தினமும் பல பெரியார்களின் சமயப் பிரசங்கங்களும், தேவி பூஜையும் நடைபெற்றன. ஸ்ரீ முருகதாஸரின் நாம சங்கீர்த்தனத்தை ஆயிரக் கணக்கான மக்கள் கேட்டுப் பரவசமடைந்தார்கள். கடைசி நாளில் ஆயிரக் கணக்கான ஏழைகளுக்கு அன்னதானம் செய்யப்பட்டது. இந்த விழாவை இவ்வளவு நல்ல முறையில் சிறப்பாக நடத்துவதற்குக் காரணமாயிருந்த ஸ்ரீ முருகதாஸர், ஸ்ரீ ஆர். நாராயணசாமி, ஸ்ரீ ஆக்கூர் அனந்தாச்சாரியார் ஆகியவர்களைப் பாராட்டுகிறோம்.



பொன்னியின் செல்வன்

கல்கி

அத்தியாயம் 52

விடுதலைக்குத் தடை

மணிமேகலைக்கு எப்படி ஆறுதல் கூறுவது என்று குந்தவைப் பிராட்டி யோசித்தாள். அவளுடைய உள்ளம் தாங்க முடியாத துயரத்தினாலும் கவலையினாலும் குழம்பி இருந்தபடியால், யோசனை ஒன்றும் தோன்றவில்லை.

அச்சமயத்தில் அரண்மனை வாசலில் பெரியதொரு கோஷம் எழுந்தது.

"வானதி! அது என்னவென்று பார்! சக்கரவர்த்தியின் மனோ நிலையையும் உடல் நிலையையும் கூட இந்த ஜனங்கள் மறந்து விடுகிறார்கள்! இப்படி ஆரவாரம் செய்கிறார்கள்!" என்றாள்.

வானதி அரண்மனையின் முகப்பில் சென்று எட்டிப் பார்த்துவிட்டு உடனே அவசரமாகத் திரும்பி வந்தாள். மிகுந்த பரபரப்புடன், "அக்கா! அவர் வந்து கொண்டிருக்கிறார்!" என்றாள்.

"அவர் என்றால் யார்?" என்று புன்னகையுடன் கேட்டாள் குந்தவை.

"அவர்தான், அக்கா! உங்கள் தம்பி!"

உடனே குந்தவை, "சரி; அப்படியானால் நீ இந்தப் பெண்ணைச் சற்று அப்பால் அழைத்துக் கொண்டு போ!" என்று சொன்னாள்.

வானதி தயங்குவதைப் பார்த்துவிட்டு, "சீக்கிரம் போ! உன்னைப் பார்க்காமல் அவன் போய்விட மாட்டான். நான் உனக்குச் சொல்லி அனுப்புகிறேன்" என்றாள் இளைய பிராட்டி குந்தவை.

வானதி மணிமேகலையின் கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு அப்பால் சென்றதும், பொன்னியின் செல்வன் அந்த இடத்துக்கு வந்தான்.

"தம்பி! இது என்ன? நீ போகுமிடமெல்லாம் ஜனங்கள் கூடிக் கூச்சல் போடுகிறார்கள் என்று கேள்விப் பட்டேன். அவர்களை அரண்மனை வாசலுக்கே அழைத்துக் கொண்டு வந்து விட்டாயே? மனம் புண்ணாகி வேதனையில் ஆழ்ந்திருக்கும் சக்கரவர்த்தியின் காதில் இந்த ஜனங்களின் கூச்சல் விழுந்தால் அவருக்கு எவ்வளவு கஷ்டமாயிருக்கும்?" என்றாள்.

"நான் என்ன செய்யட்டும், அக்கா! எனக்கு மட்டும் மனவேதனை இல்லாமலா இருக்கிறது? கரிகாலருடைய வீரத் திருமேனி எரிந்து சாம்பராவதற்குள்ளே இந்த ஜனங்கள் 'அருள்மொழிக்குப் பட்டம்' என்று கூச்சல் போடத் தொடங்கி விட்டார்கள். இந்தக் கூச்சல் எனக்குக் கர்ண கடூரமாக இருக்கிறது. ஒவ்வொரு சமயம் ஒருவரிடமும் சொல்லிக் கொள்ளாமல் ஓடிப் போய்விடலாமா என்று எண்ணுகிறேன். அப்படிச் செய்தால் குழப்பம் இன்னும் அதிகமாகி விடுமோ என்றும் பயமாயிருக்கிறது. மதுராந்தகரும் சிற்றரசர்களும் சூழ்ச்சி செய்து என்னையும் கொன்று விட்டார்கள் என்று ஜனங்கள் நம்பினாலும் நம்புவார்கள். அதனால் ஏற்படக் கூடிய விபரீதங்களை நினைத்தால் என் உள்ளம் திடுக்கிட்டு நடுங்குகிறது......"

"ஆம், ஆம்! அம்மாதிரி ஒரு காரியம் செய்து விடாதே! அந்த எண்ணத்தையே விட்டுவிடு! ஜனங்கள் நினைப்பது ஒருபுறம் இருக்கட்டும். சக்கரவர்த்தியின் நெஞ்சு நிச்சயமாகப் பிளந்து போய் விடும். மந்தாகினி தேவியையும், கரிகாலனையும் நினைந்து நினைந்து அவர் துயரப்பட்டுக் கொண்டிருப்பது போதும்!" என்றாள் இளைய பிராட்டி.

"ஆகையினால்தான் நான் ஓடிப்போகத் தயங்குகிறேன். எப்படியாவது ஜனங்களுக்கும் வீரர்களுக்கும் நல்ல வார்த்தை சொல்லி மதுராந்தகருக்குப் பட்டம் கட்ட அவர்களுடைய சம்மதத்தைப் பெறுவதற்குப் பார்க்கிறேன். நான் பேசும்போதெல்லாம் ஜனங்களும் வீரர்களும் சாவதானமாகக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். நான் இப்பால் திரும்பியதும் உடனே பழையபடி கோஷம் போடத் தொடங்கி விடுகிறார்கள். நான் அவர்களுடைய மனத்தை மாற்றி விட்டதாக நினைத்துக் கொண்டு இப்பால் வருகிறேன். உடனே திருக்கோவலூர்ப் பாட்டனும் கொடும்பாளூர் வேளானும் போய்ப் படை வீரர்களுடைய மனத்தை மாற்றி விடுகிறார்கள்! அக்கா! அவர்களைப் பற்றி உன்னிடம் சொல்லத்தான் வந்தேன். மலையமானையும் வேளாரையும் நீ அழைத்துப் பேசவேண்டும். நான் எது சொன்னாலும் அவர்கள் காதில் வாங்கிக் கொள்வதில்லை. நீ சொன்னால் ஒரு வேளை கேட்பார்கள்......"

"நானும் எவ்வளவோ சொல்லிப் பார்த்து விட்டேன், தம்பி! அவர்கள் பிடிவாதத்தை மாற்ற முடியவில்லை. வேறு ஏதேனும் உபாயத்தைத்தான் பார்க்க வேண்டும்......"

"அக்கா! வேளாரிடம் நீ ஒரு செய்தியைக் கூறியிருக்க மாட்டாய். அதைச் சொன்னால் அவர் ஒருவேளை எனக்குப் பட்டம் கட்டுவதில் இவ்வளவு பிடிவாதமாக 'இருக்க மாட்டார்."

"அது என்ன, தம்பி!"

"உன் தோழி வானதி செய்திருக்கும் சபதத்தைப் பற்றிக் கூற வேண்டும். அவள் என்னோடு சிங்காதனத்தில் அமருவதில்லை என்று சத்தியம் செய்திருக்கிறாள் அல்லவா? அதைப் பற்றிச் சொன்னால், பெரிய வேளாருக்கு எனக்குப் பட்டம் கட்டுவதில் அவ்வளவு சிரத்தை இல்லாமல் போய் விடும்."

"தம்பி! அதை நான் அவரிடம் சொல்லவில்லை யென்றா நினைத்தாய்? சொல்லியாகி விட்டது. அதற்கு அவர் என்ன சொல்கிறார், தெரியுமா! 'ஒரு சிறு பெண்ணின் மூடத்தனத்துக்காக ஒரு பெரிய ராஜ்யத்தைப் பாழாக்கச் சொல்கிறீர்களா? வானதி இல்லாவிட்டால், இந்தப் பாரத தேசத்தில் நூறு இளவரசிகள் அருள்மொழிக்கு மாலையிடக் காத்திருக்கிறார்கள். சிங்காதனம் ஏறச் சொன்னாலும் ஏறுவார்கள்; கழுமரத்தில் ஏறச் சொன்னால் கூட ஏறுவார்கள்!' என்று சேநாதிபதி கூறிவிட்டு வானதியை ஒரு கோபப் பார்வை பார்த்தார். அந்தப் பெண் நடு நடுங்கிப் போய் விட்டாள்!"

அருள்மொழி வர்மன் புன்னகை புரிந்து, "நல்ல வேளையாக அப்பொழுது மூர்ச்சையாகிக் கீழே விழுந்து விடவில்லையே!" என்று சொல்லிக் கொண்டே சுற்று முற்றும் பார்த்தான்.

"வானதியை ஒரு காரியமாக அனுப்பியிருக்கிறேன்" என்றாள் இளையபிராட்டி.

"அக்கா! நீயும் வானதியும் என் கட்சியில் உறுதியாக இருந்தால் ஒரு மாதிரி சமாளிக்கலாம். நாம் இருவரும் சக்கரவர்த்தியிடம் செல்வோம். சக்கரவர்த்தியின் கண்டிப்பான கட்டளைக்குத்தான் இந்தக் கிழவர்கள் இருவரும் கீழ்ப் படிவார்கள்......"

"அதற்கும் ஓர் இடையூறு இருக்கிறதே, தம்பி! செம்பியன் மாதேவி குறுக்கே நிற்கிறார்களே? நாம் சொல்வதற்கு விரோதமாக அவர் பிடிவாதமாகச் சொன்னால், நம் தந்தைதான் என்ன செய்வார்! அவருடைய மனதே பேதலித்துப் போனாலும் போய் விடும். ஆகையால் இது விஷயமாகச் சக்கரவர்த்தியைத் தொந்தரவு செய்யவும் எனக்குப் பயமாயிருக்கிறது."

"அப்படியானால் நாம் இருவரும் சேர்ந்து செம்பியன் மாதேவியைத் தான் பிரார்த்தனை செய்து கேட்டுக் கொள்ள வேண்டும். அவருடைய மனத்தை மாற்ற முயல வேண்டும். மதுராந்தகருக்குப் பட்டம் கட்டக்கூடாது என்று அவர் பிடிவாதம் பிடிப்பதற்குக் காரணம் நாம் நினைத்ததுதான். சற்று முன்னால் முதன் மந்திரி அநிருத்தர் வீட்டில் அவரைச் சந்தித்தேன். மதுராந்தகரிடம் இன்றைக்குத்தான் அவர் உண்மையைக் கூறினார். 'நீ என் மகன் அல்ல' என்று சொன்னதும், நம் சித்தப்பாவின் முகத்தை நீ பார்த்திருக்க வேண்டும். களை சொட்டும் அவருடைய அழகிய முகம் கோர ராட்சதனின் முகம்போல் மாறி விட்டது. நல்லவேளையாக அந்தச் சமயம் நான் போய்ச் சேர்ந்தேன்......"

"அப்படியா? அப்புறம் என்ன நடந்தது?" என்றாள் குந்தவை.

"பாட்டியின் முன்னால் கைகூப்பி நின்று, 'அம்மா! மதுராந்தகர் தங்கள் வயிற்றில் பிறந்த மகன் அல்ல என்பதை நானும் அறிவேன். அதனால் என்ன? தாங்கள் அருமையாக வளர்த்த புதல்வர்



தங்கள் புதல்வரே அல்லவா? ஆகையால் அவர்தான் மகுடம் சூட்டிக் கொள்ள வேண்டும்' என்றேன்......"

"அதற்குப் பெரிய பிராட்டி செம்பியன்மாதேவி என்ன பதில் கூறினார்?"

"அவர் பதில் கூறுவதற்கு முன்னால் திரும்பி வந்து விட்டேன்......"

"தம்பி! மதுராந்தகர் செம்பியன் மாதேவியின் புதல்வர் இல்லாவிட்டாலும், வேறு வகையில் அவருக்கு இந்தச் சோழ சிம்மாதனத்துக்கு உரிமை உண்டு என்று நீ சொல்லவில்லையா? அவரும் நம் தந்தையின் புதல்வர், உன் தமையன் என்று கூறவில்லையா?"

"சொல்லவில்லை, அக்கா!"

"ஏன், தம்பி! அதனால் நம் தந்தைக்குக் களங்கம் உண்டாகும் என்று அஞ்சினாயா? அல்லது பின்னால் சொல்லிக் கொள்ளலாம் என்று எண்ணினாயா?"

"இல்லை, அக்கா! நீயும் நானும் இத்தனை நாளும் அதைப் பற்றிக் கொண்டிருந்த நம்பிக்கை ஆதாரமற்றது என்று அறிந்தேன். அதனால்தான் அதைப்பற்றி ஒன்றும் சொல்ல வில்லை......"

"அது எப்படி, தம்பி!"

"ஆம், அக்கா! முதன்மந்திரி அநிருத்தருக்கு அந்தச் செய்தியெல்லாம் நன்றாய்த் தெரியும். நம் தந்தை ஈழத் தீவிலிருந்து திரும்பி வந்து இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு மதுராந்தகரும் நந்தினியும் இரட்டைக் குழந்தைகளாகப் பிறந்தார்களாம். ஆகையால், அவர்கள் நம் உடன் பிறந்தவர்களாக இருக்க முடியாதல்லவா?" என்றான் அருள்மொழி.

குந்தவை சிறிது நேரம் யோசனையில் ஆழ்ந்திருந்து விட்டு, "அருள்மொழி! இது தெரிந்தும் நீ மதுராந்தகருக்குப் பட்டத்தைக் கொடுப்பதற்கு விரும்புகிறாயா?" என்று கேட்டாள்.

"ஆம், அக்கா! எப்படியும் மதுராந்தகர் மந்தாகினி தேவியின் வயிற்றில் பிறந்த புதல்வர். செம்பியன்மா தேவி எடுத்து வளர்த்த புதல்வர். எனக்கோ இராஜ்யம் ஆளுவதில் சிறிதும் ஆசை கிடையாது! உன் தோழி வானதிக்கும் சிங்காதனம் ஏறும் விருப்பம் இல்லை......"

"தம்பி! இராம கதையில் பரதர் தமக்குக் கிடைத்த இராஜ்யத்தை வேண்டாமென்று சொல்லி இராமரை அழைத்துவரப் போனார். குஹன் இதை அறிந்ததும் 'ஆயிரம் இராமர் உனக்கு இணையாக மாட்டார்' என்று கூறினானாம். 'ஆயிரம் பரதர்கள் உனக்கு இணையாக மாட்டார்கள்' என்று சோழ நாட்டு மக்கள் சொல்லப் போகிறார்கள்......"

"பிற்பாடு அவர்கள் எது வேணுமானாலும் சொல்லட்டும். இச் சமயம் என்னை விட்டால் போதும் என்றிருக்கிறது. அக்கா! கடைசியாக, நான் ஒரு யுக்தி கண்டு பிடித்து மனதிற்குள் வைத்திருக்கிறேன். அதைப்பற்றி உன் அபிப்பிராயத்தை அறிந்து கொள்ள விரும்புகிறேன்......"

"அது என்ன யுக்தி, தம்பி!"

"குடந்தைக்கு அருகில் பழுவேட்டரையர்கள் படை திரட்டிச் சேர்த்து வருகிறார்கள் என்பது தெரியும் அல்லவா...?"

"ஆமாம்; அவர்களுடன் பல சிற்றரசர்களும் வந்து சேர்ந்து கொண்டிருக்கிறார்கள் என்றும் தெரியும். ஆனால் அது மிகவும் சிறிய படை என்று கேள்விப் படுகிறேன். நம் பாட்டனாரும் வேளாரும் இங்கே வைத்திருக்கும் படையோடு போனால் மூன்றே முக்கால் நாழிகையில் அந்தப் படையை அழித்து விடுவோம் என்று சொல்கிறார்களே?"

"அப்படி ஒன்றும் நேராமலிருப்பதற்குத்தான் யுக்தி செய்திருக்கிறேன். ஒரு

வருக்கும் தெரியாமல் நான் மட்டும் ஒரு குதிரைமேல் ஏறிக் கொண்டு போய்ப் பழுவேட்டரையர்களிடம் என்னை ஒப்புக் கொடுத்துவிடப் போகிறேன். அவர்கள் என்னைச் சிறைப்படுத்தி விடுவார்கள். அப்புறம் நம் பாட்டன் மலையமானும் சேநாதிபதி பெரிய வேளாரும் ஒன்றும் செய்ய முடியாது அல்லவா?"

குந்தவை மூக்கில் விரல் வைத்து அதிசயித்து விட்டு, "அற்புதமான யுக்திதான், தம்பி! ஆனால் அதிலும் ஒரு சிறிய அபாயம் இருக்கிறது!" என்றாள்.

"அது என்ன, அக்கா?"

"நீ பழுவேட்டரையர்கள் திரட்டும் படையை அடைந்ததும், அந்தப் படையில் உள்ள வீரர்கள் என்ன செய்வார்கள், தெரியுமா? 'அருள்மொழி வர்மர் வாழ்க!' 'பொன்னியின் செல்வருக்கே பட்டம்!' என்று கூச்சலிடத் தொடங்குவார்கள். உன்னைச் சிறை வைப்பதற்குப் பதிலாகப் பழுவேட்டரையர்களைப் பிடித்துச் சிறை வைத்தாலும் வைத்து விடுவார்கள்!"

அருள்மொழி வர்மர் சிறிது நேரம் திகைத்துப் போய் நின்றார்.

"ஆமாம்; அந்த அபாயம் ஏற்படலாம் என்று எனக்குத் தெரியாமற் போயிற்று. நல்ல வேளையாகத் தாங்கள் எச்சரித்தீர்கள். இந்தத் தஞ்சைபுரிக் கோட்டைக்குள் மாறு வேடம் பூண்டு வந்தது போல் அங்கேயும் மாறு வேடம் புனைந்து போகிறேன்..."

"என்னதான் மாறு வேடம் பூண்டு போனாலும் எத்தனை நேரம் உண்மை வெளிப்படாதிருக்கும், தம்பி! ஒருவருக்குத் தெரிந்தால் போதுமே? ஒரு நாழிகைக்கெல்லாம் எல்லாருக்கும் தெரிந்து விடும். அக்கம் பக்கத்திலுள்ள ஜனங்களும் வந்து கூடி விடுவார்களே!"

அருள்மொழியின் முகம் சுருங்கிற்று.

"அக்கா! பின்னர் என்னதான் என்னைச் செய்யச் சொல்கிறீர்கள்? இந்த உலகத்தில் எதற்காக நான் பிறந்தேன்? பிறருக்குத் தொல்லை கொடுப்பதற்காகத்தானா? காவேரியில் நான் விழுந்து முழுகிய போதே இறந்து போயிருக்கக் கூடாதா!" என்றான்.

"தம்பி! யார் கண்டார்கள்? ஜோதிடர்களும் ரேகை சாஸ்திரிகளும் கூறியதெல்லாம் உண்மைதானோ, என்னமோ! நீ வேண்டாம் என்று தள்ளினாலும் இராஜ்ய லக்ஷ்மி உன்னை வந்து அடைவாள் போலிருக்கிறது. நீ பிறந்த வேளை அப்படி இருக்கிறது!"

"அக்கா! தாங்களும் நம் பாட்டன் மலையமானோடு சேர்ந்து கொண்டீர்களா? தங்கள் மனமும் மாறி விட்டதா?"





"பாட்டன் போதனையினால் என் மனம் சலிக்கவில்லை, தம்பி! ஆனால் அண்ணன் கரிகாலனுடைய ஓலையினால் கொஞ்சம் என் மனமும் மாறித்தான் இருக்கிறது. அவன் கண்ட கனவுகளையெல்லாம் நீ காரியத்தில் நிறைவேற்றுவாய் என்று எழுதியிருக்கிறான். அதைப் படித்ததும்......" என்று கூறியபோது குந்தவையின் கண்களில் கண்ணீர் ததும்பிக் குரலும் தழுதழுத்தது.

பொன்னியின் செல்வன் ஆதித்த கரிகாலனுடைய ஓலையை வாங்கிப் படித்தான். அவனுடைய கண்களிலேயிருந்தும் கண்ணீர் பொழிந்தது.

ஓலையை அவன் படித்து மூடியதும் குந்தவை கூறினாள்:—"தம்பி! நீ என்ன நினைத்துக் கொண்டாலும் சரிதான். என் மனத்தில் உள்ளதைச் சொல்லி விடுகிறேன். மதுராந்தகனும் நந்தினியும் நம் சோழ குலத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல என்று தெரிந்து கொண்டதில் என் மனம் ஒருவாறு நிம்மதி அடைந்திருக்கிறது. சோழ குலத்தில் பிறக்காத ஒருவனைச் சோழ சிங்காதனம் ஏறச் செய்வதிலும் எனக்கு விருப்பம் இல்லை. செம்பியன்மாதேவியிடமும், மந்தாகினி தேவியிடமும் எனக்கு எவ்வளவு பக்தி இருந்தாலும், அவ்வளவு தூரம் விட்டுக் கொடுக்க என்னால் முடியவில்லை. மதுராந்தகனுக்குப் பட்டம் கட்டுவதை இனி ஒரு கணமும் என்னால் சகித்துக் கொள்ளவே முடியாது......"

"அக்கா! அக்கா! இது என்ன சொல்கிறீர்? செம்பியன் மாதேவி முன்னாலும், அநிருத்தர் முன்னாலும், மதுராந்தகன் முன்னாலும் 'எனக்குப் பட்டம் வேண்டாம்' என்று சொல்லிவிட்டு வந்தேன். ஆயிரமாயிரம் போர் வீரர்கள் முன்னாலும் மகாஜனங்களின் முன்னாலும் அவ்விதமே சொல்லி விட்டு வந்திருக்கிறேன். இப்போது என் வார்த்தையை மீறச் சொல்கிறீர்களா?" என்று கேட்டான் அருள்மொழி வர்மன்.

"தம்பி! உனக்கும் எனக்கும் நம் குல தெய்வமான துர்க்கா பரமேசுவரிதான் வழி காட்ட வேண்டும். உனக்கு என்ன யோசனை சொல்லுவது என்று எனக்கும் தெளிவாகத் தெரியவில்லை. ஆதித்த கரிகாலன் என் வார்த்தையைக் கேட்டிருந்தால், இந்தமாதிரி நிலைமை ஏற்பட்டே இராது! அந்த மகா வீரனுக்கு இந்தக் கதியா நேர்ந்திருக்க வேண்டும்?" என்று குந்தவை புலம்பினாள்.

"இந்த ஓலை தங்களுக்கு எப்படிக் கிடைத்தது, அக்கா? யார் கொண்டு வந்தார்கள்? எப்போது தங்கள் கைக்கு வந்தது? ஏன் முன்னாலேயே சொல்லவில்லை?" என்றான் அருள்மொழி.

"சற்று முன்னாலேதான் எனக்கு வந்தது. சம்புவரையரின் மகள் மணிமேகலை கொண்டு வந்து கொடுத்தாள்......"

"ஆம், ஆம்; மணிமேகலையைப் பற்றி நானும் கேள்விப்பட்டிருக்கிறேன். அவளிடம் இந்த ஓலை எவ்விதம் வந்தது?"

"அவளே இருக்கிறாள், தம்பி! நீயே நேரில் கேட்டுத் தெரிந்து கொள்! அவள் பேச்சை எவ்வளவு தூரம் நம்புவது என்று எனக்கே தெரியவில்லை" என்றாள் இளைய பிராட்டி குந்தவை.

அருள்மொழி வர்மன் உள்ளே வந்தவுடனேயே, மணிமேகலையை அவன் முன்னால் நிறுத்தி வந்தியத்தேவனைப் பற்றிப் பிரஸ்தாபிக்கச் சொல்லுவதென்று இளைய பிராட்டி தீர்மானித்திருந்தாள். இத்தனை சம்பாஷணைகளுக்கு மத்தியிலும் அவளுடைய உள் மனம் வந்தியத்தேவர் பாதாளச் சிறையில் இருப்பது பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்தது. அவரைப் பற்றித் தானே பேச்சு எடுக்கக் குந்தவை விரும்பவில்லை. மணிமேகலையை அழைப்பதற்கு ஒரு தக்க சந்தர்ப்பத்தை எதிர்நோக்கியிருந்தாள். அந்தச் சந்தர்ப்பம் இப்போது கிடைத்ததும், வானதியைக் கூவி அழைத்து, மணிமேகலையையும் அழைத்து வரும்படி கூறினாள்.

மணிமேகலை வரும்போதே கண்ணீர் ததும்பிய சோக மயமான முகத்துடன் வந்தாள். இதைப் பார்த்த பொன்னியின் செல்வன் அவள் துயரப்படுவதற்குக் காரணமிருக்கிறது என்று எண்ணினான்.

"தம்பி! இந்தப் பெண்தான் மணிமேகலை. ஓலையை இவள்தான் கொண்டு வந்தாள். இது எப்படி இவளிடம் வந்தது என்று நீயே கேட்டுக் கொள்!"

"சகோதரி! எங்கள் தமையன் கடைசியாக எழுதிய இந்த ஓலையை நீ கொண்டு வந்து பத்திரமாக ஒப்புவித்தாய். இதற்காக உன்னிடம் நாங்கள் என்றைக்கும் நன்றி செலுத்துவோம்......!" என்று மேலே அருள்மொழி வர்மன் தொடர்வதற்குள்ளே, மணிமேகலை திடீரென்று அவன் முன்னால் விழுந்து வணங்கினாள்.

"இளவரசே! பொன்னியின் செல்வ! தாங்கள் இப்போது சொன்ன வார்த்தை சத்தியமா? என்னிடம் தாங்கள் நன்றி செலுத்துவது உண்மையானால்......"

இவ்வாறு சொல்லிவிட்டு மேலே பேச முடியாமல் மணிமேகலை விம்மி விம்மி அழத் தொடங்கினாள்.

"அக்கா! இது என்ன? இந்தப் பெண் எதற்காக இப்படி விம்மி அழுகிறாள்? ஒரு வேளை இவளுடைய வீட்டில் நம் தமையன் இறக்க நேர்ந்ததே என்று வருந்துகிறாளா?" என்றான்.

"இல்லை, தம்பி! இவள் மனத்தில் இருப்பது வேறொரு காரியம். மணிமேகலை! என்னிடம் கூறியதை இளவரசரிடமும் சொல்லு!" என்று குந்தவைப் பிராட்டி அவளைத் தைரியப் படுத்தினாள்.

"ஐயா! தங்கள் தமையனைக் கொன்ற பாவி நான்தான். என்னைப் பாதாளச் சிறையில் போட்டு விட்டு அவரை விடுதலை செய்யுங்கள்!" என்று அழுது கொண்டே கூறினாள்.

அருள்மொழி வர்மன் திகைப்புடன் குந்தவையைப் பார்த்து, "அக்கா! இவள் என்ன சொல்லுகிறாள்? இந்தப் பெண்ணுக்குப் பைத்தியம் பிடித்து விட்டதா, என்ன?" என்று கேட்டான்.

"இவளுக்கு இன்னும் பைத்தியம் பிடிக்கவில்லை, தம்பி! ஆனால், சீக்கிரத்தில் வல்லத்து இளவரசரைப் பாதாளச் சிறையிலிருந்து விடுதலை செய்யாவிட்டால் இவளுக்குப் பைத்தியம் பிடித்தாலும் பிடித்து விடும்!" என்றாள்.

"என்ன? என்ன? யார் பாதாளச் சிறையில் இருக்கிறது?" என்று வியப்புடன் கேட்டான்.

"ஈழ நாட்டுக்கு நான் ஓலை கொடுத்து அனுப்பிய வாணர் குல வீரரை அடியோடு மறந்து விட்டாயா, தம்பி!"

நெடுங் கனவிலிருந்து அப்பொழுது தான் விழித்து எழுந்து இவ்வுலக நினைவு வந்தவனைப்போல் அருள்மொழி வர்மன் ஒரு நிமிட நேரம் தோற்ற மளித்தான்.

தஞ்சைக் கோட்டைக்குள் அவன் பிரவேசித்ததிலிருந்து ஒன்றன் பின் ஒன்றாக நடந்த சம்பவங்கள் அவனுடைய கவனத்தை முழுதும் கவர்ந்திருந்தன. கரிகாலருடைய மரணச் செய்தி வந்த பிறகு, சோழ சிங்காதனத்தில் மதுராந்தகரை ஏறச் செய்யும் மார்க்கத்தைப் பற்றிச் சிந்திப்பதிலேயே அவனுடைய உள்ளம் முழுதும் ஈடுபட்டிருந்தது.

வந்தியத் தேவனைப் பற்றி உண்மையிலேயே அவன் மறந்து விட்டிருந்தான்.

இப்போது அவன் பெயரைக் கேட்டதும் ஒரு துள்ளுத் துள்ளி, "யார்? என்னுடைய அருமை நண்பர் வந்தியத் தேவரா பாதாளச் சிறையில் இருக்கிறார்? எதற்காக? யார் அவரைச் சிறையில் அடைத்தது?" என்று கேட்டான்.

மணிமேகலை கூறிய விவரங்களைக் குந்தவை அவனுக்கு எடுத்துக் கூறினாள்.

எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டு இருந்த பொன்னியின் செல்வன், "அக்கா! என்னைப் போன்ற நன்றி கெட்டவன் யாருமே இருக்க முடியாது. வாணர் குலத்து வீரரைப் பற்றி நான் விசாரிக்காமலே இருந்து விட்டேன். அது என் குற்றந்தான்! அவரைப் பாதாளச் சிறையில் அடைக்கத் துணிந்தவர்கள் என்னைவிடப் பெரிய குற்றவாளிகள். நம் தமையனிடம் அவருக்கு எவ்வளவு பக்தி உண்டு என்பதை நான் அறிவேன். கரிகாலரின் மரணத்துக்கு அவரைப் பொறுப்பாளியாக்கத் துணிந்தவர்கள் யார்? இது என்ன மூடத்தனம்? அவரைத் தப்புவிப்பதற்காக இந்தப் பெண் தன் பேரில் குற்றம் சுமத்திக் கொள்வது நமக்கெல்லாம் ஒரு பாடங் கற்பிப்பது போலிருக்கிறது. இந்தப் பெண்ணைப் பார்க்கவே எனக்கு வெட்கமாக இருக்கிறது. மற்றக் காரியங்கள் அப்புறம் ஆகட்டும். இப்போதே பாதாளச் சிறைக்குச் சென்று வந்தியத்தேவரை விடுவித்துக் கொண்டு வருகிறேன். சம்புவரையர் மகளுக்கு நீ தேறுதல் கூறு!" என்று சொல்லி விட்டுத் திரும்பி, விடுவிடுவென்று நடந்தான்.

அவன் வாசற்படியை அடைந்த போது, அங்கே திடீரென்று திருக்கோவலூர் மலையமானும் கொடும்பாளூர் வேளாரும் தோன்றினார்கள்.


அவர்களுடைய தோற்றமே இளவரசரின் மனத்தில் ஒருவித ஐயத்தை உண்டு பண்ணியது.

பெரிய வேளார் தம் கையில் கொண்டு வந்திருந்த வேலை வாசற்படியின் குறுக்கே வைத்து இளவரசரைத் தடுக்கும் பாவனையில் நின்றார். அவருக்குப் பின்னால் மலையமானும் கையில் பிடித்திருந்த கத்தியைக் கீழே ஊன்றிய வண்ணம் இளவரசர் மேலே போவதைத் தடுப்பதற்கு ஆயத்தமாக நின்றார்.

பொன்னியின் செல்வர் பெரும் வியப்புடனும் சிறிது கோபத்துடனும் "சேனாதிபதி? இது என்ன? என்னைக் கூடச் சிறைப் படுத்தப் போகிறீர்களா?" என்று கேட்டார்.

"இளவரசே! இப்போது பாதாளச் சிறைக்குப் போகாமல் தங்களைத் தடை

ஏறினால் இறங்குவாரோ?



திருவாங்கூர் - கொச்சி ராஜ்யப் பிரஜா - சோஷலிஸ்டுக் கட்சி தேர்தலில் மட்டுமில்லாது தங்களுடன் கூட்டு மந்திரி சபை அமைப்பதிலும் ஒத்துழைக்க முன்வர வேண்டுமென்று கம்யூனிஸ்டுக் கட்சி கோருகிறது.

செய்கிறோம். அவசியம் நேர்ந்தால் சிறைப்படுத்தவும் செய்வோம்!" என்றார் பூதி விக்கிரம கேசரி.

அவர் கூறியது உண்மையாகவா, வேடிக்கையாகவா என்று பொன்னியின் செல்வருக்கு விளங்கவில்லை. ஆனால் வேடிக்கையைப் பொறுத்துக் கொள்ளும் மனோ நிலையும் அச்சமயம் அவருக்கு இல்லை. ஆகையால் முன்னைவிடக் கோபமான குரலில், "எந்த அதிகாரத்தைக் கொண்டு என்னைத் தடை செய்ய முன் வந்தீர்கள்?" என்றார்.

"தாங்கள் எந்த அதிகாரத்தைக் கொண்டு பாதாளச் சிறையில் உள்ளவனை விடுதலை செய்யப் போகிறீர்கள்?" என்றார் பெரிய வேளார்.

"சேநாதிபதி! எனக்கு அந்த அதிகாரம் இல்லையா? நான் யார் என்பதை மறந்து விட்டீர்களா? அல்லது தங்களைத் தாங்களே மறந்து விட்டீர்களா?"

"என்னை நான் மறக்கவும் இல்லை; தாங்கள் யார் என்பதை மறக்கவுமில்லை. நான் தஞ்சைக் கோட்டைக்கு இன்று தளபதி. ஆகையால் பாதாளச் சிறைக்குக் காவலன். தாங்கள் சக்கரவர்த்தியின் திருக்குமாரர்; பொன்னியின் செல்வர். ஆயினும் தங்கள் தமையனைக் கொன்றதாகக் குற்றம் சாட்டிப் பாதாளச் சிறையில் வைக்கப்பட்டவனை விடுதலை செய்யத் தங்களுக்கு அதிகாரம் கிடையாது. சக்கரவர்த்திக்குத்தான் அந்த அதிகாரம் உண்டு; அல்லது சக்கரவர்த்தியின் ஸ்தானத்தில் முடி சூட்டிக் கொள்ளப் போகிறவருக்கு அந்த அதிகாரம் உண்டு. தாங்களோ சோழ சிங்காதனத்தில் ஏறப்போவதில்லையென்று பறைசாற்றிக் கொண்டு வருகிறீர்கள். ஆகையால் சக்கரவர்த்தியின் கட்டளையின்றிப் பாதாளச் சிறையிலிருந்து யாரையும் விடுவிக்க முடியாது!" என்றார் கொடும்பாளூர்ப் பெரிய வேளாராகிய சேநாதிபதி பூதி விக்கிரம கேசரி.

"குழந்தாய்! வேளார் கூறியது உண்மையான வார்த்தை. சின்னப் பழுவேட்டரையன் ஓடிப் போன படியால் பெரிய வேளாரைத் தஞ்சைக் கோட்டைத் தளபதியாகச் சக்கரவர்த்தி நியமித்திருக்கிறார். ஆகையால் பாதாளச் சிறையிலிருந்து யாரையும் விடுவிக்க உனக்கு அதிகாரம் இல்லை!" என்று மலையமான் ஆமோதித்தார்.

பொன்னியின் செல்வர் அவர்களுக்கு என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் மௌனமாக நின்றார்.

மணிமேகலையின் விம்மல் சத்தம் மட்டும் கேட்டுக்கொண்டிருந்தது. (தொடரும்)

குற்றாலத்தில் கம்பர் அரங்கேற்றம்

எஸ். வி. எஸ்.

ஏறக்குறைய ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் கவிச் சக்கரவர்த்தி கம்பர் தாம் இயற்றிய ராமாயண மகா காவியத்தை ஸ்ரீரங்கத்தில் திருவரங்கர் சன்னிதியில் அரங்கேற்றினார்.

நிகழும் விஜய வருடத்தில் (31-10-53 ல்) ரஸிகமணி டி. கே. சிதம்பரநாத முதலியார் அவர்கள் "கம்பர் தரும் ராமாயண"த்தைக் குற்றால நாதர் சன்னிதியில், ராஜாஜி அவர்கள் தலைமையில் அரங்கேற்றினார்.

இந்த அரங்கேற்று விழாவுக்குக் கம்பரிடத்தில் பக்தி பூண்டவர்கள், டி. கே. சி.யினிடத்தில் அன்பு கொண்டவர்கள், இலக்கியத்தில் பற்றுடையவர்கள், ராஜாஜியினிடம் அபிமானம் உடையவர்கள்—இப்படிப் பலர் தமிழ் கூறும் நல்லுலகத்தின் பல பகுதிகளிலிருந்தும் விஜயம் செய்திருந்தார்கள்.

விழாவுக்கு இரண்டு நாட்களுக்கு முன்னதாகவே குற்றாலம் போனால்தான் டி. கே. சி. அவர்களை நிம்மதியாகப் பார்த்துப் பேச முடியும் என்று புறப்பட்டேன். எழும்பூர் ரயில்வே ஸ்டேஷனை அடைந்தபோது, என்னைப் போலவே முன்னால் புறப்பட எண்ணி வந்தவர்கள் சிலரைக் கண்டேன். குற்றாலத்தை அடைந்தால், எங்களுக்கு முன்னாலேயே ஸ்ரீ ஸி. வி. ஆர்எம். அழகப்ப செட்டியார் முதலிய அன்பர்கள் வந்திருப்பதை அறிந்தேன்!

விழா ஆரம்பமாவதற்குள் டாக்டர் அழகப்ப செட்டியார், ஸ்ரீ பி. டி. ராஜன், ஸ்ரீ வி. சி. பழனிசாமி கவுண்டர், ஆனந்தவிகடன் ஆசிரியர் ஸ்ரீ எஸ். எஸ். வாஸன், ராயவரம் ஸ்ரீ குழந்தையன் செட்டியார், ஸ்ரீ ராமநாதன் செட்டியார், ஸ்ரீ சா. கணேசன், ஸ்ரீ பாஸ்கரத் தொண்டைமான், ஸ்ரீ மகாராஜ பிள்ளை, ஸ்ரீ அ. சீனிவாசராகவன், சென்னை சர்க்கார் செய்தி இலாகா டைரக்டர் ஸ்ரீ ஆர். பார்த்தசாரதி, ஸ்ரீ ஸி. பா. ஆதித்தனார், மதுரை முனிஸிபல் சேர்மன் ஏ. சிதம்பர முதலியார், ஸ்ரீமான்கள் எஸ். வையாபுரிப் பிள்ளை, கு. அருணாசலக் கவுண்டர், அ. ந. மகரபூஷணம், எஸ். என். சோமயாஜுலு, பெரியன் சீனிவாஸாச்சாரியார், தேவகோட்டை டி. ஆர். அருணாசலம் இவ்வாறு பல பகுதிகளிலிருந்தும் தமிழன்பர்கள் வந்து குவிந்து கொண்டே இருந்தார்கள்.

இந்த மாபெரும் கூட்டத்தையும், குற்றாலத்தை வந்து அடைவதிலுள்ள பிரயாண சிரமங்களையும் ஒப்பிட்டுப் பார்த்தபொழுது டி. கே. சி.யின் இலக்கியத் தொண்டின் பெருமை சட்டம் போட்டுக் காண்பித்ததுபோல் புலனாயிற்று! "யான்பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்" என்ற உயர்ந்த குறிக்கோளோடு கவிதா ரஸானுபவத்தை, இரவும் பகலும், சோர்வுற்ற பொழுதும், சோர்வற்ற பொழுதும் சென்ற நாற்பதாண்டுகளாக அள்ளி அள்ளிச் சொரிந்திட்டதின் பயன் அல்லவா இவ்வளவு அன்பர்களை இங்கே கூட்டி வைத்திருக்கிறது என்று எண்ணி வியக்காமல் இருக்க முடியவில்லை!

அக்டோபர் மாதம் 31-ந் தேதி பிற்பகல் 3-30 மணிக்கு ஸ்ரீ குற்றால நாதர் பூரண கும்பத்துடன் ரஸிகமணியின் "கம்பர் தரும் ராமாயண"த்தை ஆசீர்வதிக்க விஜயம் செய்ததிலிருந்து அரங்கேற்று விழா ஆரம்பமாயிற்று. ஆசி பெற்றவுடனே டி. கே. சி. தமது புஸ்தகத்தின் முதல் பிரதியைக் குற்றாலநாதரின் திருவடிகளில் சமர்ப்பித்து வணங்கினார்!

குற்றாலத்தில் டி.கே.சி. யின் இல்லத்திலிருந்து இரண்டு பர்லாங்கு தூரத்திலிருக்கும் சேது மாளிகையின் தோட்டத்தில் அமைக்கப் பட்டிருந்த அழகிய பிரம்மாண்டமான பந்தலில் அரங்கேற்று விழா நடப்பதற்கிருந்தது. மற்றும் பல விழா ஏற்பாடுகளுடன் கெட்டியான மேடையும் விஸ்தாரமான பந்தலும் அமைத்துக் கொடுத்த பெருமை டி. கே. சி. யின் மெய்யன்பரான ஸ்ரீ பி. சி. சுப்பராஜா அவர்களுக்கே உரியது.

இந்தப் பந்தலுக்கு விழாத் தலைவர் ராஜாஜியும் டி. கே. சி. யும் மேளவாத்தியம் முழங்கக் காரில் ஊர்வலமாகச் சென்ற காட்சி, பச்சை மலைகளின் புறம் படலத்தில் வெகு அழகாக இருந்தது! அரங்கேற்று விழா ஸ்ரீ கொத்தமங்கலம் சுப்பு கடவுள் வாழ்த்துப் பாட ஆரம்பமாயிற்று.

இந்த விழாவின் வரவேற்புக் கமிட்டித் தலைவரான கோட்டையூர் ஸ்ரீ கே. வி. ஏஎல். எம். ராமநாதன் செட்டியார் அவர்கள் வந்திருந்த பிரமுகர்களுக்கும் ராஜாஜிக்கும் நல்வரவு கூறி டி. கே. சி. யின் நூல்களைத் தொடர்ந்து அச்சிடும் பொருட்டுப் "பொதிகை மலைப் பதிப்பு" ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றதென்றும் அதன் முதல் நூலே கம்பர் தரும் ராமாயணத்தின் பால — அயோத்தியா காண்டம் கொண்ட புஸ்தகம் என்றும், கூடிய விரைவில் மற்றக் காண்டங்களும் வெளிவரும் என்றும் அறிவித்தார். இந்தப் பணிக்குக் கடம்பவனம் ஸ்ரீ கோவிந்தசாமி மூப்பனார் ரூ. 6000 நன்கொடை அளித்திருப்பதாகவும் தெரிவித்தார். பிறகு ஒரு பொன்னாடையை ராஜாஜி அவர்களிடம் கொடுத்து, டி. கே. சி.க்குப் போர்த்திக் கௌரவிக்கும்படி வேண்டிக் கொண்டார். அவ்வண்ணம் ராஜாஜி எழுந்து ரஸிகமணிக்குப் பொன்னாடை போர்த்திய போது சபையில் எழுந்த கரகோஷ ஆரவாரம் குற்றால அருவியின் ஆரவாரத்துடன் போட்டியிட்டது.

ரஸிகமணி டி. கே. சி.க்கு எழுபத்தி மூன்று வயதாகிறது. இந்த முதிய பிராயத்தில் ரஸிகமணியின் நீடித்த தமிழ்ப் பணியைத் தமிழ் நாட்டிலுள்ள தர்மபுரம், திருவாடுதுறை, திருப்பனந்தாள், செங்கோல் ஆகிய சைவ மடங்களுக்கும் நாங்குனேரி, திருக்குறுங்குடி ஆகிய வைஷ்ணவ மடங்களுக்கும் உரியவர்கள் பாராட்ட முன் வந்ததை நாமும் பாராட்ட வேண்டியதுதான். சில மடங்களின் சார்பாகப் பொன்னாடை போர்த்தப் பட்டதுடன், புத்தக வெளியீட்டுக்கு நன்கொடைகளும் அளிக்கப்பட்டன.

கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களிடமிருந்து வந்த அருமையான வாழ்த்துப் பாடலை நேயர்கள் இவ்விதழில் மற்றோர் இடத்தில் காணலாம். புதுநெல்லி ரா. சுப்பிரமணியம் பாடிய வாழ்த்துப் பா சென்ற இதழில் வெளியாயிற்று.

'கல்கி' காரியாலயத்தின் சார்பில் திரு பகீரதன் அவர்கள் ஒரு வாழ்த்துப் பத்திரத்தை வாசித்துக் கொடுத்தார். உடனே 'கல்கி' காரியாலய மானேஜிங் டைரக்டர் ஸ்ரீ டி. சதாசிவம் மதுரையிலிருந்து கொண்டு வந்திருந்த ஒரு பெரிய மலர் மாலையை ரசிகமணிக்குச் சூட்டினார்.

பின்னர் பாராட்டுரைகள் ஆரம்பமாயின. முதலில் டாக்டர் அழகப்ப செட்டியார் அவர்களை ராஜாஜி பேசும்படி அழைத்தார்.

டாக்டர் செட்டியார் தமது வாழ்க்கையில் ஏற்பட்ட ஹாஸ்ய அனுபவம் ஒன்றைக் கூறிவிட்டு விஷயத்துக்கு வந்தது ரொம்பவும் சுவாரஸ்யமாக இருந்தது.

அதாவது டாக்டர் செட்டியார் இங்கிலாந்தில் இருந்தபோது, தமது உடம்பின் நிறையைத் தெரிந்து கொள்ள விரும்பினார். எடை அறிவிக்கும் எந்திரம், அவர் எடையை அறிவிப்பதுடன், அவருடைய அதிர்ஷ்டத்தையும் அறிவிக்கும் என்று கூறியது. இப்பொழுது செட்டியார் அவர்களின் ஆவல் இன்னும் அதிகமாயிற்று. அந்த எந்திரத்தில் நாணயத்தைப் போட்டார். உடனே ஒரு சீட்டு வந்தது. அதில் ஒருபுறம் அவருடைய எடையைக் குறித்திருந்தது. மற்றொருபுறம் அவருக்கு ஏற்படவிருக்கும் அதிர்ஷ்டத்தைக் குறித்திருந்தது. "நீ கூடிய சீக்கிரத்தில் ஒரு அழகான ஆடவனை மணந்து கொள்வாய்" என்று இருந்தது.

இப்படிச் சொல்லி நிறுத்தினாரோ இல்லையோ, சபையில் "கொல்" என்ற சிரிப்பு எழுந்தது.

இந்த மாதிரியான அதிர்ஷ்டமன்றித் தமக்கு வாழ்க்கையில் பல நல்ல நல்ல அதிர்ஷ்டங்கள் சற்றும் எதிர்பாராத வகையில் வாய்த்திருக்கின்றன என்றும், அத்தகைய ஒன்று இந்த விழாவில் தமக்குப் பேசச் சந்தர்ப்பம் வாய்த்ததாகும் என்று கூறித் தம் பாராட்டுக்களைத் தெரிவித்தார்.

ஸ்ரீ பி. டி. ராஜன் அவர்கள், "டி. கே. சியைப் பார்க்கும் பொழுதே தமக்குத் தமிழ் முழுதும் அறிந்து விட்டாற் போன்ற உணர்ச்சி எழுகிறது" என்று அருமையாகப் பேசினார்.

ஸ்ரீ எஸ். எஸ். வாஸன் அவர்கள், டி. கே. சி.யைத் தமக்கு இருபது ஆண்டுகளுக்கு மேலாகத் தெரியுமென்றும், அந்த நாட்களில் 'கல்கி' ஆசிரியர், ஆனந்த விகடனில் பணி ஆற்றிக்கொண்டிருந்த பொழுது அவர் அறைக்குச் சென்று அவரைப் பாராட்டியும், சித்திரக்காரர் 'மாலி' அறைக்குச் சென்று அவரை உற்சாகப்படுத்தியும், பின்னர் தம்முடைய அறைக்கு வந்து, 'மிக நல்ல காரியம் செய்து வருகிறீர்கள்' என்று பாராட்டி விட்டுத்தான் செல்வார் என்று பெருமிதத்துடன் கூறினார். "இப்படி நல்ல காரியம் செய்கிறவர்கள் எல்லாரையும் பாராட்டி வந்த பெரியவரை இன்று நாம் எல்லாரும் சேர்ந்து பாராட்டுவது மிகப் பொருத்தமாகும்" என்று ஜெமினி அதிபர் ஸ்ரீ எஸ். எஸ். வாஸன் அவர்கள் கூறியதை அனைவரும் ஆமோதித்துப் பாராட்டினார்கள்.

"நான் வீட்டில் தெலுங்கு பேசும் தமிழன்" என்று கம்பீரமாக மார் தட்டிக் கொண்டு பேசினார் ஸ்ரீ சின்ன வெங்கட்ராஜா. அவருக்குத் தசரத சக்ரவர்த்தியிடம் ரொம்பவும் ஈடுபாடாம். ஏனெனில், தம்மைப் போலவே தசரத சக்ரவர்த்தி சூரிய குலத்தில் பிறந்த க்ஷத்ரியர் என்று காரணத்தை வேறு சொன்னார். பிறகு கம்பராமாயணத்திலிருந்து இரண்டு பாடல்களைப் பாடிக் காட்டினார். தமிழ்ப் பாடலைப் பாடித்தான் ஆக வேண்டும் என்று தமக்குத் தைரிய மூட்டிய டி. கே. சி. அவர்களைப் பாராட்டினார்.



ரசிகமணி டி. கே. சிக்கு, தலைவர் ராஜாஜி பொன் மாலை சூட்டினார்.

தமிழில் ஆசையும், டி. கே. சி. யினிடம் ஈடுபாடும் கொண்ட மலையாளிகள் சார்பில் திருநெல்வேலி அட்வகேட் ஸ்ரீ கோபால் பிள்ளை அவர்கள் ஆங்கிலத்தில் பல ஆழ்ந்த கருத்துக்கள் பொதுளப் பேசினார்!

வித்வான் ஷண்முக சுந்தரம் தென்காசி பள்ளிக்கூடத்தில் ஆசிரியர். குற்றாலத்திலிருந்து இரண்டரை மைல் தூரத்திலுள்ள மேலகரம் என்ற ஊரில் குடியிருப்பவர். டி. கே. சி. யிடம் மிக்க ஈடுபாடு கொண்டவர்.

இவர் பேசும்போது, தமக்கும் தம் மனைவிக்கும் உப்புச் சப்பில்லாத காரியங்களுக்காக ஏற்படும் பூசல்களை விவரித்தார். "ரஸத்தில் உப்பு குறைவாக இருக்கும். இதுவே என் கோபத்துக்குக் காரணமாகிவிடும். சாதம் பரிமாறப்பட்ட தட்டு ஒரு திசை செல்லும்; சாதம் வேறு திசை செல்லும்; பானை உடையும்; சட்டி தகரும்."

இப்படிச் சொல்லிக் கொண்டே போன போது ராஜாஜி குறுக்கிட்டு "உங்கள் மனைவி இந்தக் கூட்டத்தில் இல்லையே!" என்றார்.

அப்பொழுது பார்க்க வேண்டுமே கூட்டத்தில் எழுந்த சிரிப்பின் ஒலியை!

இவ்வளவு கோபமும், டி. கே. சி.யின் அன்பு மொழிகள் கேட்டவுடன், டி. கே. சி.யினிடம் பாடல் கேட்டவுடன் பறந்து போகும் என்றும், ஏன், தம் மனைவியிடம் அநுதாபம் கூட ஏற்பட்டு விடும் என்று கூறி டி. கே. சி. தம் வாழ்க்கையைச் செம்மைப் படுத்தும் வித்தகர் என்று பாராட்டி வணங்கினார்.

காட்டுக்கு ராமன் அனுப்பப் பட்டான் என்ற செய்தியைக் கேட்டதும் கௌசலையின் வயிற்றில் ஏதோ வேதனை செய்கிறது. "ஆவியை அன்னை வயிற்றினைப் பிசையும்" என்று வருகிறது கம்பராமாயணத்தில் ஓர் அடி! கம்பர் கவிச் சக்ரவர்த்தி. மனித உள்ளத்தின் துடிப்பை யெல்லாம் அறிந்திருக்கிறார் என்றால் அதிசயப்படுவதற்கில்லை. ஆனால் பெற்ற வயிற்றின் துடிப்பை எப்படி ஆண் பிறவி யெடுத்த கம்பர் உணர்ந்தார் என்பது அதிசயத்திலும் அதிசயமாக இருக்கிறது. இந்த அதிசயங்களை யெல்லாம் எடுத்துக் காண்பித்தவர் ரசிகமணி டி.கே.சி. என்று ஸ்ரீமதி லீலாவதி ராமசுப்ரமணியம் பெண் குலத்தின் சார்பில் உணர்ச்சியோடு பேசினார்.

ஸ்ரீமான் மு. அருணாசலம் முதல் முதலாக டி. கே. சி. யின் "இதய ஒலி"யைப் பதிப்பித்தவர். தற்சமயம் திருச்சிற்றம்பலத்தில் ஒரு அறநிலை ஆசிரமமும், ஆதாரக் கல்விப் பள்ளிக்கூடமும் நடத்தி வருகிறார். அவர் கூறியதாவது: "நான் பெரிய தமிழ்ப் பண்டிதன் என்று பெயர் வாங்கியிருந்தேன். ஏடுகள் படிப்பதில் சமர்த்தன் என்று பெயர் பெற்றிருந்தேன். ஆராய்ச்சியில் நிபுணன் என்றும் பெயர் பெற்றிருந்தேன். ஆனால் டி. கே. சி. அவர்களிடம் ஒரு பாட்டுக் கேட்ட பிறகு இதுகாறும் எனக்குத் தமிழ் தெரியவில்லை என்பதை உணர்ந்தேன்; பிறகு அவர்களுடன் நெருங்கிய தொடர்பு ஏற்பட, தமிழின் உயிர்நிலை அறியலானேன்" என்றார்.

காரைக்குடி சா. கணேசன் அவர்களின் பெயர் கம்பர் பெயருடன் இரண்டறக் கலந்த பெயராகி விட்டது. சென்ற பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாகக் காரைக்குடியில் கம்பர் விழா பெரிய அளவில் நடத்திக் கம்பன் புகழையும், கன்னித் தமிழின் சிறப்பையும் வாழச் செய்து வருகிறவர் அல்லவா! ஸ்ரீ சா. கணேசன் அழுத்தம் திருத்தமான தொனியில் பின்வருமாறு கூறினார்:

"டி. கே. சி. தமது பதிப்பில் சில பாடல்களை நீக்கியும், சில பாடல்களைத் திருத்தியும் வெளியிட்டிருக்கிறார். அதைப் பற்றி எனக்குக் கவலை இல்லை. பல வருஷங்களாகக் கம்பராமாயண ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள அவர் அப்படிச் செய்ய எல்லா விதத்திலும் தகுதி வாய்ந்தவரென நிச்சயமாய்ச் சொல்லுவேன்."

தூத்துக்குடி வ. உ. சி. கல்லூரியின் பிரின்ஸிபால் ஸ்ரீ அ. சீனிவாசராகவன் அவர்கள் டி. கே. சி. தம் பதிப்பில் பாடல் ஒவ்வொன்றுக்கும் அளித்துள்ள முன்னுரை பொழிப்புரையாகவோ, கருத்துரையாகவோ அமையாமல் பின் வரும் பாடலின் கவிதை நயத்தை நாமே படித்து உணரும் வகையில் அமைந்திருக்கும் சிறப்பைப் பெரிதும் பாராட்டிக் கூறினார்.

தூத்துக்குடி சப்-ஜட்ஜ் ஸ்ரீ என். மகராஜன் அவர்கள் "டி. கே. சி. எதைச் சொன்னாலும் அழகுபட நகைச்சுவையுடன் கூறும் முறையைப் பல உதாரணங்கள் கொடுத்து விளக்கினார். டி. கே. சி. தொட்டதெல்லாம் அழகுறச் செய்தார். ஏன், டி. கே. சி.யே எவ்வளவு அழகாக இருக்கிறார்! அவர் முகம் எவ்வளவு அழகாக இருக்கிறது! அவர் மீசைகூட எவ்வளவு அழகாக இருக்கிறது!" என்று கூறினார்.

தலைமை வகித்த ராஜாஜி அவர்களுக்கு மகராஜன் அவர்கள் சொன்னதின் பொருள் மக்களுக்குச் சரியாகப் புரிந்திராது என்று தோன்றியது. ஆகவே, தமது தலைமையுரையில் ராஜாஜி கூறியதாவது:—"மகராஜன் அவர்கள் டி. கே. சி.யின் அழகைப் பற்றி ரொம்பவும் பாராட்டிப் பேசினார். டி. கே. சி. யின் முகம் அப்படி யொன்றும் அழகாக இல்லையே என்று உங்களுக்குத் தோன்றலாம். அழகு என்று புறத்தோற்றத்தில் காண்பதை மகராஜன் குறிப்பிட வில்லை. டி. கே. சி.யின் கண்களில் அழகைக் காண்கிறார் மகராஜன். பின்னர் அந்தக் கண்களுடன் சேர்ந்த நெற்றி, நாசி, வாய், காது, உடம்பு யாவுமே அழகுள்ளதாகத் தோன்றுகிறது. டி. கே. சி. யின் உள்ளத்தின் அழகை உணரக் கூடிய சக்தி மகராஜன் அவர்களுக்கு வாய்த்திருக்கிறது. இது தான் முக்கியமான விஷயம்! அழகைக் காணும் சக்தி பெற வேண்டும்.

"மாதுளை எவ்வளவு அழகானது! அதனுள் இருக்கும் முத்துக்கள் எவ்வளவு செக்கச் செவேலென்று செம்பு நகை செய்தாற்போல் தோற்றமளிக்கிறது! அந்த முத்துக்கள் ஒவ்வொன்றுக்கும் ஏற்பட்டுள்ள கண்ணறைகள்தாம் எவ்வளவு அழகாக இருக்கின்றன! இவற்றை யெல்லாம் தற்காலத்தில் எங்கே பார்க்கிறோம்! மாதுளையை நறுக்கி, முத்துக்களை உதிர்த்துத் தட்டில் வைத்துக் கொடுத்தால் இயற்கையிலுள்ள இவ் அழகுகளை யெல்லாம் எப்படிக் காண முடியும்! அல்லது மாதுளையை நசுக்கிச் சாறு பிழிந்து கொடுத்தால் தான் அதன் அழகு புலப்படுமா!

"டி. கே. சி.யின் ஒவ்வொரு இயல்பையும் உள்ளத்தையும் மகராஜன் நன்கு உணர்ந்து அநுபவித்தவராதலினால், அவர்களுடைய புறத்தோற்றமும் அழகுள்ளதாகத் தோன்றுகிறது" என்று கூறினார் ராஜாஜி.

தலைமையுரையை முடிக்கும் தறுவாயில், ராஜாஜி அவர்களிடம் "கம்பர் தரும் ராமாயணம் - பால - அயோத்தியா காண்டம்" புஸ்தகம் அரங்கேற்றுவதற்கு அளித்தார் டி. கே. சி.

"நமது தேசத்தின் பண்பாடு, கலை யாவும் ராமாயணம், பாரதம் ஆகிய இரண்டிலும்தான் இருக்கின்றன. இவற்றை நாம் போற்றிப் பாதுகாத்து வரவேண்டும். ராமகாதை பாரத நாட்டின் பாக்கியம். அதைத் தமிழில் கம்பர் அருங் கவியாகப் பாடியிருப்பது தமிழர் செய்த பாக்கியம். கம்பர் கவி அழகை எடுத்துக் காட்டுவதற்கு டி. கே. சி. யைப் பெற்றிருப்பது நாம் செய்த பாக்கியம். 'கம்பர் தரும் ராமாயணம்' இன்று அரங்கேறுகிறது. இது தமிழ் மக்கள் உள்ளத்திலும் அரங்கேற வேண்டும்" என்றார் ராஜாஜி.

பிறகு பேசிய ரசிகமணி டி. கே. சி. அவர்கள், "தன்னை இத்தனை பேர் இவ்வளவு தூரம் பாராட்டிப் பேசியதற்கெல்லாம் காரணம் அவர்கள் என்மீது வைத்துள்ள அன்புதான்; இந்த அன்புக்கு நான் என்ன கைம்மாறு செய்ய முடியும்? அநுமான் செய்ததைத்தான் நானும் செய்ய முடியும்" என்று கம்பராமாயணத்தில் ஒரு கட்டத்தை நினைவுறுத்தினார்.

யுத்தகளத்தில் பிரம்மாஸ்திரத்தினால் கட்டுண்டு மயக்கமுற்று விழுந்த ராமலக்ஷ்மணர்களை, அநு

மான் சஞ்சீவி பர்வதத்தையே பெயர்த்துக் கொண்டு வந்து மூர்ச்சை தெளிவித்தான்.

இந்த உபகாரத்தைக் கண்ட ராமன் ஹநுமனைப் பார்த்து, "தசரதன் வயிற்றில் தோன்றிய நாங்கள் இறந்து விட்டோம். இப்பொழுது உயிரோடிருக்கும் நாங்கள் உன் புதல்வர்கள்" என்று கூறி மார்புறத் தழுவினான்.

ராமனுடைய அன்பைக் கண்டு தாங்கமாட்டாது நெஞ்சம் தழ தழத்த ஹநுமான், "லக்ஷ்மி தேவி தோயும் மார்பல்லவா, ராமனது மார்பு!" என்று நினைத்து அவன் பிணைப்பிலிருந்து மெள்ள மெள்ள நழுவி ராமனது பாதார விந்தங்களைச் சேர்த்து வணங்கினான்.

இந்தக் கருத்து வாய்ந்த கம்பர் பாடல்களைச் சொல்லி முடித்ததும் திரு பாஸ்கரத் தொண்டைமான் நன்றியுரை பகர்ந்தார். அத்துடன் விழா இனிது முடிந்தது.

பல அன்பர்கள் சேர்ந்து கொண்டாடிய இந்த டி. கே. ஸி. பாராட்டு விழாவுக்குச் சிகரம் வைத்தாற்போல் விளங்கியது, மறுநாள் காலை டி. கே. ஸி. "ஒளவையார்" படத்தைப் பார்க்க ஸ்ரீ எஸ். எஸ். வாஸன் ஏற்பாடு செய்திருந்தது! இந்தப் படத்தை டைரக்ட் செய்த கொத்தமங்கலம் சுப்புவின் நாட்டுப் பாடல்களை டி. கே. ஸி. பெரிதும் பாராட்டி வந்தவர். அவரது கவிதைத் திறனுடன், ஒளவையார் படத்தில் டைரக்ஷன் திறமையையும் கண்டு டி. கே. ஸி. பெரிதும் வியந்தார். படத்தைப் பார்த்து விட்டு, "இந்தப் படத்தை ஒரு தடவை அல்ல; நூறு தடவை பார்க்கலாம்" என்றார் ரஸிகமணி.

இப்படிப் பல விதங்களில் வெகு சிறப்பாக நடத்தி வைத்த குற்றால நாதருக்கு, ஊருக்குத் திரும்புமுன் என் நன்றியையும் வணக்கத்தையும் செலுத்தி விட்டுப் போகலாம் என்று கோவிலுக்குச் சென்றேன். கோவிலில் குற்றால நாதருக்கும் குழல்வாய் மொழி அம்மைக்கும் ஏதோ பேச்சு நடந்து கொண்டிருந்தது. இந்தச் சந்தர்ப்பத்தில் நாம் போவது உசிதமல்லவென்று உசிதமல்லாத மற்றோர் காரியத்தைச் செய்து வைத்தேன். அதாவது அவர்கள் பேச்சை ஒட்டுக் கேட்டு வைத்தேன்.

குழல்வாய் மொழி அம்மை:— உங்கள் கண்டம் என்றைக்கும் இருப்பதை விட இன்று இன்னும் சற்று அதிகமாகக் கறுத்துக் காணப்படுகிறதே! காரணம் என்ன!

குற்றாலநாதர்:—அதை ஏன் கேட்கிறாய், போ! ஏதோ நமது திருவடியிலேயே இருக்கிறாரே சிதம்பரநாத முதலியார், அவருடைய கம்பராமாயண அரங்கேற்றமாமே என்று கேள்விப்பட்டு ஆசி கூறிவிட்டு வரப் போயிருந்தேன். போன இடத்தில் கையில், புஸ்தகத்தைக் கொடுத்து, "கம்பர் பாடலாகத் தந்திருக்கிறேன்" என்று கூறி, அப்படியும் இப்படியும் பார்த்தார். "சரி, அவற்றையும் இப்படிக் கொடுங்கள்" என்று சொல்லி அவர் ஒதுக்கி வைத்த இடைச் செருகல் பாடல்களையெல்லாம் வாங்கிக் கொண்டு இந்தக் கழுத்தில் அடைத்து வைத்துக் கொண்டேன்.

ஆயிரம் வருஷங்களுக்குப் பின் குற்றாலத்தில் இந்த நூல் அரங்கேறுவதிலும் ஒரு பொருத்தம் இருப்பதை உணர்ந்து ரயில் ஏறினேன்.

டில்லியில் செம்மங்குடி கோஷ்டி

வெகு நாட்களுக்குப்பின் டில்லியில் ரம்மியமான சங்கீதக் கச்சேரி நேற்று தான் நடந்தது.

இரட்டை நாத சாரீர சம்பத்தைப் பெற்றுள்ள செம்மங்குடி அவர்கள் அதைத் தமக்கே உரியதான பாணியில் பிரயோகிக்கிறார். தகுந்த பக்க வாத்தியங்களும் அமைந்து விடவே நேற்று எடுத்த எடுப்பிலேயே களை கூடிக்கொண்டது. ஆபோகி வர்ணத்தில் ஜம் ஜம் என்று விளையாடிவிட்டுக் கல்யாணி ராகத்தில் "ஏதாவுனரா" வருவதற்குள் சபையோர்கள் பரவசமாகி விட்டார்கள். "ஏதாவுனரா"வில் அவர் சாரீரத்தின் உதவுபடி பல இடங்களில் வியக்கத்தக்க முறையில் அமைந்தது. ஸ்வரப் பிரஸ்தாரங்களை மிருதங்க ஜதிகளை ஒட்டி அமைத்துப் பாடியதால் பக்க வாத்தியக்காரர்களான ஸ்ரீ மணியும், உமையாள் புரம் கோதண்டராமய்யர் (கடம்) அவர்களும் அப்படியே இழைந்து கொண்டு வாசித்தார்கள். அடுத்துப் பாடும் செம்மங்குடியின் பாட்டை, தாள வியவகாரங்களில் தலையிடாதவர்களுக்குக் கூட ரஸிக்க முடிந்தது.

த்விஜாவந்தி என்ற ரம்மியமான ராகத்தில் சேதஸ்ரீ என்ற கீர்த்தனை இன்று தில்லி பூராவும் சிங்காரம் செய்து கொண்டிருக்கிறது.

ராகம், தானம், பல்லவிக்கு ஷண்முகப்பிரியா அமைந்தது. இரட்டை நாகஸ்வரம் கேட்கும் போது ரஸமான கட்டம் ஒன்று வருவதுண்டு. ஒருவர் ஒரு ஸ்வரத்தில் நின்று அதைத் தீர்க்கமாய்க் கொடுத்து வாசிக்கும்போது மற்றவர் மலரை மொய்க்கும் வண்டு போலச் சுற்றிச் சுற்றி வந்து அதன்மீது உட்காருவார். ஸ்ரீ கிருஷ்ணன் வயலினில் தீர்க்க மேல் ஸஞ்சாரங்கள் செய்யும் போது செம்மங்குடி அதைச் சுற்றிச் சுற்றி வந்து தொட்டது ரொம்ப ரொம்பப் பேஷாக இருந்தது. திருபுடை தாளத்தில் நாலு களைச் சவுக்கத்தில் பல்லுடைகிற பல்லவி. "உன் தரிசனம்" என்று எடுப்பு. விஸ்தாரம் செய்து குறைத்துக்கொண்டே வந்த இடத்தில் விழும் குஸ்மால் வேலை. அதையே பாலக்காடு மணி அவர்கள் திருப்பி வாசித்துக் காட்டியபோது கறுக்குத் தெறித்தாற் போல் பொறித்துத் தள்ளி விட்டார்கள்.

மாஸ்டர் கிருஷ்ணனின் அடக்கமும், பவ்யமும், வாத்தியத்தை அடக்கி ஆளும் அஸகாய சூரத்தனமும், வாத்தியநாதமும், நிச்சயமும், அனுசரணையும் (மேற் கொண்டு வார்த்தைகள் இல்லை – மன்னிக்கவும்) பிரமிக்கச் செய்கின்றன.

பாலக்காடு மணி அய்யரைப் பற்றி 'ஞான் எந்து தன்னெ பறயுண்டு!' மிருது அங்கம் வாசிக்கிறார்! பாகவதர் ஸ்வரம் பாடும்போது மிருதங்கமும் அதே ஸ்வரத்தைப் பாடுகிறது. குமுக்காரங்களை இடது கையால் கொடுத்துக் கொண்டே வாசிப்பது அவருடைய தனி பாணி. செம்மங்குடி சில இடங்களில் வன்மையாகச் சாரீரத்தைப் பிரயோகித்து ரம்மியமான சங்கதிகளைப் பொழியும்போது மணி அய்யரவர்கள் வலது விரல்களினால் நாத அலைகளைக் கிளப்பியபோது சபையோர்கள் தம்மையும் மறந்து அனுபவித்தார்கள். உமையாள்புரம் கோதண்டராமய்யருக்கு வயது அறுபதுக்கு மேலானாலும் அவருடைய கடம் மணிக்குச் சளைக்காமல் உதவியது.

கர்நாடக சங்கீத சபைப் பள்ளிக்கு நல்ல நிதி கிட்டிய தென்பதைக் காரியதரிசி நாகராஜனின் சிரித்த முகம் வெளியிட்டது.

டில்லி
2—11—53

சுப்புடு



இப்பொழுது... இந்த
டால்கம் பௌடர் அந்த
உஷக்காலப்
புதுமையை
நாள் முழுதும் நிலைத்
திருக்கச்செய்கிறது!
பாண்ட்ஸ் ஒன்றே
அவ்வளவு தேர்ந்தியானது - உங்கள் வியர்வையை உறிஞ்சி, உங்களை எப்பொழுதும் குளுமையாக, சௌகரியமாக வைத்திருக்கிறது!
அவ்வளவு இனிய நறுமண வாசனையுடையது!
தவிர, அவ்வளவு சௌகரியமான, தூய மிக எளிதான டின்னில் கிடைக்கிறது ... பிரசித்திபெற்ற பாண்ட்ஸ் கைக் கடக்கமான டப்பி!
இன்றே ஒரு டின் வாங்கிக்கொள்ளுங்கள்
பாண்ட்ஸ்
டால்கம் பௌடர்
ஏக உரிமையாளர்கள்:
ஜியாப்ரே மானர்ஸ் & கோ. லிட்.
பம்பாய் - கல்கத்தா - டில்லி - மதராஸ்
P. 7583



க்ளோரோபில் சேர்ந்த கோலினாஸ்—
2 வழிகளில்* வேலைசெய்கிறது!
Kolynos
க்ளோரோபில் சேர்ந்த கோலினாஸ் அரை அங்குல அளவு எடுத்து பிரஷினால் பல் துலக்குங்கள் . . . க்ஷணத்தில் அதன் அற்புத நுரை வேலைசெய்வதை உணருவீர்கள் . . . சுத்தம் செய்கிறது, புது மணம் ஊட்டுகிறது. இயற்கைப் பச்சை க்ளோரோபில்லை வாயிற்குள் ஒவ்வொரு மூலை முடுக்கிற்கும்—உங்கள் பிரஷ் நுழையமுடியாத இடங்களுக்குக்கூட—எடுத்துச் செல்கிறது. ஆக்டிவ் க்ளோரோபில் மற்றும் ஊடுருவும் நுரை—இரண்டின் நற்பயனையும் அடையுங்கள்! க்ளோரோபில் சேர்ந்த கோலினாஸ் ஒரு டியூப் வாங்குங்கள்—இருவகை செயல் திறனுள்ள பற்பசை அது. ஒரு முறை உபயோகித்தால், எப்பொழுதும் அதைத்தான் உபயோகிக்கத் தோன்றும்!
இரண்டு வழிகளில் சிக்கனம்கூட!



அவர் வெற்றி

ரா. கோ

சூரியன் மறைந்து வெகு நேரம் ஆகியிருந்தது. அஸ்தமன நேரத்தில் செம்பொன்னைப் போல் சுடர்விட்ட மேகங்கள் கன்னங் கரேலென்று காட்சி யளித்தன. மேல் காற்று குளிர்ச்சியுடன் வீச ஆரம்பித்தது. அச்சமயம் வானத்தில் ஒரு மின்னல் தோன்றி வானம் முழுவதும் காணப்பட்டது. 'படபட' வென்று நீர்த்துளிகள் கற்கள் போல் பூமியை அறைந்தன. அடுத்த சில நிமிஷங்களில் மழை 'ஜோ' வென்று பெய்யத் தொடங்கியது. பலத்த காற்றும் சேர்ந்தது. ஜன்னல்களின் கதவுகள் 'படார்' 'படார்' என்று காற்றில் அடித்துக் கொண்டன.

இதையெல்லாம் பார்த்த எனக்கு அப்படியே உடம்பு நடுங்கியது. தனிமை எப்பேர்ப்பட்ட நரகம் என்பது அப்போதுதான் விளங்கிற்று. ஆகா! இந்திரா இருக்கும்பொழுது இப்படியா இருந்தேன்? ஐயோ, இந்திரா! நீ இப்படி என்னைத் தவிக்க விட்டு விட்டுப் போய் விடுவாய் என்று நான் கனவிலும் கருதவில்லையே? என் தலையில் ஹேமாவை வேறு கட்டிவிட்டுச் சென்று விட்டாயே, பாவம்! அவனுக்கு இன்னும் வயது மூன்று கூட முடியவில்லை. அம்மாவைக் காட்டு என்று பிடிவாதம் பிடிக்கிறானே, நான் எப்படிக் காட்ட முடியும்? இவனுடன் இம்மாதிரி இன்னும் எத்தனை நாட்கள் நான் போராடுவது? ஆண்டவனே! இதற்காகவா நான் குழந்தை வேண்டும் என்றேன்? குழந்தையைக் கொடுத்து விட்டு அதன் தாயைப் பறித்து விட்டாயே?

திரும்பவும் 'படார் படார்' என்று ஜன்னல் கதவுகள் காற்றில் அடித்துக் கொண்டன. அந்த அறைக்குச் சென்று கதவை மூடலாம் என்று எண்ணி எழுந்தேன். அந்த அறை ஒரே கும்மிருட்டாக இருந்தது. இந்திராவின் உருவம் எதிரே நிற்பது போல் ஒரு பிரமை தட்டியது. ஆ! நான் அவளைச் சிதையில் எரித்து விட்டேனே? இந்திரா! இப்படியா நீ என்னைப் பயமுறுத்த வேண்டும்? மனத்தில் ஒரு அசட்டுத் தைரியம் ஏற்பட்டு அந்த அறைக்குள் காலை வைத்தேன். மறு நிமிஷம் ஏதோ மிருதுவான வஸ்து காலில் தடைப்பட்டது. என் இருதயத் துடிப்பு நின்று விட்டது போல் இருந்தது. பாம்போ, தேளோ என்று பயந்தவண்ணம் மெதுவாகத் தடவியபடியே 'ஸ்விச்சை'ப் போட்டேன். அங்கு ஒரு கயிறு தரையில் கிடந்தது. இதுவா நம்மை இப்படிப் படுத்தி விட்டது! ஆனால் மறு நிமிஷம் மற்றொரு பயங்கர எண்ணம் வந்து பற்றிக் கொண்டது. இந்த அறையில் அல்லவா இந்திரா கடைசியாகப் படுத்தாள்? பிறகு அவள் எழுந்திருக்கவே யில்லை. உடனே விளக்கை யெல்லாம் அணைத்து விட்டு ஒரே ஓட்டமாக என் அறைக்குள் சென்றேன். அங்கு என் மகன் ஹேமா நிம்மதியாகப் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தான்.

பல சந்தேகங்கள் தோன்றிப் பயம் மேன்மேலும் அதிகரித்தது. அந்தச் சமயம் பார்த்துக் கடிகாரம் பன்னிரண்டு முறை அடித்து ஓய்ந்தது. ஒவ்வொரு முறை அடிக்கும் பொழுது எவ்வளவு பயங்கரமாக இருந்தது! ஏதாவது கதைப் புஸ்தகம் படிக்கலாம் என்றாலோ அதில் என் கவனம் செல்ல மறுத்தது. மழை இன்னும் விட்டபாடில்லை. பக்கத்து வீட்டுச் சுப்பிரமணிய அய்யரைப் போய் அழைத்து வரலாம் என்று நினைத்தேன். இந்த இருட்டில் அவர் வருவாரா? அப்படி வந்தாலும் " என் மகன் பத்மாவைக்

கல்யாணம் செய்து கொள்'' என்று தொந்தரவு கொடுப்பார். இம்மாதிரியெல்லாம் என் மண்டையைக் குழப்பிக் கொண்டிருந்தேன்.

இந்தச் சமயத்தில் யாரோ கதவு இடிக்கும் சப்தம் கேட்டது. இந்த வேளையில் யார் வரப்போகிறார்கள்? ஒரு சமயம் சுப்பிரமணியய்யராக இருக்கலாமோ? அவரைப் பற்றி நினைத்தவுடன் மனத்தில் தைரியம் பிறந்தது. நேராகச் சென்று கதவைத் திறந்தேன். மறு நிமிஷம் திடீரென்று என் குடல் மேல் எழும்பி விட்டதுபோல் தோன்றியது. ஆம்; வாசலில் ஒரு மனிதர் நின்றுகொண்டிருந்தார். மழையில் 'சொட்டச் சொட்ட' நனைந்த வண்ணமிருந்தார். முகமெல்லாம் தாடி வளர்ந்திருந்தது. தலைமயிர் எண்ணெய் கண்டு எவ்வளவு நாள் ஆயிற்றோ! பழைய முழுக்கைச் சட்டை போட்டுக் கொண்டிருந்தார். வேஷ்டி 'தொள தொள' வென்று கட்டிக் கொண்டிருந்தார். எனக்குப் பேசவே நா எழவில்லை! அந்தக் குளிரில் கூட ஒரு முறை வியர்த்துக் கொட்டியது. முகமெல்லாம் வெளுத்து விட்டது.

"யார்?" என்றேன் நாக் குழற.

"என்னைத் தெரியவில்லையா உனக்கு?" என்றார் அவர்.

ஒரு முறை உற்றுப் பார்த்தேன். முகஜாடை எங்கேயோ பார்த்த மாதிரி இருந்தது. யார் இவர் என்று சற்று நேரம் யோசித்தேன். ஆனால் அடையாளம் கண்டு பிடிக்க முடியவில்லை. ஆனால் அவரே தொடர்ந்து. "ஆமாம், உனக்குத் தெரிய நியாயமில்லை. வா, உள்ளே போகலாம்" என்று சொல்லியவண்ணம் உள்ளே சென்றார். நானும் ஒரு யந்திரம் போல் அவரைப் பின்பற்றினேன். நேராக இந்திரா இறந்த அறைக்குச் சென்றார்.

"இங்கே தானே இந்திரா இறந்தாள்?" என்று கேட்டார். எனக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. இவருக்கு எப்படித் தெரிந்தது? இவர் யார்? ஒரு முறை திடும்மென்று திரும்பினார். என் கரத்தை வன்மையாகப் பிடித்துக் கொண்டு என் அறைக்கு வந்தார்.

"கோபி, உன்னிடம் ஒரு விஷயம் பேச வேண்டும். அதற்காகத்தான் வந்தேன்" என்றார். இம்முறை என் இருதயம் நின்று விட்டது போல் இருந்தது. என்னுடைய பெயர் எப்படித் தெரிந்தது இவருக்கு? நான் ஒன்றுமே பதில் சொல்லவில்லை. ஏதோ ஒன்று என் வாயை அடைத்து விட்டது. மறுபடியும் அவரே பேசினார்:

"கோபி, நீ திரும்பவும் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறாயா?"

"இன்னும் அதைப் பற்றி ஒரு முடிவுக்கு வரவில்லை!" என்றேன்.

"கோபி, அதை மாத்திரம் செய்து விடாதே. உன்னைக் கெஞ்சிக் கேட்டுக்கொள்கிறேன். இதோ, படுத்திருக்காளே பச்சிளங் குழந்தை ஹேமா இவளை உத்தேசித்தாவது அந்தக் காரியத்தைச் செய்யாதே" என்றார்.

"ஏன்?" என்றேன் நான்.

"ஏனா! நான் சிறு வயதில் பட்ட அவஸ்தை ......" என்று சொல்லி விட்டு ஒரு முறை பெருமூச்சு விட்டார். பிறகு "என் கதையைக் கூறுகிறேன். பிறகு உன் இஷ்டப்படி செய்" என்று சொல்லி விட்டுக் கதையை ஆரம்பித்தார்.

* * *

இதோ, இந்த அறையில்தான் நான் பிறந்தேன். இந்திரா இறந்த அதே இடத்தில் பிறந்தேன். நான் பிறப்பதற்கு முன் என் பெற்றோர்கள் நான் பிறக்க வேண்டும் என்று எவ்வளவு தவம் செய்தார்கள் தெரியுமா? ராமேசுவரம் முதல் காசிவரை சென்றார்களாம். வேண்டாத தெய்வமில்லையாம். என் அப்பாவுக்கு நிறைய ஆஸ்தி உண்டாம். வீடு, நிலம், கார் என்று இருந்ததாம். அதற்கெல்லாம் ஒரு வாரிசு இல்லாமல் கண்ணை மூட அவர் விரும்பவில்லையாம்.

ஒரு நாள் அவர் மனைவியிடம், "மீனாட்சி, என் ஜாதகப்படி குழந்தை உண்டாம்" என்றார். ஒரு நிமிஷம் என் தாயாருக்கு ஒன்றுமே புரியவில்லை. மறு நிமிஷம் அவள் புரிந்து கொண்டு விட்டாள். "அதற்கென்ன நானே ஒரு நல்ல பெண்ணைப் பார்த்துக் கல்யாணம் பண்ணி வைக்கிறேன்" என்றாள்!

மீனாட்சியின் அன்பைக் கண்டு திகைத்து விட்டார் ராமசாமி அய்யர். அது தான் என் தகப்பனார் பெயர். அவள் சொன்ன படியே ஒரு பெண்ணைப் பார்த்து முடித்து விட்டாளாம். மீனாட்சியின் அன்பைக் கண்டு ஊரே பிரமித்ததாம். ராமசாமி அய்யருக்கு இரண்டாவது மனைவி மங்களத்தை விட மீனாட்சியின் பேரில்தான் அன்பு அதிகம். அவளை ஒரு தெய்வமாகப் பாவித்து மனத்திலே பூஜை செய்தார். ஆனால் விதியின் கொடுமை தான் என்ன? கல்யாணமான ஒரு வருஷத்தில் மீனாட்சிதான் கர்ப்பவதி யானாள்! ஜோஸ்யம் பொய்த்து விட்டது! அப்பொழுது தான் ராமசாமி அய்யர் தம் தவறை உணர ஆரம்பித்தார். அதற்கு நேர் மாறாக இருந்தாள் மங்களம். வருஷம் மூன்றாகியும் அவளுக்கு ஒரு குழந்தை கூடப் பிறக்க வில்லை!

என்னை அருமையாகப் பெற்றெடுத்தாள் என் தாயார் மீனாட்சி. என் தகப்பனாருக்கோ என் மேல் கொள்ளை ஆசை. என்னைத் தலையில் வைத்துக் கொண்டாட ஆரம்பித்தார்கள். எப்பொழுது பார்த்தாலும் என்னிடத்திலும் என் தாயாரிடத்திலும் தான் இருப்பார் என் தந்தை. என் மீதுள்ள பிரியத்தினால் தன் இரண்டாவது மனைவி மங்களத்தை அறவே மறந்து விட்டார்! அவளைக் கண்டாலே 'சிடு,சிடு' என்பாராம். என்ன செய்தாலும் கண்டபடி திட்டுவாராம். என் அம்மா மாத்திரம் எவ்வளவோ சொன்னாளாம், மங்களத்தையும் அன்போடு நடத்த வேண்டும் என்று! ஆனால் அவை ஒன்றும் பிரயோசனப் படவில்லை. என் அம்மாவுக்குப் பரிதாபமாக

இருந்ததாம். அவள் அடிக்கடி ஆறுதல் கூறப் போவாளாம். ஆனால் மங்களம் "அக்கா, என் விதி நான் கஷ்டப்பட்டுத்தான் ஆகவேண்டும் என்றிருக்கிறது. நீங்களாவது சந்தோஷமாக இருங்கள்" என்று எரிந்து விழுவாளாம். அவளுக்கு என் அம்மாமேல் காரணம் தெரியாத வெறுப்பும், பொறாமையும் தோன்றிற்றாம்!

எனக்கு வயது பன்னிரண்டு நடக்கும் பொழுது எதிர்பாராத விதமாக இரு சம்பவங்கள் நடந்தன. ஒன்று என் சிறிய தாயார் மங்களம் கர்ப்பவதியானது; மற்றொன்று (இந்த இடத்தில் அவர் சிறிது தேம்பினார். கண்ணைக் கசக்கினார்) என் அம்மா என்னை விட்டுப் பிரிந்து விட்டது! மூன்றே நாள் சுரத்தில் யமனுக்குப் பலியானாள். என் அப்பா தேம்பித் தேம்பி அழுதார். ஆனால் எவ்வளவு நாள் தான் அழுவது? அதுவும் இன்னொரு மனைவி யிருக்கும் பொழுது.

கொஞ்சம் கொஞ்சமாகத் தம் துக்கத்தை மறந்தார். மங்களமும் ஒரு ஆண் குழந்தைக்குத் தாயாரானாள். குழந்தை பார்ப்பதற்கு நன்றாக இருந்தது. என் அப்பாவின் மனம் திடீரென்று மாறு பட்டது. பழைய வெறுப்பை மறந்து மங்களத்தினிடம் சென்று பேசினார். புதுக் குழந்தையைக் கொஞ்சினார். நாளாக ஆக அவருக்கு அவர்கள்மேல் அன்பு அதிகமாயிற்று. என்னை மறந்தே போனார் என்றால் மிகையாகாது!

என் வாழ்க்கையில் இரண்டாவது அத்தியாயம் தொடங்கிற்று. சிறிய தாயார் என் தகப்பனாரிடம் என்னைப் பற்றிக் கண்டபடி கூறி அவருடைய மனத்தைக் கலைத்தாள். அதன் பயனாக எனக்கு உதையும், வசவும் கிடைத்தன. அந்த வீட்டில் ஒரு வேலைக்காரன்போல நான் மதிக்கப்பட்டேன். இப்படியிருக்கும் பொழுது என் தந்தையும் திடீரென ஒரு நாள் மாரடைப்பினால் பிராணனை விட்டு விட்டார்! என் கதி அதோகதிதான்! பிறகு நான் பட்ட கஷ்டம் அப்பப்பா! சொல்லி முடியாது. காலை ஆறு மணியிலிருந்து இரவு ஒன்பது மணி வரை வேலை சரியாக இருக்கும். இதனால் படிப்பையும் நிறுத்தி விட்டாள் என் சிறிய தாயார். ஒரு சிறு தப்பு செய்தால்கூட என்னைப் பிடித்து நொறுக்கி விடுவாள் அந்தப் பாதகி.

இப்படி நான் எத்தனை நாட்கள்தான் வாழ்வது? எங்கேயாவது ஓடி விடுவதுதான் உசிதம் என்று தோன்றியது. அதன்படியே ஒரு நாள் ஒருவருக்கும் தெரியாமல் கம்பி நீட்டி விட்டேன்! அதன் பிறகு தான், 'ஏண்டா அம்மாதிரி செய்தோம்' என்றாகி விட்டது. ஒருவேளை சாப்பாட்டுக்குப் பெரும்பாடாக இருந்தது. இதுதான் சமயம் என்று என் சிறிய தாயார் வீடு, நிலம் முதலியவற்றை விற்றுப் பணமாக்கிக் கொண்டு பிறந்தகம் நழுவி விட்டாள்.

ஒருநாள், பசி காதடைத்தது. மயக்கம் வரும்போல் இருந்தது. அப்படியே ஒரு வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்தேன். படுத்தும் விட்டேன். நான் திரும்பவும் கண்ணை விழித்தபோது ஒரு மெத்தையில் படுத்திருப்பதை உணர்ந்தேன். என்னைச் சுற்றி ஒரு பெரிய கூட்டம் கூடியிருந்தது. நான் கண்ணைத் திறந்து விழித்தபோது அவர்கள் முகத்தில் மகிழ்ச்சி தாண்டவமாடியது. சிறிது சிறிதாக எல்லாம் நினைவுக்கு வந்தன.

ஒரு பெரியவர் என்னிடம் வந்தார். "தம்பி, கொஞ்சம் பால் சாப்பிடுகிறாயா?" என்றார். அவரை உற்றுப் பார்த்தேன். எங்கேயோ அவரைப் பார்த்தமாதிரி இருந்தது. கடைசியில் அவரை எனக்குப் புரிந்து விட்டது. அவர் அந்த ஊர் மிராசதார்! அந்த மிராசதார் வீடுதான் இந்த வீடு! நான் அவரிடம் எல்லாவற்றையும் கூறினேன். அவர் தம்மால் ஆனமட்டும் முயன்று என் சொத்தை வாங்கித் தருவதாகக் கூறினார். ஆனால் அந்தப் பாதகி எங்கேயோ மறைந்து விட்டான்! அதன்பின் என்மேல் அவருக்கொரு அலாதியான அன்பு ஏற்பட்டது. நான் அங்கேயே வளரத் தொடங்கினேன். என்னை பி. ஏ. வரை படிக்கவும் வைத்து விட்டார் அந்த தெய்வம்! அத்தோடு நில்லாமல் அவரது ஏக புத்திரி சந்திராவைக் கல்யாணம் பண்ணி வைத்தார். அதனால் அவருடைய சொத்துக்கு நான் அதிபதியானேன்!

எனக்கு இந்திரா பிறந்தாள். அவளுக்கு வயது பதினேழு ஆன பொழுது அவளைக் கல்யாணம் செய்து கொடுத்து விடவேண்டும் என்று நானும் சந்திராவும் ஆசைப்பட்டோம். அந்த ஆசையிலும் மண்தான் விழுந்தது. சந்திராவும் இறந்து விட்டாள்! பின்னர் நான் என் கதையை இந்திராவிடம் சொல்லி சற்று ஆறுதல் அடைவேன்.

இந்த இடத்தில் அவர் கதையை நிறுத்தினார்! அவராகவே மேலும் சொல்லுவார் என்று எதிர்பார்த்தேன். இரண்டு மூன்று நிமிஷம் மௌனமாக இருந்தார். கடைசியில் நானே "பிறகு என்னவாயிற்று?" என்றேன்.

"பிறகு என்ன, உனக்கும் இந்திராவுக்கும் கல்யாணம் நடந்தது. உனக்கு இந்த வீடு கிடைத்தது" என்றார்.

எனக்கு ஒரு சந்தேகம் அப்பொழுது தான் தோன்றியது. இவர் கூறியதைப் பார்த்தால் இவர் என்னுடைய மாமனாராக அல்லவா இருக்க வேண்டும் போல் தோன்றுகிறதே! ஆனால் இவர் கல்யாணத்துக்கு முன்பே இறந்து விட்டதாக அல்லவா இந்திரா கூறினாள்! ஐயையோ... அப்படியானால் இவர் பிசாசா?—என்ற பயத்தோடு கலந்த எண்ணம் என் மனத்தில் உதித்தது.

"அது சரி, என் கல்யாணத்துக்கு நீங்கள் ஏன் வரவில்லை?" என்றேன் சற்று அசட்டுத் தைரியத்துடன்.

"ஹாஹா, என்னையும் இந்திராவின் கல்யாணம் பார்க்க வொட்டாமல் தான் சந்திரா

கூப்பிட்டு விட்டாளே! நான் எப்படி உன் கல்யாணத்தைப் பார்க்க முடியும்?'' என்று சொல்லியவண்ணம் ஒரே ஓட்டமாக ஓடிப் போய் விட்டார்.

எனக்குப் பயம் பற்றிக் கொண்டது. "ஐயோ, பிசாசு, ஐயோ!'' என்று தொண்டைக் கிழியக் கத்தினேன். என் கூப்பாட்டைக் கேட்டு பத்து நிமிஷத்தில் சுப்பிரமணிய அய்யர் ஓடி வந்தார்.

"என்ன கோபி, என்ன விஷயம்?'' என்றார்.

நான் பயத்துடன் எல்லாவற்றையும் கூறினேன். "கோபி, நான் சொல்லுகிறேன் என்று வருத்தப்படாதே. நீ ஒண்டியாக இருக்கிறாய். அதனால்தான் இம்மாதிரி ஏற்படுகிறது. அதனால் பேசாமல் என் மகள் பத்மாவைக் கல்யாணம் பண்ணிக் கொள்'' என்றார்.

எனக்கு ஒன்றும் தோன்றவில்லை; நான் ஒரு முறை பெருமூச்சு விட்டேன். பிறகு சற்று யோசித்து, நான் என் சம்மதத்தைத் தெரிவித்து விட்டேன்! அவர் முகம் மலர்ந்தது!

* * *

பாவம்! கோபி நன்றாக ஏமாந்து விட்டான். இந்திரா உயிரோடு இருக்கும் பொழுது தன் தகப்பனாரின் கதையை ஸ்ரீமதி சுப்பிரமணியத்துடன் கூறியிருந்தாள். அதை அவன் கணவனிடம் சொன்னாள். அவர் ஒரு பிசாசு வேஷம் போட்டுக் 'கொண்டு கோபியை ஒரு கலக்குக் கலக்கி விட்டார்! கோபிதான் ஒரு பெரிய பயந்தாங் கொள்ளியாயிற்றே! எனவே, சுப்பிரமணியய்யர் காரியத்தில் வெற்றி பெற்று விட்டார்!

மறுநாள் காலை கோபி வெளியே சென்ற பொழுது ஒரு மீசை கீழே விழுந்து கிடந்தது! அதையும் முந்தின நாள் நடந்த சம்பவத்தையும் ஒப்பிட்டுப் பார்த்து, அவ்வளவு தூரம் புரிந்து கொள்ள அவன் மனைவி இந்திராவைப் போல் அவ்வளவு புத்திசாலியா என்ன?

வாழ்க, டி. கே. சி!

கவிமணி தேசிக விநாயகம்

1.
கம்பன் கவியின்
கனியமுதம் ஊட்டிநம்மை

அம்புவியில் தேவராய்
ஆக்கிடுவோன் — நம்பெரியன்

செந்தமிழ்ச் செல்வன்
சிதம்பரநாத நண்பன்

சந்ததம் வாழ்க
தழைத்து.

2.
பாடிப் படித்தமுதம்
பாவில் வடித்தெடுத்து

நாடி நமக்குதவும்
நல்லறிஞன் — நீடுபுகழ்

செய்ய குணசீலன்
சிதம்பர நாதவள்ளல்

வையமிசை வாழ்க
மகிழ்ந்து.

3.
பாவின் சுவையறிந்து
பாவலரைப் பாராட்டிய

ஆவலோடு போற்றும்
அருளாளன்—மேவுமன்பர்

சித்தம் மறவாச்
சிதம்பரநாத அண்ணல்

நித்தமும் வாழ்க
நிலைத்து.



தினசரி தவறாமல் "க்ருஷென்" உட்கொண்டு வந்ததால் வலிகளினின்று நான் பெற்றுள்ள நிவாரணம் மிகவும் போற்றத் தக்கது என்பதை அவசியம் உங்களுக்குத் தெரிவிக்க வேண்டியிருக்கிறது. பல வருஷங்களாக முதுகு வலியால் அவஸ்தைப் பட்டதில், என்னும் நினைத்துக் கூடப் பார்க்க மாட்டாத அளவுக்கு நோயின் பொருட்டு விடுமுறை பெற்று வந்தேன். பலவிதமான மின்சார சிகிச்சை, நிவாரண-தேகாப்பியாசங்கள் முதலியன செய்தும், "க்ருஷென்" மார்க்கத்தைப் பின்பற்றும்வரை அவ்வலிகள் இருந்து கொண்டே இருந்தன. இப்பொழுது நான் முற்றிலும் புதிய மனிதனாயிருப்பதாக உணர்கிறேன்."—W. R.

தீராத முதுகு வலிக்கு மூல காரணம் உட்புற அவயவ சம்பந்தமானது. மூத்திர கோசங்கள் கழிவுப் பொருள்களை உடலிலிருந்து சரிவர வெளியேற்றாவிடில் விஷ அமிலங்கள் ரத்தத்தில் ஊறிக்கலந்து முதுகு வலியை உண்டாக்குகின்றன. க்ருஷெனிலுள்ள ஆறுவித முக்ய உப்புக்கள் மந்தித்த மூத்திர கோசங்களை மெதுவாக ஊக்கி நன்கு இயங்கச் செய்வித்து ரத்த ஓட்டத்திலுள்ள அசுத்தங்களை துரிதமாக சுத்திகரிக்கின்றன. தினசரி தவறாமல் கொஞ்சம் "க்ருஷென்" உட்கொண்டு வந்தால் முதுகு வலி ஒரு நாளும் திரும்பி வராமல், ஒழிந்து போகும்.

"க்ருஷென்" உங்கள் ஆரோக்கியத்திற்கும் ஆனந்தத்திற்கும் உதவுகிறது

KSA—2



உருகிய உள்ளம்

விஜயம்

மலைகள் சூழ்ந்திருந்த அந்த ஊரில் பனி அதிகம். இரவு முழுதும் பனி விழுந்து கொண்டிருக்கும். காலையில் எழுந்து பார்த்தால் அவைகள் இளம் வெய்யிலில் பளிங்குக் கட்டிகள் போல் தோன்றும். வருஷத்தில் சில மாதங்கள் தான் அப்பிரதேசத்தில் வெய்யிலடிக்கும்.

அந்தச் சிறு கிராமத்தில் சின்னனும் அவன் மனைவியும் ஒரு சிறு குடிசை போட்டுக் கொண்டு வசித்து வந்தனர். அந்தக் குளிர் நிறைந்த நாட்டில் வளரக் கூடிய பயிர் வகைகளைப் பயிரிட்டு அதைக் கொண்டு ஜீவனம் செய்து வந்தனர்.

குளிர் கடுமையாக இருந்தாலும் சின்னனையும் அவன் மனைவியையும் பொறுத்த வரையில் சிரமமாயில்லை. சிறு வயது முதல் அங்கேயே இருந்து பழகினவர்களாதலால் அந்தக் கடும் குளிர் அவர்களைப் பாதிக்கவில்லை. அவர்கள் சர்வ சாதாரணமாய் இருந்து வந்தனர்.

ஆனால் அவர்களுடைய நிம்மதியான வாழ்க்கையில் அவர்களைப் பெரிதும் பாதிக்கும் விஷயமும் இருக்கத்தான் செய்தது. அதுதான் குழந்தையில்லையே என்ற வேதனை. அந்த வேதனை காரணமாகச் சின்னன் மனைவி ஊரில் உள்ள குழந்தைகளிடமெல்லாம் மிகவும் அன்பு பாராட்டி வந்தாள். சதா அவள் குழந்தைகளுடன் தான் இருப்பாள்; குழந்தைகளுக்குக் கதை சொல்லுவாள்; தானும் குழந்தையாகிக் குழந்தைகளோடு குழந்தையாக உற்சாகமாக விளையாடுவாள்.

அன்று மாலை குழந்தைகள் எல்லோரும் சின்னன் வீட்டுத் தோட்டத்தில் கூடிவிட்டனர். முதல் நாள் விழுந்த கடும் பனி கட்டி கட்டியாக எங்கும் நிறைந்திருந்தது. பூரண சந்திரன் வீசிய நிலவு ஒளியில் அந்தப் பனிக்கட்டிகள் விநோதமாகத் தோற்றம் அளித்தன.

குழந்தைகளுக்கு அப்பனிக் கட்டிகள் விளையாட்டுப் பொருள்களாகி விட்டன. அவற்றை வாரியெடுத்து ஒருபுறமாக மலைபோலக் குவித்துக் குழந்தைகள் உற்சாகமாகக் கை தட்டிக் கூக்குரலிட்டனர்.

அன்றைக்கு என்னவோ சின்னன் மனைவிக்கு மன வருத்தம் அதிகமாயிருந்தது. அந்த வேதனை மிகுதியில் அவள் மிகவும் சோர்ந்து போயிருந்தாள்.

அவள் சோர்வைக் கண்டு குழந்தைகளும் சோர்ந்து போய்விடவில்லை.

"மாமி, நீங்கள் இந்தப் பனிக்கட்டிகளை வைத்துக் கொண்டு எங்களுக்கு வீடு, தெரு, ஏரி, குளம், மலை எல்லாம் கட்டித் தாருங்கள்!" என்று ஒரேயடியாகச் சூழ்ந்து கொண்டு குழந்தைகள் தொந்தரவு செய்ய ஆரம்பித்தனர்.

ஆனால் அவள் மனம் வீடு கட்டுவதில் செல்லவில்லை. அவள் ஒன்றின் மேல் ஒன்றாகப் பனிக் கட்டிகளை வைத்துக்



கொண்டிருந்த போது அது ஒரு அழகிய குழந்தையாக உருவெடுத்தது. அந்தப் பனிக் குழந்தையைப் பார்த்த குழந்தைகள் எல்லோரும் மிகவும் உற்சாகமாகக் கை தட்டிக் குதிக்க ஆரம்பித்தனர்.

சின்னான் மனைவியின் கண்களில் ஆனந்தக் கண்ணீர் ததும்பியது. அவள் இந்த உலகத்தையே மறந்து விட்டாள். ஆனந்த மயமான ஒரு புது உலகத்தில் அவள் நினைவு நின்றது; அவள் தன்னை மறந்த நிலையிலிருந்தாள்.

"தெய்வமே! இந்தக் குழந்தை இப்பொழுது உயிர் பெற்று விடலாகாதா?" என்று நினைந்து உள்ளம் பொருமினாள்.

என்ன ஆச்சரியம்! அந்தப் பனிக் குழந்தை உடனே உயிர் பெற்றுவிட்டது!

சின்னான் மனைவி அடைந்த சந்தோஷத்துக்கு எல்லையில்லை. அந்தப் பனிக் குழந்தையை வாரியெடுத்துக் கொண்டு உள்ளே வந்தாள்.

சின்னான் அப்பொழுதுதான் வந்தான்.

அவன் மனைவி சந்தோஷம் தாங்காமல் தோட்டத்தில் தான் குழந்தைகளுடன் விளையாடிக் கொண்டிருந்த போது நிகழ்ந்ததைச் சொன்னாள்.

சின்னானும் அவன் மனைவியும் அந்தக் குழந்தையை வைத்துக் கொண்டு கொஞ்சி விளையாடி மகிழ்ந்தனர். அன்று இரவு அவர்களுக்குத் தூக்கமே வரவில்லை.

விடியும் தருணம் வந்தது. அதிகாலையில் பறவை யினங்கள் தங்கள் இனிமையான குரலில் கூவி மகிழ்ந்தன.

அப்பொழுது பனிக் குழந்தை, "அம்மா, என்னைத் தோட்டத்துக்கு அழைத்துக் கொண்டு போ!" என்று கூறியது.

சின்னானும் அவன் மனைவியும் குழந்தையை எடுத்துக் கொண்டு தோட்டத்துப் பக்கம் போனார்கள்.

சூரியன் உதயமாகத் தொடங்கியது. புல் நுனிகளின் மீது விழுந்திருந்த பனித் துளிகள் பள பள வென்று வைரத் துகள் போலப் பிரகாசிக்கத் தொடங்கின.

சூரிய ஒளியில் அந்தப் பனிக் குழந்தையும் பளீர் என்று ஒளி வீசியது.

சட்டென்று கண் விழித்தாள் சின்னான் மனைவி. இப்பொழுது வெய்யில் கொஞ்சம் சுரீர் என்று உறைத்தது.

அவளுக்கு ஒரே அதிசயமாயிருந்தது. தோட்டத்தையடுத்த பின்புறத் தாழ்வாரத்தில் அவள் படுத்துக் கொண்டிருந்தாள்.

அடுத்த நிமிஷம் அவள் "ஹா!" வென்று கதறினாள்.

அவள் கணவன் வாசலிலிருந்து உள்ளே வந்து மனைவியின் குரல் கேட்டு, "என்ன என்ன! ஏன் அப்படிக் கதறினாய்?" என்று கேட்டுப் பதறினான்.

"ஐயோ, தெய்வம் நம் மீது இரக்கப் பட்டுக் கொடுத்த பனிக் குழந்தையைக் காணவில்லையே! எந்தப் பாவி எடுத்துச் சென்று விட்டானோ!" என்று அவள் அலறினாள்.

"பாவம், நேற்றுச் சாயங்காலத்திலிருந்து நீ இந்தத் தோட்டத்துப் பக்கமே இருந்து விட்டாய். பனிக் கட்டிகளைக் கொண்டு குழந்தையைச் சிருஷ்டித்து மகிழ்ந்து என்னிடமும் காட்டினாய். பிறகு இந்த வெளித் தாழ்வாரத்திலேயே குழந்தைப் பொம்மையை வைத்து விட்டு அதன் பக்கத்திலேயே நீயும் படுத்து அயர்ந்து தூங்கி விட்டாய். நேரம் ஆகிவிடவே குழந்தைகள் வீட்டுக்குப் போய் விட்டன. உன்னை எழுப்ப மனம் வரவில்லை. நீ என்னவோ கனவு கண்டிருக்கிறாய்!"

"கனவு கண்டேனா? அது சரி. பனிக் குழந்தைப் பொம்மை எங்கே?" என்று ஆத்திரத்தோடு கேட்டாள்.

சின்னான் இலேசாகச் சிரித்து விட்டு, "வெய்யிலைக் கண்ட பனிக் கட்டி உருகாமல் இருக்குமா? பனிக்கட்டிக் குழந்தை உருகி விட்டது! ஆனால் நீ மனம் உருகிக் கடவுளை வேண்டியது வீண் போகவில்லை. இப்பொழுதுதான் கிராம முனிசீப்பு ஒரு அழகிய அநாதைக் குழந்தையைக் காவற்காரனிடம் கொடுத்து அனுப்பினார். நம்மை வளர்க்கச் சொல்லியிருக்கிறார்!" என்று ஆனந்தம் தாங்காமல் கூறிக் கூடத்துப் பக்கம் ஓடினான். அவன் மனைவியும் கூடவே ஓடினாள்.

தங்க விக்கிரகம் போன்ற அழகிய குழந்தை களங்கமற்ற முகத்தோடு தூங்கிக் கொண்டிருந்தான். சின்னான் மனைவி குழந்தையிடம் பாய்ந்து ஓடி அதை அள்ளி எடுத்து அணைத்துக் கொண்டாள். சின்னான் ஆனந்த பரவசமாக நின்றான்.

வட்ட மேஜை

ஏமாற்ற முடியாது!

'ராஜாஜி அவர்கள் நம் சென்னை மாகாணத்துக்குத் தலைமை ஏற்றது, மக்கள் செய்த பெரும் பாக்யமாகும். மந்திரி பதவி ஏற்று அவர் செய்திருக்கும் சாதனைகள் அபாரமானவை'' என்று எல்லோரும் சொல்லுகிறார்கள். இம் மாகாணத்தவர் மட்டுமல்ல; பிற மாகாணத்தவர் கூட—ஏன், பிற நாட்டவர் கூடத்தான்.

''மாஞ்செஸ்டர் கார்டியன்'' அப்படித்தான் எழுதிற்று; அட்லாய் ஸ்டீவன்ஸனும் அதைத்தான் சொன்னார்; போன வாரம் கேஸி கூடச் சொன்னார். நேற்றைய முன் தினம் நம் மாபெருந் தலைவர் பண்டிட்ஜி கூடச் சொன்னார்.

ஆனால், தமிழ் நாட்டின் சாபக்கேடோ என்னமோ, சில சுயநலவாதிகள் காங்கிரஸ் போர்வையில், நம்மிடையே நடமாடி வருகிறார்கள். எந்த எந்தத் தனி மனிதரின் ஒப்பற்ற சேவையால், இம்மாகாணம் இருள் நீங்கி ஒளி பெற்று விளங்குகிறதோ, அம் மகாபுருஷரை, பதவியிலிருந்து விலகத் தூண்டும் செயல்களில் ஈடுபட்டு வருகிறார்கள்.

ராஜாஜி தலைமை ஏற்றபின் காங்கிரஸ் கட்சியும், தேசிய ஆர்வமும் தமிழ் நாட்டில் புத்துயிர் பெற்றன. ஆயிரக் கணக்கான இளைஞர்கள் அங்கங்கே தேசிய சங்கங்களை நிறுவி, உற்சாகமாகப் பொதுப்பணியில் ஈடுபட முன்வந்தார்கள். ஏதோ காரணத்தால் இம்மாகாண காங்கிரஸ் ஸ்தாபனம் செய்யத் தவறிவிட்ட பிரசார வேலைகளை, தம் சொந்த முயற்சியால் இவ்வாலிபத் தொண்டர்கள் செய்து வந்தார்கள். ஆட்சிக்கு இன்னல் விளைவிப்பதையே இலட்சியமாகக் கொண்ட சமூக விரோத, தேசத் துரோகக் கட்சிகளுக்கு எதிர் நின்று சேவை செய்தார்கள். இம்மாகாண அரசியல் சீர்கேட்டைக் கண்டு மனம் வெதும்பி விலகி நின்ற பழம் பெரும் தேச பக்தர்களும் இதை யெல்லாம் கண்டு மீண்டும் உற்சாகமும் உவகையும் கொண்டார்கள்.

உண்மை இப்படி இருக்கும்போது, ராஜாஜிக்குத் தொண்டர்களிடமும் மக்களிடமும் ஆதரவு இல்லாதது போல சில தனி மனிதர்கள்—காங்கிரஸ்காரர்கள் என்று தங்களை அழைத்துக் கொள்கிறவர்கள்தான்—பொய்ப் பிரசாரம் செய்து, புகார் கடிதத் தொண்டில் ஈடுபட்டது, தமிழ் நாட்டின் பெருமைக்கே இழிவாக இருக்கிறது.

பொய்யும் புனைசுருட்டும் தமிழ் நாட்டில் என்றுமே பலித்ததில்லை. உண்மையைத் திரித்துக் கூறித் தமிழர்களை யாரும் ஏமாற்றிவிட முடியாது. அவ்வாறு ஏமாற்றுவதாக எண்ணிக் கொண்டிருப்பவர்கள் தாங்கள்தான் ஏமாந்து போவார்கள். கடவுள் அவர்களுக்கு நல்ல புத்தியை அருளட்டும்.

சென்னை
3-11-53

கே. எஸ். ராஜகோபாலன்
கார்யதரிசி, ஸிடி சென்ட்ரல் லீக்

அவர் மகிழ்ச்சி

சென்ற 18-10-53 ''கல்கி'' இதழில் விசேஷ பிரதம இஞ்ஜினியர் ஸ்ரீ ஏ. ஆர். வெங்கடாச்சாரியின் ''தண்ணீர் புகார் — அவசரம்'' என்ற கடிதத்தைப் படித்துப் பார்த்தேன். ஓர் பெரிய அதிகாரி ''கல்கி'' பத்திரிகையை வாரம் தவறாமல் படித்துப் பார்த்துப் பொதுமக்களின் குறைகளுக்குச் செவி சாய்த்துத் தக்க பதில் எழுதியிருப்பதைப் பார்த்து மிக்க மகிழ்ச்சி யடைகிறேன்.

அதே இதழில் ''நெற்பயிர்கள் காய்கின்றன'' என்ற தலைப்பு கொண்ட எனது கடிதமும் பிரசுரமாகி யிருக்கிறது. அதை நான் எழுதிய சில தினங்கள் கழித்து எங்கள் கிராமங்களில் (வெண்ணார் டிவிஷன்) தேவையான தண்ணீர் வந்து பாய்கின்றது.

சாட்டியக்குடி
28-10-53

ஏ. வி. நாராயணசாமி

கைத்தறித் துணி!

நீங்கள் சென்றவார இதழைப் படித்தேன். தாங்கள் ''கைத்தறித் தீபாவளி'' என்ற தலைப்பில் எழுதியது மிகவும் நன்றாகவும் உண்மையாகவும் இருந்தது. இதுவரையிலும் நான் மில் வேஷ்டிகளையே வாங்கியவன். ராஜாஜியின் கோரிக்கையை இனிமேலாவது நம்மால் நிறைவேற்றவேண்டும் என்று நினைத்து சுபாஷ்சந்திரபோஸ் ரோடிலுள்ள கூட்டுறவு உற்பத்தி அண்டு விற்பனை சொஸைட்டிக்குப் போனேன். அதிக மக்கள் துணிகளை வாங்கக் குழுமியிருந்தனர். நான் கைத்தறி வேஷ்டிகளில் ஒன்றையாவது வாங்க வேண்டுமென்று நினைத்து ஒரு அறையிலுள்ள வேஷ்டி ஒன்றைக் கிழித்துத் தருமாறு கேட்டேன். ஆனால் அங்கிருக்கும் விற்பனையாளருள் ஒருவர் இன்று அதில் கிழித்துத் தர முடியாது. வேண்டுமானால் நாளை வாருங்கள் என்று சொன்னதைக் கேட்டவுடன் அப்படியே அயர்ந்து விட்டேன். நாளைக்காகத்தானே இன்று போய் வாங்க நினைத்தேன். தவிர, நாளைதான் தீபாவளி ஆயிற்றே எவ்வாறு நான் விடியற்காலை வந்து வாங்கி உடுத்த முடியும். வாங்காதவன் வாங்கச் சென்றேன். பரிசு இது கிடைத்தது.

மதராஸ்
4—11—53

சா. ஜெகந்நாதன்

தீபாவளி மலர்

இவ்வருட 'கல்கி' தீபாவளி மலரைத் தமிழ் கலைக் களஞ்சியமாக ஆக்கி தந்து விட்டீர்கள். மலரைக் கண்ணுற்ற மக்களின் அகமும் முகமும் மலரும் என்பதில் சிறிதளவும் சந்தேகமில்லை.


'கல்கி' தீபாவளி மலர் ஓர் கலைக் களஞ்சியம். கனுவின் 'குவியும் கமலம்', 'நிவேதனம்', மணியத்தின் 'இரட்டைச் சித்திர மடல்' 'இலங்கைக் கலை மடல், சந்திராவின் 'பழந்தமிழ்க் காட்சிகள், பாலு சகோதரர்களின் 'லட்சுமணன் அன்பு' முதலியன கண்ணுக்கும் கருத்துக்கும் நல்விருந்து. அறிவின் சிகரமாக விளங்கும் தலைவர் ராஜாஜியின் 'பாதுகா பட்டாபிஷேகம்' உபநிஷத்து கதைபோல் விளங்குகின்றது. டி. கே. சி. அவர்களின் கட்டுரை, சுவாமி சுத்தானந்த பாரதியாரின் நிப்பன் தேச வருணனை முதலியவை சிறந்து விளங்குகின்றன.

ஆக கதைகளும், கட்டுரைகளும், சித்திர விசித்திரங்களும் இவ்வருடம் மிக நன்றாக அமைந்து விட்டன. அடுத்த வருடம் இதைவிடச் சிறந்த முறையில் எப்படித் தயாரிக்கப் போகிறீர்கள்!

கடைசியாக, பல வருடங்களுக்குப் பின்னர் 'அகில உலக தவுல் ஏக சக்ராதிபதி ஜயம்பேட்டை கந்தப்பனை' நீங்கள் இவ்வருடம் சந்தித்தது நல்லதாகப் போய்விட்டது. இல்லாவிட்டால் 'சிவக்கொழுந்து' 'வீணை பவானி' போன்ற ரெஞ்சிலிக் கதையாக 'நாடகக்காரி' அமையுமா!

சேலம்
7—11—53

சு. இராமமூர்த்தி



சீரளைக் கல் ரஸ்தாவில் மாட்டு வண்டி ஸ்டேஷனை நோக்கிச் சென்று கொண்டிருந்தது, 'கர கர' என்ற சப்தத்துடன். வண்டிக்குள் இருந்த கிருஷ்ண ஸ்வாமியும் கோதையம்மாளும் ஏதோ யோசனையில் ஆழ்ந்திருந்தனர். அதிலும் கோதையம்மாள் தான் ஏதேதோ யோசித்து மூளையைக் குழப்பிக் கொண்டிருந்தாள். அன்று வந்திருந்த கடிதமும் தந்தியும்தான் காரணம்.

கிருஷ்ணஸ்வாமி சர்க்காரில் பெரிய உத்தியோகத்திலிருந்து சமீபத்தில் தான் ஓய்வு பெற்றவர். கிராமத்தில் அருமையான வீடும், நல்ல விளைச்சலுள்ள பூமியும் அவருடைய சௌகரியமான வாழ்வுக்கு உதவி வந்தன. அவர் பரம ஆசார சீலர். சாந்த குணமும் தர்ம சிந்தையும் பொருந்தியவர்தான். ஆனால் பழைய பழக்க வழக்கங்களிலேயே ஊறினவர். அத்துடன் கொஞ்சம் பிடிவாத குணமும் உண்டு. அந்தச் சமயங்களில் நரஸிம்ம மூர்த்தியாகத்தான் இருப்பார். கோதையம்மாள் கூட அவ் வேளைகளில் அவரை நெருங்கிப் பேசப் பயப்படுவாள்.

கச்சிதமாக ஒரே ஒரு பையனும், பெண்ணும் தான் அவர்களுக்கு. அம்மாளுக்குப் பெண்ணின் மேல் பிரியம் அதிகம்தான் சற்று! ரங்குவுக்கும் அம்புஜத்துக்கும் இடையே வயது வித்தியாசமும் கொஞ்சம் அதிகம்தான். அந்தச் சமயத்தில் நோய்வாய்ப் பட்டுப் படுத்து விட்டாள் கோதையம்மாள். உடம்பு தேற இரண்டு வருஷம் ஆயிற்று. ரங்குவுக்குப் பிறகு பன்னிரண்டு வருஷங்கள் கழித்துப் பிறந்ததினால் அம்புஜத்துக்கு எப்போதுமே பெற்றோரிடத்தில் தனிச் சலுகை உண்டு.

குடும்பம் ஒழுங்கான வழியில் சென்று கொண்டிருந்தது. தந்தையின் கட்டுப்பாட்டுக்கு அடங்கி நடந்து கொண்டிருந்த ரங்கு, அவர் வார்த்தையை மீறி அவருடைய விருப்பத்துக்கு மாறாக நடக்கும் சந்தர்ப்பம் அப்போதுதான் வந்தது. ஆனர்ஸ் வகுப்பில் கடைசி வருஷம் அவன் படித்துக்கொண்டிருந்த சமயம். நல்ல வரன்களாக வந்து கொண்டிருந்தன அவனுக்கு. ஜாதகங்கள் வரும் விஷயம் கேள்விப்பட்ட ரங்கு தனக்கு இப்போதைக்குக் கல்யாணம் வேண்டாமென்றும் படிப்பு முடிந்து உத்தியோகம் ஒன்று கிடைத்த பின் அதைப் பற்றி யோசிக்கலாம் என்றும் சொல்லிவிட்டான். தாயாரும் தகப்பனுமாக அவன் உத்தியோகம் பார்க்க வேண்டிய அவசியமில்லை, இருக்கும் சொத்தே எதேஷ்டம் என்று அவனுக்குப் புத்தி சொல்லி நாலைந்து ஜாதகங்கள் பொருத்தமாக இருப்பதாகவும் லீவுக்கு அவன் வரும்போது பெண்களைப் பார்த்து விட்டு மேற்கொண்டு விவாகத்தை நடத்துவதில் தீவிரமாக இறங்கவேண்டியதுதான் என்றும் சொல்லி விட்டார்கள்.

விஷயம் இவ்வளவு தூரத்துக்கு வந்த பின் ரங்குவின் நிலை ஆபத்தாகப் போய் விட்டது. சமாசாரம் இதுதான். அவன் படித்த அதே கல்லூரியில் சரஸ்வதி என்ற ஒரு பெண் படித்துக் கொண்டிருந்தாள். ஒரு நாள் நூல் நிலையத்தில் சந்தித்து ஏதோ ஆரம்பித்த பேச்சு வளர்ந்து கடைசியில் இருவருக்கு மிடையில் இருந்த அன்புப் பிணைப்பு இறுக்கமாயிற்று. தனக்குமேல் போய் விடப் போகிறதே என்று பயந்து ரங்கு துணிந்து தகப்பனருக்கு விஷயத்தை எழுதிவிட்டான். அவ்வளவுதான்! ஊரில் ஒரே ரகளை. பையனைக் கண்டபடி தாயாரிடம் திட்டிவிட்டுக் காரமாகவே அவனுக்கும் ஒரு கடிதம் எழுதினார் கிருஷ்ண ஸ்வாமி. தகப்பனுக்கு அடங்கின பிள்ளையாகிய ரங்குவா இப்படி இருக்கிறான் என்ற ஆச்சரியத்தால் கோதையம்மாள் வாயடைத்துப் போனாள்.

சிறிது நாள் கழித்துப் பொறுமையாக ரங்கு நிதானம் தவறாமல் தந்தைக்கு இன்னொரு கடிதம் எழுதினான். "உன் பிள்ளை எழுதி யிருக்கிறான் பாரடி!" என்று கோபத்துடன் அதைப் படித்துக் காண்பித்தார் கிருஷ்ணஸ்வாமி... "சரஸ்வதி நல்ல உத்தமமான குடும்பத்தில் வந்த பெண்தானப்பா. நல்ல படிப்பு, குணம், பழக்க வழக்கங்கள் உண்டு. எங்கள் கல்லூரியிலேயே அவள்தான் மிகவும் அடக்கமான பெண். தாய் தந்தை கிடையாது. மாமாவின் ஆதரவில் இருந்து வருகிறாள். ஆனால் ஏழை. ஆதரவற்றவள். குணவதியா விருப்பாளா என்று பார்த்தோமானால் அவளைவிட வேறு பெண் இருப்பாளா என்று தோன்றும்......"

கடிதத்தைப் படித்து முடிக்காமலே கிருஷ்ணசாமி இரைய ஆரம்பித்தார். "உன் பிள்ளையின் சமர்த்தைப் பார்த்தாயா! லக்ஷணமாக, இந்த மானக்கேடான காரியத்தைக் கடிதம் எழுதியிருக்கிறான்......"

"அவனை வேண்டுமானால் ஒரு நடை இங்கு வரவழைத்துப் புத்தி சொன்னால் என்ன!" என்றாள் கோதையம்மாள் பயத்துடன்.

"ஆமாம், நேரில் சொன்னால் மாத்திரம் கேட்டுவிடப் போகிறானாக்கும் உன் பிள்ளை! கழிசடை, கிடக்கிறான், விட்டுத் தள்ளு! பிள்ளையே இல்லை என்று இருந்து விடுகிறேன்" என்றார் அவர் விரக்தியுடன்.

விஷயம் முற்றிப் போய்விட்டது! அந்த வீவில் ரங்குவுக்கும் சரஸ்வதிக்கும் திருநீர்மலை ஸ்வாமி சன்னதியில் அவன் பெற்றோர் சம்மதம் இல்லாமலேதான் கல்யாணம் நடந்தது. அவன் பெற்றோர்கள் வரவே இல்லை. கோதையம்மாளுக்குக் கொஞ்சம் ஆசைதான். ஆனால் கணவருக்குப் பயந்து கொண்டு சும்மா இருந்து விட்டாள்.

கல்யாணம் முடிந்ததுமே சரஸ்வதியின் மாமா தம் பொறுப்பு முடிந்தது என்று கை கழுவிக் கொண்டு விட்டார்

இந்த அமர்க்களத்தில் ரங்குவால் பரீட்சையில் நல்ல மதிப்புடன் தேற முடியவில்லை. சாதாரண இரண்டாவது வகுப்புத்தான் வந்தது. மேற்கொண்டு செய்ய வேண்டியதை நினைத்துப் பார்த்தபோது அவன் மலைத்துத்தான் போனான். தகப்பனாரின் விரோதம் வந்தாகி விட்டது. கல்யாணம் முடிந்து ஆசீர்வாதம் பெற்றுக் கொள்ள அவன் ஊருக்குப் போனபோது ஊரே கூடிக் கொண்டு இவர்களை அதிசயமாய்ப் பார்த்துப் பல விதமாகப் பேசிற்று. பிடிவாதமாகப் பிள்ளையின் பக்கம் கூடத் திரும்ப மாட்டேன் என்று கூறி விட்டார் கிருஷ்ணசாமி. கோதையம்மாள் அழுதாள். பாவம்! வருத்தத்துடன் ஊர் திரும்பினான் ரங்கு.

ரொம்பக் கஷ்டப்பட்டு ரங்குவுக்கு எண்பது ரூபாயில் ஏதோ ஒரு கம்பெனியில் வேலை கிடைத்தது. சரஸ்வதி ரொம்பப் பாங்காகவும், சிக்கனமாகவும் குடும்பத்தை நடத்தி அதன் கவலைகள் ரங்குவை அதிகமாகப் பாதிக்காத வண்ணம் பார்த்துக் கொண்டாள். தங்களுடைய பரஸ்பர அன்பில் அவர்கள் கஷ்டங்களை எல்லாம் உதறித் தள்ளிவிட்டு எப்படியோ சந்தோஷமாக வாழ்க்கையை நடத்தி வந்தார்கள். ஆனால் அது கொஞ்ச காலம்தான். இதற்குள் அவர்களுக்கு இரண்டு குழந்தைகள் பிறந்து விட்டிருந்தன. குடும்பத்தில் கஷ்டமும் கொஞ்சம் தலை காட்ட ஆரம்பித்தது. தரித்திரம் தாங்காமல் ரங்கு சிடுசிடு வென்று விழ ஆரம்பித்தான் அவள் மீது. அதை அவள் பொறுமையுடன் சகித்துக் கொண்டு வந்தாள்.

இதற்குள் அம்புஜத்துக்கும், திருச்சியிலேயே பெரிய வக்கீலும் பணக்காரருமான ஒருவரின் பையனுக்கும் கல்யாணம் நடந்தது. மனம் தாங்காமல் அம்புஜத்தை விட்டுக் கணவருக்குத் தெரியாமல் கல்யாண விஷயத்தைப் பற்றி ரங்குவுக்குக் கடிதம் எழுதிப் போட்டாள் கோதையம்மாள். ரங்குவுக்கும் சரஸ்வதிக்கும் போகவேண்டுமென்று ஆசைதான். ஆனால் போன இடத்தில் ரோஷக்காரரான தந்தையிடத்தில் அனாவசியமாக அவமானப்பட வேண்டுமே என்ற எண்ணம் தோன்றவே சும்மா இருந்து விட்டான். அவரை எப்படிச் சமாதானப்படுத்துவது என்றுதான் புரியவில்லை அவர்களுக்கு!

வளை காப்பு, சீமந்தம் எல்லாம் ஆகிவிட்டது அம்புஜத்துக்கு. ஆனால் அவள் கணவன் வீட்டார் அவளிடமிருந்த அன்பு மிகுதியில் அவளைப் பிரசவத்துக்கு அங்கேயே வைத்துக் கொள்வதாகவும், அவள் பெற்றோரையும் தங்களுடன் வந்து இதைச் சாக்கிட்டுக் கொஞ்சம் நாள் இருக்கும்படியும் வற்புறுத்தினார்கள்.

சுய மரியாதையுள்ள அவர் உடனே தம் சம்பந்திக்குப் பெண் அங்கேயே இருக்கட்டும் என்றும் பிரசவ சமயத்தில் தாங்கள் வருவதாகவும் எழுதி விட்டார். கோதையம்மாள் பாடு, பாவம் எப்போதும் அவதிதான். யாருக்கும் சொல்ல முடியாமல் அவள் தவித்தாள்!

அன்று காலைதான் அந்த இரண்டு கடிதங்கள் வந்தன. ஒன்று அம்புஜத்தினிடமிருந்து: "டாக்டர் இன்னும் பத்து நாட்களில் பிரசவம் ஆகிவிடும் என்கிறார். நீ இன்னும் வரமாட்டேனென்கிறாயே! எனக்கு ரொம்பப் பயமாயிருக்கிறது. அப்பாவின் மனம் ஏன்தான் இப்படிக் கல்லாக ஆகிவிட்டதோ தெரியவில்லை" என்று அவள் எழுதியிருந்தாள். ரங்குவிடமிருந்து வந்த கடிதத்தைப் பார்க்காமலேயே கிழித்து விட்டார் கிருஷ்ணஸ்வாமி! அவருடைய கோபம் இன்னும் ஆறவில்லை.

அவர் வெளியே போனபின் கோதையம்மாள் கிழிந்த துண்டுகளை எல்லாம் பொறுக்கி எடுத்துப் பக்கத்து வீட்டுப் பெண்ணை விட்டு வாசிக்கச் சொன்னாள். சரஸ்வதி எழுதியிருந்தாள்...... "எங்களை நீங்கள் மன்னிக்க வேண்டும். பெரியவர்களாகிய உங்கள் மனம் நோக நடந்து கொண்டோமே என்று அவர் கூட வருந்தப் படுகிறார். குழந்தைகள் சீதாவும், ரமணியும் 'பாட்டியைப் பார்க்கலாம், இப்போதே வா' என்று கட்டி இழுக்கிறார்கள். இந்தச் சமயத்தில்......எனக்கு எழுதக் கூடக் கூச்சமாக இருக்கிறது......ஆறுமாதமாகி விட்டது. அங்கு வந்திருந்து தங்களுக்குப் பாத சேவை செய்யக் கொடுத்து வைக்காத பாவியாகிய எனக்கு, கொஞ்ச நாள் இங்கு வந்திருந்தாவது அந்தப் பாக்யத்தை அளிக்குமாறு தங்களைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன்......"

கோதையம்மாள் அம்புஜத்தின் கடிதத்தைப் படித்துக் கண்ணீர் வடித்தாள். சரஸ்வதியின் கடிதத்தைப் படிக்கக் கேட்டு அங்கலாய்த்தாள். ஆனால் அவள் கணவர் மனம் அவளுக்குத் தெரியாதா என்ன? அவர்தான் "ராத்திரி வண்டியில் திருச்சிக்குப் பிரயாண ஏற்பாடுகளெல்லாம் செய்" என்று சொல்லி விட்டுப் போய்விட்டாரே! பெண்ணுக்கு ஆசையாக என்னென்னவோ அன்று முழுவதும் செய்து கொண்டிருந்தாள். இடையிடையே சரஸ்வதியின் கெஞ்சும் குரல் தொலைதூரத்திலிருந்து அவளது இதயத்தில் கேட்கும். அப்படியே பிரமித்து உட்கார்ந்துவிடுவாள்.

சாயந்திரம் காப்பி சாப்பிட்டபின் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு கணவரிடம் ரங்குவின் வீட்டு நிலைமையைப் பற்றிச் சொன்னாள் கோதையம்மாள். அவர் உடனே உஷ்ணமாக "ஏன்! அவனுக்கு உடம்புக்கு வந்தால் நீதான் போய்த் தாங்க வேண்டுமோ? யாரைக் கேட்டுக்கொண்டு அவன் கல்யாணம் செய்து கொண்டான்! நன்றாக அனுபவிக்கட்டும்" என்றார்.

இப்படியா ஒரு தந்தையின் மனம் மாறிவிடும் என்று எண்ணினாள் கோதை. ஆனால் அதற்கு மேல் வாய் திறக்கவில்லை.

அப்போதுதான் தந்தி வந்து சேர்ந்தது: "அம்புஜத்தை ஆஸ்பத்திரியில் சேர்த்திருக்கிறது. உடனே புறப்பட்டு வரவும்."

கோதையம்மாள் பதறினாள், பெண்ணைப் பார்க்க வேண்டுமென்று.

ரயில் புறப்படுவதற்கு ஒரு மணி நேரத்துக்கு முன்னமேயே மாட்டு வண்டி ஒன்றைப் பிடித்துக் கொண்டு ஸ்டேஷனுக்குக் கிளம்பினார்கள் இருவரும். வண்டியில் போகும்போது இருவர் மனமும் குழம்பிக் கிடந்தது. என்ன பேசுவது என்றே தெரியாமல் யோசனையில் ஆழ்ந்திருந்தனர்.

ஸ்டேஷன் வந்துவிட்டது. இருவரும் வண்டியை விட்டுக் கீழே இறங்கினார்கள். மனைவியைச் சமாதானப் படுத்துவதற்காக "அம்புஜத்துக்கு ஒன்றும் இருக்காது. பயப்படாதே!" என்று ஆறுதல் கூறினார் கிருஷ்ணசுவாமி.

கோதையம்மாள் குழம்பினாள். அவள் மனதில் நடந்து கொண்டிருந்த போராட்டத்தைச் சிறிதும் உணராத கிருஷ்ணசுவாமி, "நீ இங்கேயே இரு. நான் போய் டிக்கெட் வாங்கிக் கொண்டு வருகிறேன்" என்று கிளம்பினார்.

"சற்று சும்மா இருங்கள், எனக்கு என்னவோ பண்ணுகிறது!" என்று அப்படியே கீழே உட்கார்ந்தாள் கோதையம்மாள்.

"என்ன என்ன!" என்று பதறியபடியே அவள் அருகில் உட்கார்ந்தார் அவர்.

"ஒன்றுமில்லை! தலையைச் சுற்றியது லேசாக, அவ்வளவுதான்!" என்று மெதுவாகச் சொன்னாள் கோதை அம்மாள்.

"இப்போது எப்படி இருக்கிறது, தேவலையா?"

"தேவலாம், நீங்கள் எடுக்கிற டிக்கட்டைப் பட்டணத்துக்கே எடுங்கள்."

கிருஷ்ணசுவாமி திடுக்கிட்டார்!

"ஏன்?"

"அம்புஜத்துக்காவது பணக்காரப் புக்ககம். அவர்களும் அவளை வைத்துத் தாங்குகிறார்கள். ஆஸ்பத்திரியில் சேர்த்து விட்டார்கள் என்றால் அப்புறம் கவலைப்பட வேண்டிய அவசியமே இல்லை. அங்கு என்னைவிட நன்றாகப் பார்த்துக் கொள்வார்கள். பாவம்! அங்கு குழந்தை சரஸ்வதி என்ன அவஸ்தைப் படுகிறாளோ! அருமையாக வளர்த்த பிள்ளை ஏழையாக, பெரிய குடும்பஸ்தனுக்குக் கஷ்டப்படும்போது வீம்புக்காக நாம் முறைத்துக் கொண்டு என்ன லாபம்! எனக்குப் பேரக் குழந்தைகளைப் பார்க்க வேண்டும் போலிருக்கிறது. அம்புஜத்தைப் பெருமாளும் தாயாரும் பார்த்துக் கொள்வார்கள், நீங்கள் போங்கள் டிக்கட்டு வாங்க! பட்டணத்துக்கு இப்போது வண்டி இருக்குமே!" என்று மூச்சுவிடாமல் ஆவேசத்துடன் பேசினாள் கோதையம்மாள்.

கிருஷ்ணசுவாமி பிரமித்துப் போய் அவளைப் பார்த்தபடியே சற்று நேரம் நின்று விட்டுப் பேசாமல் போனார், சென்னைக்கு டிக்கட் எடுப்பதற்கு!

அட்டைப்படக் கதை

திண்ணன் என்ற மறவன் கதை

கவியரசர் சுப்பிரமணிய பாரதியார்

மதுரையிலே விக்ரம பாண்டியன் அரசு செலுத்தியபோது காலாட் படையிலே திண்ணன் என்று ஒரு மறவன் இருந்தான். அவன் ஒரு நாள் மாலையில் அரண்மனைப் பக்கமாக நடந்து போகையில் உச்சி மாடத்தின் மேலே பாண்டியன் மகளாகிய தர்மலக்ஷ்மி என்ற பெண் பந்தாடிக் கொண்டிருந்ததைக் கண்டு மிகவும் காதல் கொண்டவனாய் அவளை மணம் செய்து கொள்ள வேண்டும் என்று விரும்பினான். அப்பால் அவன் ஒரு சோதிட சாஸ்திரியிடம் போய், "ஒருவன் ராஜாவின் மகளை மணம் செய்து கொள்ள விரும்பினால் அதற்கு எவ்விதமான பூஜை நடத்த வேண்டும்!" என்று கேட்டான்.

"நீ யார்! உனக்கென்ன தொழில்!"

"நான் காலாட்படை மறவன். என் பெயர் திண்ணன்" என்றான்.

இதைக் கேட்டவுடன் சோதிடன் "என்னிடம் கேட்காதே. ஓடிப் போ!" என்று சொல்லித் துரத்தி விட்டான். பிறகு திண்ணன் மீனாட்சியம்மன் கோயிலில் பூஜை செய்யும் குருக்களிடம் போய்க் கேட்டான். அந்த குருக்கள் என்ன செய்தார்! "அப்பா! நீ இன்னும் ஒரு வருஷம் கழித்த பிறகு என்னிடம் வந்து இதைக் கேள். அப்போது மறுமொழி சொல்கிறேன். அதுவரை சொல்ல முடியாது" என்று போக்குச் சொல்லி அவனை அனுப்பி விட்டார்.

பிறகு திண்ணன் ஒரு மந்திரவாதியிடம் போய்க் கேட்டான். அந்த மந்திரவாதி சொல்லுகிறான்:— "தம்பி! பதினாறு பொன் கொண்டு வந்து கொடு. நான் ஒரு பூஜை நடத்தி முடித்து உன் மனோரதம் நிறைவேறும்படி செய்கிறேன்" என்றான்.

திண்ணன் திரும்பிப் போய் விட்டான். அவனிடம் பதினாறு வெள்ளிக் காசு கூடக் கிடையாது. அவன் ஏழைப் பிள்ளை. இதன் பிறகு 'யாரைப் போய்க் கேட்கலாம்' என்று யோசனை செய்து பார்த்தான். "நேரே ராஜாவின் மகளையே கேட்டு விட்டால் என்ன!" என்று அவன் புத்தியில் ஒரு யோசனை ஏற்பட்டது. "சரி, அப்படியே செய்வோம்!" என்று தீர்மானம் பண்ணிக் கொண்டான். அவனுக்குப் பக்கத்து வீட்டிலிருந்த ஒரு பூவாணிச்சியின் மகள் நாள்தோறும் அரண்மனைக்கு மாலை கட்டிக் கொண்டு கொடுத்து வருவது வழக்கம். அந்தப் பெண் திண்ணனுக்கு நெடுநாளாகப் பழக்கம் உண்டு. இவன் என்ன சொன்னாலும் அவள் கேட்பாள் ஆதலால், திண்ணன் ஒரு சிறிய கறுக்கு ஓலையில்,

"மன்னன் மகளே! காலாள் மறவன்
என்ன செய்தால், உன்னைப் பெறலாம்?"

என்ற வாக்கியத்தை எழுதி, அந்த கறுக்கோலையை மிகவும் அழகான ஒரு பூமாலைக்குள் நுழைத்து வைத்து, அந்தப் பூவாணிச்சிப் பெண்ணிடம் கொடுத்து, "நீ இந்த ராஜகுமாரியின் முன்னாலேயே கொண்டுபோய் ஒரு தரம் உதறிவிட்டு மாலையை அவளிடம் கொடு!" என்று சொல்லி அனுப்பினான்.

அவளும் அப்படியே பூமாலையைக் கொண்டு ராஜகுமாரியின் முன்னே ஒரு தரம் உதறிய பின்பு, அதைக் கொடுத்து விட்டுத் திரும்பினாள்.

ராஜகுமாரி அந்த சுருக்கோலை மீது விழுந்து இடப்பதைக் கண்டு அதையெடுத்து வாசித்தாள்:—

"மன்னவன் மகளே! காவலன் மறவன்
என்ன செய்தான், உன்னைப் பெறுவாய்?"

பூவாணிச்சிப் பெண் மாலையை உதறினபோது சுருக்கோலை மீது விழுவதை ராஜகுமாரி பார்த்தாள். பூவாணிச்சிப் பெண் அரண்மனையிலிருந்து தன் வீட்டுக்குத் திரும்பிப் போனவுடனே தின்னன் அவளைக் கண்டு "ராஜகுமாரியிடம் மாலையைக் கொடுத்தாயா?" என்று கேட்டான்.

"ஆம்" என்றாள்.

"உதறினாயா?" என்று கேட்டான்.

"செய்தேன்" என்றாள்.

"சரி" என்று சொல்லிப் போய் விட்டான்.

மறு நாள் காலையில் பூவாணிச்சிப் பெண் வழக்கம்போல் அரண்மனைக்கு மாலை கொண்டு போனாள். அப்போது ராஜகுமாரி அந்தப் பெண்ணிடம் ஒரு சுருக்கோலையைக் கொடுத்து "நேற்று உன்னிடம் மாலை கொண்டு தந்த காவலன் மறவனிடம் இதைக் கொண்டு கொடு" என்றாள்.

பூவாணிச்சிப் பெண் இதைக் கேட்டுத் திகைத்துப் போய் விட்டாள்.

"பயப்படாதே, கொண்டு போ!" என்று சொன்னாள் ராஜகுமாரி.

பூவாணிச்சிப் பெண் சுருக்கோலையைக்கொண்டு தின்னனிடம் கொடுத்தாள். அவன் வாசித்துப் பார்த்தான். அதிலே "தெய்வம் உண்டு" என்று எழுதியிருந்தது.

பின்னொரு நாள் காலாட் படை மறவன் தின்னன் தனியே இருந்து யோசிக்கிறான்:—

"இந்த அரசன் மகள் நம்மைப் பரிகாசம் பண்ண மாட்டாள். தெய்வத்தை நம்பினால் பயன் கிடைக்கு மென்று சொல்லுகிறாள். சரி, அப்படியே நம்புவோம்......அந்தக் காலத்தில் தெய்வம் தவம் பண்ணுவோருக்கு நேரே வந்து வரம் கொடுத்த தென்று சொல்லுகிறார்கள். இந்த நாளில் அப்படி நடப்பதைக் காணோம்...... அடாபோ! பழைய காலமேது! புதிய காலமேது! தெய்வம் எந்தக் காலத்திலும் உண்டு. தெய்வத்தைக் குறித்துத் தவம் பண்ணுவோம். வழி கிடைக்கும்" என்று சொல்லி வனத்துக்குப் போய், அங்கே காய் கனி தின்று சுனை நீரைக் குடித்துக்கொண்டு தியானத்தில் நாள் கடத்தினான்.

அந்தக் காட்டிலே இவனுக்கும் ஒரு வேடனுக்கும் பழக்கம் உண்டாயிற்று. அந்த வேடன் இவனுடைய தவப் பெருமையையும், இவன் முக ஒளியையும் கண்டு இவனிடம் மிகுந்த பிரியம் கொண்டவனாய் இவனுக்கு மிகவும் சுவையுடைய தேனும் கிழங்குகளும் கொண்டு வந்து கொடுப்பான். தின்னன் அந்த வேடனுக்குத் தெய்வ பக்தி ஏற்படுத்தினான்.

ஒரு நாள் அந்த வேடன் தின்னனிடம் ஒரு மூலிகை கொண்டு வந்து கொடுத்து, "இது மிகவும் ரகஸ்யமான மூலிகை. இதைப் பத்திரமாக வைத்துக் கொள். ஒருவன் உடம்பில் எத்தனை பெரிய புண் இருந்தாலும், இந்த மூலிகையில் ஒரு இலையளவு அரைத்துப் பூசினால், புண் இரண்டு ஜாமத்துக்குள் ஆறிவிடும்" என்றான். அதை அவன் பத்திரமாக வைத்துக் கொண்டான்.

தின்னன் குடியிருந்த பர்ணசாலைக்கு அருகே ஒரு பாம்புப் புற்றிருந்தது. அதில் கிழ நாகம் ஒன்று வசித்தது. அதை வேடன் ஒரு நாள் கண்டு கொல்லப் போனான். அப்போது தின்னன்:—

"ஐயோ, பாவம்! கிழப் பாம்பு, அதைக் கொல்லாதே! அது நெடு நாளாக இங்கேயே இருக்கிறது. என்னை ஒன்றும் செய்வதில்லை" என்று சொல்லித் தடுத்து விட்டான்.

பின்னொரு நாள் அந்தப் பாம்பு தனியே செத்துக்கிடந்தது. அந்தப் பாம்பு செத்துப் போன போது கக்கினதோ வேறென்ன விநோதமோ! அந்தப் பாம்புக்கு அருகில் ஒரு பெரிய ரத்தினம் கிடந்தது. அதை நாகரத்தினம் என்று தின்னன் பத்திரப்படுத்திக் கொண்டான்.

அன்று இரவு தின்னன் ஒரு கனவு கண்டான். அதில் அவன் இஷ்ட தேவதையாகிய மீனாட்சி யம்மை தோன்றி "உன்னுடைய தவத்தால் மகிழ்ந்து உனக்கு நாகரத்தினம் கொடுத்தேன், இதைக் கொண்டுபோய் வைத்துக் கொண்டு சௌக்கியமாக வாழ்ந்து கொண்டிரு" என்றாள்.

தின்னன் அந்தக் கனவை நம்பவில்லை.

"நம்முடைய சிந்தனையாலேயே அந்தக் கனவு உண்டாகி இருக்கிறது. தெய்வமாக இருந்தால் ராஜகுமாரி வேண்டும் என்று தவம் செய்ய வந்தவனிடம் நாகரத்தினத்தைக் கொடுத்து வீட்டுக்குப் போகச் சொல்லுமா! சொல்லாது. ஆதலால், இந்தக் கனவு தெய்வச் செய்கை அன்று. நம் மனத்துச் செய்கை" என்று தீர்மானம் செய்து, அந்தக் காட்டிலேயே எப்போதும் போல் தவம் செய்து கொண்டிருந்தான்.

பிறகு ஒரு நாள் அந்தக் காட்டில் விக்ரம பாண்டியன் வேட்டைக்கு வந்தான். அவன் தவக்கோலத்திலிருந்த தின்னனைக் கண்டு, "நீ யார்! இந்த வனத்தில் எத்தனை காலமாகத் தவம் செய்கிறீர்!" என்று கேட்டான்.

'நான் பாண்டி நாட்டு மறவன். என் பெயர் தின்னன். இங்கு பல வருஷங்களாகத் தவம் செய்கிறேன். காலக் கணக்கு மறந்து போய் விட்டது" என்றான்.

"என்னைத் தெரியுமா! நான் பாண்டிய நாட்டு அரசன்" என்று பாண்டியன் சொன்னான்.

"தெரியும்" என்றான் தின்னன்.

அரசன் இந்த மறவனுடைய அழகையும், ஒளியையும் கண்டு வியந்து, "இந்த இளமைப் பிராயத்தில் இவ்வனத்தில் என்ன கருத்துடன் தவம் செய்கிறீர்?" என்று கேட்டான்.

"மதுரை அரசன் மகளை மணம் செய்ய வேண்டித் தவம் செய்கிறேன்" என்றான் தின்னன்.

அரசன் திகைப்படைந்து "அது எங்ஙனம் கைகூடும்! அம்மவோ!" என்றான்.

"மீனாட்சி கேட்ட வரம் கொடுப்பாள்."

"மன்னன் மகளுக்கு நீ என்ன பரிசம் கொடுப்பாய்!" என்று கேட்டான் பாண்டியன்.

"புண்ணைத் தீர்க்க மூலிகையும், மண்ணைச் சேர்க்க நாகரத்தினமும் கொடுப்பேன்" என்று சொன்னான் தின்னன்.

அரசன் அவ்விரண்டையும் தன்னிடம் காட்டும்படி சொன்னான் தின்னன் காட்டினான் வேட்டையிலே புண்பட்ட மானுக்கு அந்த மூலிகையை அரைத்துப் பூசினார்கள். உடனே மான் உடலிலிருந்த புண் தீர்ந்து விட்டது.

மறவன் தின்னனுடைய தவப் பெருமையும், அதனாலே கை கூடிய தெய்வ அருளும் அவன் முகத்திலும், விழியிலும், சொல்லிலும் செய்கையிலும் விளங்குவது கண்டு பாண்டியன் மன மகிழ்ச்சியடைந்தான். அவனுக்கே தனது மகளை மணஞ் செய்து கொடுத்தான். ஆதலால் எதிர் பார்க்கமுடியாத பயன் உலகத்தார் கண்டு வியக்கும் வண்ணமாக ஒருவனுக்குக் கைகூட வேண்டுமானால் அதற்குத் தெய்வ பக்தி உபாயம்.

மனத் திரையிலே!

எம். ஸ்ரீ. சாமி

நடேசனுக்கு எப்போதாவது ஒரு தரம் கடும் ஜுரம் அடிக்கும். பல்லைக் கடித்துக் கொண்டு படுக்கையில் கிடப்பார். சரியாகப் போய் விடும். இது போல எத்தனையோ தடவைகள்.

அன்று மாலை கழனியிலிருந்து வீட்டுக்கு வரும் போதே தலை பாரத்தோடுதான், அயர்ந்து போய் வந்தார். படுக்கையில் விழுந்தார். ஜுரம் நெருப்பாய்ச் சுட்டது. வழக்கம் போலவே நடேசனும், மற்றவர்களும் அலட்சியமாக இருந்து விட்டார்கள். நடு இரவுக்கு மேல் நிலைமை மோசமாகி விட்டது. டாக்டர் உதவி அவசியம் போல் பட்டது. மூன்று மைல் தூரம் வண்டி போய் டாக்டரை அழைத்து வந்தது. டாக்டர் வந்ததும், ஊசி போட்டது தான் நடேசனுக்குத் தெரியும். அதன் பிறகு அவர் உயிர் ஊசலாடிக் கொண்டிருந்தது. டாக்டர் இந்த ஒரு இரவு போனால் எல்லாம் சரியாகி விடும் என்றார்.

அப்பொழுது நடுநிசி; இருள் எங்கும் கவிந்திருந்தது; எல்லாமே அந்தகாரத்தில் மூழ்கிக் கிடந்தது. நடேசன் தாம் இறந்து விட்டதாகவே உணர்ந்தார்.

நாற்பது வருஷ காலம் அவர் இம்மண்ணில் வாழ்ந்தார் என்பதெல்லாம் அந்த நிமிஷம் தேய்ந்த கனவாகி விட்டது. இதற்குக் கட்டியம் கூறுவது போல், அவர் உடல் அங்கே கிடந்தது. உடனே காது செவிடுபடும்படியாக ஒரே ஓலம், ஒரே முகாரி ராகம்தான். உடன் பிறந்த அண்ணன், அக்காள், தங்கை, தொட்டுத் தாலிகட்டிய மனைவி, பெற்றெடுத்துப் பேணி வளர்த்த குழந்தைச் செல்வங்கள், மற்ற உறவினர்கள், உற்ற நண்பர்கள், அனுதாபம் காட்ட வந்த அக்கம் பக்கத்தினர் நூற்றுக் கணக்கில் குழுமி நின்றனர். ஒரு மூலையில் குத்து விளக்கு, அவிந்த அழகுக்கு வெளிச்சம் காட்டி, காற்றோடு தோழமை பூண்டு, படங்காட்டி, அசைந்தாடி எரிந்தது. வத்திகள் புத்தம் புதியனவாய், நீண்ட உருவினவாய் வந்தவைகள் எல்லாம், நெருப்போடு சேர்ந்து, நிமிஷத்துக்கு நிமிஷம் உருவம் குறைந்து புகைந்து கொண்டிருந்தன.

"எட்டுக்கு மெத்தையிலே எழுந்திரீர்கள் என்றிருந்தேன்; பத்துக்கு மெத்தையிலே படுக்கிறீர்களே என்றிருந்தேன்; மோசம் செய்துவிட்டுப் போய் விட்டீர்களே, எனக்கு யார் துணை! என் குழந்தைகளுக்குத் துணை யார்! என்ன செய்யப் போகிறேன்! தெய்வத்துக்குக் கண் இல்லையா! என்னை மட்டும் ஏன் விட்டுவிட்டது!" என்று நடேசன் மனைவி பூங்காவனம் ராகம் போட்டுப் புலம்பிக் கொண்டிருந்தாள்; தாரை தாரையாகக் கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தாள்.

"அப்பா, அப்பா! எங்களை விட்டுவிட்டுப் போய் விட்டாயே! நாங்கள் இனி யாரை அப்பா என்று சொல்லப் போகிறோம்! எங்களை அநாதையாக விட்டுப் போய் விட்டீர்களே, அப்பா!" என்று அவர் குழந்தைகள் அழுதனர்; துடித்தனர்.

"தம்பி! இப்படிப் போய்விட்டாயே! உடம்புக்கு ஒன்றுமில்லை, டாக்டர் வேண்டாம் என்றாயே! கடைசியில் மோசம் பண்ணிவிட்டுப் போய்விட்டாயே! அண்ணன் நானிருக்க, உனக்கு இவ்வளவு சீக்கிரம் வருமா! எனக்கு இனி யார் துணை! பொறுப்பற்று இருந்தேனே! எல்லாப் பொறுப்பையும் என் தலையில் கட்டிவிட்டுப் போய்விட்டாயே! நான் எப்படியடா சமாளிக்கப் போகிறேன்!" என்று நடேசனின் அண்ணன் கதிரேசன் கதறினான்.

நடேசனின் அண்ணி ஒரு பக்கமும் அண்ணன் குழந்தைகள் ஒருபக்கமும் உட்கார்ந்து குமறிக் கொண்டிருந்தனர்.

சேதி கேட்டு, வெளியூரிலிருந்து அக்காள் ஓடி வந்தாள்; தங்கையும் வந்து சேர்ந்தாள்.

"நான் வளர்த்த கண்ணே, மாணிக்கமே, எப்படி உன் மனசு துடித்ததோ! என்னை நினைத்தாயோ! எங்களை விட்டு ஓடிவிட்டாயே, நடேசா! உன்னை எப்பொழுது மறுபடியும் காணப்போகிறேன்!" என்று அக்காள் ஒப்பாரி வைத்து விட்டாள்.

"தீபாவளி மறக்க மாட்டாய்! பொங்கலையும் மறக்க மாட்டாய்! அக்காளுக்கும் தங்கைக்கும் வரிசை வைக்க வருவாயே! உன் மனசு யாருக்கு வரும்! நீ இருக்கிறாய் என்று தெம்பாய் இருந்தேனே. ஏமாற்றிவிட்டுப் போய்விட்டாயே, அண்ணா, அண்ணா, அண்ணா ....!" என்று தங்கை புலம்பினாள்.

புலம்பலோடு, மேற்கொண்டு நடக்க வேண்டிய காரியங்களும் கூடவே நடந்து கொண்டு வந்தன.

"நடேசனா! அவனைப் போல உண்டா! தங்கமானவனாயிற்றே! இருக்குமிடம் தெரியாதே! தப்புத் தண்டாவுக்குப் போகமாட்டான். தானும் பிறருக்குக் கொடுக்க மாட்டான். பிறர் காசுக்கு ஆசை வைக்கமாட்டான். அவன் உண்டு, அவன் வேலை உண்டு என்று தானிருப்பான். வயற்காட்டுக்குப் போய்விடுவான். கழனியே கதி என்று கிடப்பான். காடு திருத்தி, கரம்பையும் வளம் செழிக்கும் வயலாக மாற்றும் திறமை இவனைத் தவிர வேறு யாரிடம் காண முடியும்! என்ன செய்வது! காலம் வந்தால் யாரை விடும்! கதிரேசன் கொடுத்து வைத்தது அவ்வளவுதான்!" இப்படியாக ஊராரின் அனுதாப வார்த்தைகள்.

அன்று விளக்கு வைக்கும் நேரம் வந்தது. நடேசன் விழுந்து கிடந்த கூடத்தின் நடுவே குத்துவிளக்கை அவன் மனைவி ஏற்றிவைத்தாள்.

"பூங்காவனம்! குத்தி ஒரு குரல் அழு. அப்படிச் செய்தால்தான் நடேசன் ஆவி வீட்டை விட்டு ஓடும்" என்று புத்தி சொல்லிக் கொண்டிருந்தாள் நடேசனின் அக்காள்.

"நல்ல அக்காள் இவள். பாசாங்குக்காரி. அவர் இறந்து விட்டார் என்று அவள் அழுததெல்லாம் பொய். ஆவியைத் துரத்திவிட வேண்டுமாமே. நன்றி கெட்ட ஜன்மம் அவளுக்கு எவ்வளவு செய்திருப்பார்! சொத்தில் பாதியை அவளுக்காகவே அழித்திருக்கிறார். அவள் மகளுக்கும், மகனுக்கும் கல்யாணம் அவர் இல்லாவிட்டால் நடந்திருக்குமா! அவர் முயற்சியும் பணமும்தானே பண்ணியிருக்கிறது" என்று எண்ணிப் பூங்காவனம் தன் ஒப்பாரியை மீண்டும் ஆரம்பித்து விட்டாள்.

சற்று நேரம் கழித்துப் பூங்காவனம் அழுது ஓய்ந்தாள். நிம்மதியற்று வீட்டில் ஒரு இடம் பாக்கியில்லாமல் சுற்றினாள். அங்கு அவர் நடமாடிய இடத்தை யெல்லாம் போனாள். அவர் தம்முடைய வாழ்நாளில் செய்ததை யெல்லாம் ஞாபகப் படுத்திக் கொண்டாள்.

அதோ அந்த அறையின் மூலையிலிருக்கும் பெட்டியை அவர் எத்தனை தரம் திறந்திருப்பார், மூடியிருப்பார். பணப் பெட்டி அதுதானே! இப்பொழுது கூட அவர் வைத்திருந்த பணம் இரண்டாயிரம் இருக்கும். அதனால் அவருக்கு இனி கவலையில்லை. அண்ணன் கடேசன மேற்பார்வையில் அது போய்விடும். போனால் என்ன! அண்ணன் நல்லவர். கடேசன் குழந்தைகளுக்கு அவர் வஞ்சனை செய்ய மாட்டார். அவர்களுக்குரிய பங்கைக் கொடுத்து விடுவார்.

அடுத்தபடி வேறு ஒரு அறை.

ஆமாம், இங்குதான் அவர் எத்தனையோ இரவை மகிழ்ச்சியுடன் கழித்தார். இன்பம் துய்த்த இடம் இதுதான். இனி அந்த அறை அவருக்குச் சொந்தமில்லை. சொந்தம் கொண்டாட முடியாது. அந்த நிலையில் அவர் இல்லை. அவரைத் தான் வீட்டை விட்டுத் தூக்க வழி வகைகள் செய்து வருகிறார்கள். என்ன அக்கிரமம்!

வீட்டுக் கூடம்; இங்கு எத்தனையோ நல்ல காரியங்கள் நடந்திருக்கின்றன. எத்தனையோ பேர்கள் வந்து விருந்துண்டு போயிருக்கிறார்கள். எல்லாரையும் விழுந்து விழுந்து உபசரித்து, மரியாதை செய்து அனுப்பியது அவர்தானே! இன்னும் எத்தனையோ நல்ல காரியங்களைச் செய்து, பார்த்து, மகிழ வேண்டும் என்றுதான் எண்ணியிருந்தார். அவர் மக்களுக்குத் திருமணங்கள் சீக்கிரம் வேண்டும். அண்ணன் மக்களுக்கும் அம்மாதிரி நடக்க வேண்டும். இவைகளைச் செய்திருந்தால் அவருக்குத் திருப்தியாயிருந்திருக்கும். அவருக்குக் கொடுத்து வைக்கவில்லை.

அவன் ஒவ்வொரு இடமாகப் பார்த்துக் கொண்டே வந்தான். ஒவ்வொன்றும் அவனுக்கு எத்தனையோ இன்பக் கனவுகளை நினைவூட்டின. அப்பொழுதெல்லாம் அவனிடமிருந்து நீண்ட பெருமூச்சும் வாய்மொழியும்தான் வெளி வந்தன.

"சாமர்த்தியக்காரர், அண்ணன். பொது சொத்து, ஒரே குடும்பம் என்றதினால்தான், அக்காளுக்கும் தங்கைக்கும் வாரி வாரிக் கொடுத்தார். இரண்டு பேருக்கும் பாகம் பிரித்திருந்தால், சின்ன அண்ணனிடமிருந்து நாம் எதுவும் எதிர்பார்த்திருக்க முடியாது. பெரிய அண்ணன் அப்படியில்லை. எப்போதும் ஒரே குணம்தான். சின்னவர் இருந்தாலும், இல்லாவிட்டாலும் பெரியவர் நம்மை விடமாட்டார்" என்று நடேசன் தங்கை, அக்காளிடம் இரகசியமாகச் சொல்லிக் கொண்டிருந்தாள்.

"ஆமாம், நடேசன், ஆள் கஞ்சன். காரணத்தோடுதான் எந்தக் காரியமும் செய்வான். என் மகள் கல்யாணத்துக்கு காசுள் இல்லாதவர்கள் என்று உதவி செய்திருக்கிறான். கணக்கைப் பார்த்தால், ஒன்றுக்குப் பத்தாக எழுதி, அண்ணனை ஏமாற்றியிருப்பான். பணம் என்றால் பிணம்மாதிரி பறப்பான். அவன் குணம் எனக்குத் தெரிந்ததுதான்" என்றாள் அக்காள் தங்கையைப் பார்த்து.

"மாமியாரோடு சேர்ந்து, என்னை என்ன பாடு படுத்தி வைத்துவிட்டார்! வீட்டு வேலைகளையெல்லாம் நான்தான் செய்தாக வேணும். வேளா வேளைக்குச் சாப்பாடு கிடைக்காமல் பட்டினி கிடந்திருப்பேன். ஆனால் பூங்காவனம் மட்டும் வயிறு நிரம்பத் தின்றுவிட்டு, வீட்டைச் சுற்றிச்

சுற்றி வந்து கொண்டிருந்தாள். இந்த அக்கிரமம் எங்கு நடக்கும்! மாமியாரும், மைத்துனரும் சேர்ந்து என் கண்ணில் விரலைவிட்டு ஆட்டி விட்டார்கள். நானாக இருந்ததினால் பொறுத்துப் போனேன். வேறு யாராவது இருந்தால் சட்டிப் பானைகளைத் தூக்கிக்கொண்டு அப்பால் போயிருப்பார்கள். பாவம், என் வீட்டுக்காரர் எதையும் காதில் வாங்கிக் கொள்ள மாட்டார். நானும் என் குறைகளையும் மனக் கஷ்டத்தையும் இது வரையில் சொன்னதில்லை. பத்து வருஷத்துக்கு முந்தி மாமியார்க்காரி போய்ச் சேர்ந்தாள். அதன்பிறகு நிம்மதியாக இருக்க முடிந்ததா! பூங்காவனமும், அவள் வீட்டுக்காரரும் சேர்ந்து, என்னை என்ன பாடுபடுத்தினார்கள்! ஒரு வேலைக்காரியாகத் தானே வைத்திருந்தார்கள்! இந்தப் பூங்காவனம் என்ன தன்னாத் துள்ளினாள்! அவளைக் கையால் பிடிக்க முடிந்ததா! ஒரு அடக்க ஒடுக்கம் உண்டா! இப்போது என்ன செய்யப் போகிறாள் பார்ப்போம்'' என்று நடேசனின் அண்ணி யாரோ ஒரு பெண்மணியிடம் சொல்லிக் கொண்டிருந்தாள்.

அண்ணன் மனைவி சொன்னது நூற்றுக்கு நூறு உண்மை. தாயோடு சேர்ந்து, அவர் கொட்டம் ஆடியிருந்தார். குடும்ப பரிபாலனத்தில் அன்னை இருந்தபோதும் சரி, அவளுக்குப் பிறகும் சரி, எல்லா அதிகாரமும் அவரிடம்தானிருந்தது. "சர்வாதிகாரியாகவே அவர் விளங்கினார். அண்ணனுக்குப் படிப்பு வாசனை கிடையாது. கொஞ்சம் படித்திருந்த நடேசன்தான் கணக்கு வழக்குகளைப் பார்த்து வந்தார். தம்பியை அண்ணன் முழுக்க முழுக்க நம்பியிருந்தார். ஆனால் தம்பி அவ்வளவு தூரம் உண்மையாக நடந்து கொண்டார் என்று சொல்ல முடியாது. அண்ணனுக்குத் தெரியாமல், பூங்காவனத்தின் அண்ணன் பேரில், ஒரு வேலி நிலம் வேறு அவர் வாங்கிய விஷயம் நாளது வரையில் பூங்காவனத்தின் வீட்டாரைத் தவிர வேறு யாருக்கும் தெரிய வாராது. இது மோசம்தான்; அடுத்துக் கெடுக்கும் காரியம்; நம்பிக்கைத் துரோகம். அண்ணனின் மனைவி உத்தமி; அவளை அவர் கொடுமைப் படுத்தியிருக்கிறார்; வீணாக வம்பு வளர்த்து, அண்ணனுக்கும், அண்ணிக்கும் சண்டை வார்த்து, அவளை நையப் புடைக்கும்படி பல முறை செய்திருக்கிறார். எல்லாம் சேர்ந்துதானோ என்னவோ, அவர் அற்ப ஆயுளில் போனார்; அவர் திட்டங்கள் முற்றுப் பெறாமலே போய் விட்டன. தெய்வ தண்டனைதான், அவர் திடீரென்று இறந்து விட்டார். நல்லவர்களுக்குக் கேடு சூழ்ந்தால், யாரும் வாழ முடியாது என்பதற்கு அவரே நல்ல உதாரணம்'' என்று சொல்லிக் கொண்டிருந்தார் கணக்குப் பிள்ளை.

தெருத் திண்ணையில் அவர் அண்ணன் உட்கார்ந்து, பக்கத்து வீட்டுக்காரருடன் பேசிக் கொண்டிருந்தார்.

''நடேசன், யோக்கியன் என்றால் யோக்கியன்தான்! எனக்குக் கணக்கு வழக்கு ஒன்றும் தெரியாது. என்னை ஏமாற்றவென்றால் எவ்வளவோ ஏமாற்றலாம். ஆனால் அவன் அப்படிச் செய்கிறவன் இல்லை. அதனால்தான் அவனை நம்பி எல்லாம்

வீட்டிலிருந்தேன். வீட்டுக் கவலையே எனக்கில்லாமலிருந்தது. இங்கு எது நடக்கிறது, எது நடக்கவில்லை என்பது எனக்கு ஒன்றுமே தெரியாது. எல்லாம் அவனே பார்த்துக் கொண்டிருந்தான். இனிமேல் என்ன செய்கிறது என்றுதான் எனக்குத் தெரியவில்லை. இதை நினைத்தால்தான் வருத்தமாயிருக்கிறது. என்ன செய்வது! நான் கொடுத்து வைத்தது அவ்வளவுதான். தங்கமான தம்பி போய்விட்டான்!'' என்று அண்ணன் கதிரேசன் வருத்தப்பட்டார்.

பூங்காவனம் சோகமே உருவெடுத்தாற்போன்று வீட்டில் இங்குமங்குமாக நடமாடிக் கொண்டிருந்தாள். தன் கணவனைப் பற்றி யாராவது அவதூறாகப் பேசுகிறார்களா என்பதை அறிய ஆவல் கொண்டவளாக அவள் காணப்பட்டாள். பேசிக் கொண்டிருந்தவர்கள் அவள் கிட்ட நெருங்கி வரும்போது பேச்சை நிறுத்திக் கொள்வதைப் பார்த்து ஒரு மாதிரியாக முகத்தை வைத்துக் கொண்டாள்.

நடேசன் வாழ்ந்த வீடு புத்தம் புதிய வீடு. கட்டி மூன்றே வருஷங்கள்தான் ஆகியிருந்தன. கிராமத்தில் புதிய பாணியில் நகரத்து நாகரிகப் பாங்காகக் கட்டப்பட்டிருந்தது. நடேசனின் முயற்சியினால்தான் பழைய வீடு மறைந்து இந்தப் புதிய வீடு தோன்றியது. அவர் அண்ணன் கதிரேசன் முதலில் இதற்குச் சம்மதிக்கவில்லை. ஆனால் நடேசனா விடுபவர்! அவர் ஒன்றை எண்ணி விட்டால், அதை முடிக்காமல் விட மாட்டாரே. இருந்தும் அவரால் அதில் அதிக நாட்கள் வாழ முடியவில்லை.

வீட்டை ஒட்டியிருந்த மாட்டுத் தொழுவம் கண் பார்வையில் விழுந்தது. கல் தொட்டிகள், இரண்டு ஜோடி காளை மாடுகள், நான்கைந்து பசு மாடுகள் தொழுவத்தை அலங்கரித்துக் கொண்டிருந்தன. அவற்றுள் ஒரு ஜோடி காளை மாடுகளையும், இரண்டு கறவைப் பசுக்களையும் ஒரு மாதத்துக்கு முன் நடேசனே போய் வாங்கி வந்திருந்தார். அவைகள் உயர் ஜாதி மாடுகள். அதிகப் பணத்தை விழுங்கியிருந்தன.

அதோ, அதோ தெரிகிறதே, அதுதான் செந்தாமரைக்குளம். அங்கு தான் ஊர் ஜனங்கள் எல்லாருமே குளிக்க வர வேண்டும். இளமை முறுக்கில், காளைப் பருவத்தில் ஒரு நாள் அந்தக் குளத்தங்கரையில் தானே அவர் பூங்காவனத்தைக் கண்டார்! அந்தச் சந்திப்பு அவரிடத்தில் ஆசையைக் கிளறிவிட்டது. பூங்காவனத்தைத் தவிர வேறு பெண் வேண்டாம் என்று தீர்மானித்து அவளையே மணந்து கொள்ளப் பெற்றோர்களின் சம்மதத்தையும் பெற்றார். அது இப்பொழுது பழங்கதையாகி விட்டது.

காடு மேடாய், கரம்பாயிருந்ததை, பிரயாசை எடுத்து, திருத்தி வளம்படுத்தியவர் அவர்தான். அண்ணன் மட்டுமிருந்தால், இவ்வளவு தூரமாகியிருக்காது. பரம்பரைச் சொத்து கொஞ்சத்துடன் நின்றிருக்கும். வளம் கொழிக்கும் ஐந்து வேலி நிலங்களாக ஆகியிருக்காது. தொன்று தொட்டு நெல் விளையும் பூமியில், முதன் முதலாகக் கரும்பு போட ஆரம்பித்தவரும் அவர்தான். அந்த ஊருக்கு. ஏன் சுற்றுப்புறத்தில் இருபது, முப்பது மைல் வட்டாரத்துக்கே அவர்தான் முதல் ஆசாமி.

அந்தச் சிறிய கல் கட்டடம். அதன் உள்ளே தண்ணீர் இறைக்கும் இயந்திரம். மின்சாரத்தினால் இயக்கக் கூடியது. கொஞ்ச தூரத்துக்கு அப்பால், உயரமான மரம் மின்சாரக் கம்பிகளைத் தலையில் தாங்கிக் கொண்டு நின்றது. அவருடைய நிலத்துக்கென்றே வந்து கொண்டிருந்தது. அதற்கான அதிகப் பிரயாசையையும், அதிகப் பணச் செலவையும் அவர் பொருட்படுத்தவில்லை.

அந்த வருஷம் அவர் மட்டும்தான் கரும்பு போட்டார். நெல் பயிரிட ஒரு வேலியும், கரும்புக்கு நான்கு வேலியுமாக ஒதுக்கிக் கொண்டார். முதலில் அவர் அண்ணன் கதிரேசன், தம்பியின் யோசனைக்கு ஒப்பவில்லை.

"தம்பி, ஊரில் பஞ்சம், பஞ்சம் என்று சொல்லுகிறார்கள். உணவு கிடைக்காத கஷ்டத்தினால் அவதிப்படுகிறார்கள். எங்கும் பற்றாக்குறை அதிகமிருக்கிறது. நெல்லாகப் பயிரிட்டால், எவ்வளவு உதவியாக இருக்கும்! பொதுஜன சேவையில் நமக்குண்டான தொண்டைச் செய்தவர்களாவோம். அதை விடுத்து, கரும்பு போடுகிறேன் என்று சொல்லுகிறாயே. இது தகாது தம்பி! நமக்கு வேண்டாம் இந்தப் பாவம்! நெல்லாகவே பயிரிட்டு ஜனங்களுக்கு ஒத்தாசையாகவே இருப்போம். இதனால் கஷ்டம் நஷ்டமானாலும் பொறுத்துக் கொள்வோம். உழுது வேளாண்மை செய்வோனுக்கு அதுதான் அழகு'' என்று கதிரேசன் நடேசனுக்கு ஆயமட்டும் சொல்லிப் பார்த்தார்.

"அண்ணா! நீங்கள் சொல்கிறது சரியில்லை. நெல் போட்டுப் போட்டு என்ன பலனைக் கண்டு விட்டோம்! முன்னேற வழி யில்லாமல் தானே இருந்து வந்து விட்டோம்! கொஞ்ச நிலத்தில் நெல் போடுவோம். மிஞ்சிய நிலங்களில் கரும்பு பயிரிடுவோம். எப்படியாகிறது என்று பார்ப்போம்'' என்று அண்ணனுக்கு ஆசை காட்டி, கரும்பு போட்டார். முயற்சி வெற்றி யளித்து, பணமாகவே விளைந்து, மகிழ்ச்சி யளித்தது.

நடேசனைப் பின்பற்றி, ஊரில் எல்லாருமே கரும்புபோட ஆரம்பித்து விட்டார்கள். அங்கங்கே மின்சாரத்தினால் இயங்கி, தண்ணீர் இறைக்கும் இயந்திரங்கள் இடம் பெற்றன. குறுக்கும் நெடுக்குமாக, சிலந்தி வலைபோல, மின்சாரக் கம்பிகள், உயரமான மரங்களில் பிணைக்கப்பட்டுப் போய்க் கொண்டிருந்தன. ஊருக்கே இது ஒரு புதிய காட்சியாக இருந்தது. இதன் விளைவு நெல் பயிரிடுவது குறைந்தது. அவரவர்கள் தங்கள் தங்கள் சாப்பாட்டுக்கு வேண்டிய அளவுதான் நெல் விளைச்சல் மகசூலைக் கண்டார்கள்.

காற்றில் கரும்புச் சோலைகள் அழகாக அசைந்தாடி, சலசலப்பு ஏற்படுத்திக் கொண்டிருந்தன. அங்கங்கே கொஞ்சம் கொஞ்சம் திட்டு திட்டாக, நெல் வயல்கள் காட்சியளித்துக் கொண்டிருந்தன. கரும்பையும் நெல்லையும் ஒரே சூழ் நிலையில். ஒரே கண் கொண்டு அவர் பார்த்தபோது, அக் காட்சி அருவருப்பாகவே தோன்றியது. இக் காட்சி மாற வேண்டும். எங்கும் நெல் வயல்களாகவே இருந்து, நிறைய நிறைய நெல் மணிகளை வாரி வழங்கி மக்களின் உணவுப் பஞ்சத்தை நீக்க வேண்டும். இதை யார் மாற்றுவது!

கொக்கரக்கோ என்று கோழி கூவியதுபோலிருந்தது. நடேசன் கண் விழித்தார். தான் உயிரோடு இருப்பதை உணர்ந்து அதிசயப் பட்டார். அதுவரை தாம் பார்த்ததெல்லாம் ஏதோ பிரமை என்பதை உணர்ந்து மன அமைதி யடைந்தார்.

அண்ணியிடம் சென்று தம்முடைய செய்கைக்காக வருந்திப் பச்சாதாபப்பட்டார். நெல் விளையும் பூமியில் கரும்பு போடாமல் நெல்லையே விளைவிப்பது என்று தீர்மானித்தார். அவர் மனத்தில் ஒரு நிம்மதி ஏற்பட்டது.

அவருடைய மலர்ந்த முகத்தைப் பார்த்து அண்ணன் கதிரேசனும் குழந்தைகளும் மற்றவர்களும் ஆனந்த பரவசமாகி மகிழ்ந்தனர்.


அருணோதயம் முதல்
நட்சத்திரம் உதிக்கும்
வரையில் - நாள்முழுவதும்
இனிய வாசனையோடிருப்பீராக
டால்கம் பவுடர்
பள பளவென்று
ஜொலிக்கும் புதுமைக்கு
காஷ்மீர் புக்கே டால்கம்
பவுடரை உங்கள் மேல் தாரா
ளமாகத் தூவுங்கள். அது அதிக
க்கசிவை உறிஞ்சுகிறது . . . எரிச்சலையும் அரிப்பை
யும் அடங்கச் செய்கிறது . . . உங்களைக் குளிமை
யுடனும் இனிய வாசனையுடனும், நாள்முழுவதும்
புதுமையுடனும் இருக்கச் செய்கிறது.
காஷ்மீர் புக்கே
மாளிடங்கள் விரும்பும் பரிமளத்துடன்
1806லிருந்து கோல்கேட் உயர்ந்த ரகத்திற்குப் பெயர்போனது.

வெள்ளை ரோஜா

சங்கர்

தீபாவளியன்று காலைப்பொழுது பலபல வென்று புலரும் சமயம். ராஜபவனத்தின் வராந்தாவில் அந்தத் தெருவிலுள்ள குழந்தைகள் அனைவரும் கூடி நின்று சந்தோஷ ஆரவாரம் செய்து கொண்டிருந்தனர். ராஜகோபாலன் அந்தக் குழந்தைகளுக்கெல்லாம் பட்டாசு வகைகளும், சாக்லேட் மிட்டாய்களும் வழங்கிக் கொண்டிருந்தான்.

“மாமா! எனக்கு இன்னொரு கம்பி மத்தாப்பு! சாக்லேட் எனக்கில்லையே, மாமா?” என்ற குழந்தைகளின் மழலை ஒலிகளுக்கு மத்தியில் பட்டாசுகள் வெடிக்கும் சத்தமும் சேர்ந்து அந்தப் புனிதத் திருநாளின் குதூகலத்தைப் பறைசாற்றிக் கொண்டிருந்தன.

இப்படிக் குழந்தைகளோடு தானும் ஒரு குழந்தையாக நின்று அவர்கள் மலர்ந்த முகங்களில் மகிழ்ச்சி ததும்பித் தெறிப்பதைப் பார்த்துப் பார்த்துப் பரவசமடைந்து கொண்டிருந்த ராஜகோபாலன், இடுப்பில் சந்திர பிம்பம் போன்ற குழந்தையை வைத்துக் கொண்டு தன் முன்னால் வந்து நின்ற மாலதியைப் பார்த்ததும் அப்படியே ஸ்தம்பித்து நின்று விட்டான்.

‘ஐந்து வருஷங்களுக்கு முன்னால் அரையில் பட்டுப் பாவாடையும் மேலே ஜாக்கெட்டும் அணிந்து கொண்டு இரட்டைச் சடை ஊசலாட ராஜபவனத்தில் வளைய வளையச் சுற்றி வந்து கொண்டிருந்த மாலதியா இப்படிக் கொடி போன்ற உடலில் மெல்லிய ‘ஸாடின்’ சேலை துவள வந்து நிற்கிறாள்?’ என்று எண்ணி வியந்தான் ராஜகோபாலன்.

“என்ன, மாமா! அப்படிப் பார்க்கிறீர்கள்? என்னைத் தெரியவில்லையா? சாக்ஷாத் மாலதியேதான்! நீங்கள் என்னை மறந்தாலும் உங்களை என்னால் மறக்க முடியுமா?” என்று சொல்லிவிட்டு இதழ்க் கோணத்தில் மின்னல் கொடிபோல ஒரு விஷமப் புன்னகையை நெளியவிட்ட மாலதி, “எங்கே, மாமி?” என்று கேட்டுக் கொண்டே ராஜபவனத்தைச் சுற்றியுள்ள பூங்காவுக்குள் சரேலென்று நுழைந்தாள்.

“மாலதி! வாம்மா, குழந்தை சௌக்கியமா? எப்போது வந்தாய்?” என்று உபசரித்த ராஜகோபாலனின் மனைவி மங்களம், அவள் கையில் தவழ்ந்துகொண்டிருந்த குழந்தையை அன்போடு வாங்கி உச்சி மோந்தாள்.

சுற்றிச் சூழக் கட்டுப்பாடின்றி மனம் போன போக்கில் தழைத்து வளர்ந்திருந்த பூச் செடிகளையும், மல்லிகைக் கொடிகளையும் வியப்புடன் பார்த்தாள் மாலதி. தோட்டத்தை அணைத்து வளைத்துக் கொண்டு ஓடிய கொடுக்காப்புளி வேலி தலையைச் சிலிர்த்துக்கொண்டு நின்ற காட்சி, அவைகளின் சுதந்திரத்தைப் பிரகடனப் படுத்துவது போல் தோன்றியது!

“ஏன் மாமி, குரோட்டன்ஸ்களை எல்லாம் ஒரேயடியாக வளர விட்டிருக்கிறது? மாமா இப்போதெல்லாம் தோட்டத்தைக் கவனிக்கிறதே இல்லையோ? ஆச்சர்யமாக இருக்கிறதே!” என்று கேட்டாள் மாலதி.

“ஆமாம்; இப்போது செடி கொடிகளை எல்லாம் விட்டு விட்டுக் குழந்தைகளைப் பிடித்திருக்கிறார்கள்” என்று கிண்டலாகப் பதிலளித்தாள் மங்களம்.

இதற்குள் குழந்தைகளை எல்லாம் அனுப்பி விட்டு அங்கே வந்த ராஜகோபாலன், மனைவியின் இடுப்பில் சொர்ண விக்கிரகம் போன்ற குழந்தை திகழ்வதைக் கண்டவுடன் கணநேரம் இன்ப நினைவுகளில் மனத்தை அலைய விட்டான். சுய உணர்வு வந்ததும் மிகவும் ஆவலோடு குழந்தையை எடுக்க மனைவியிடம் கரங்களை நீட்டினான். மங்களம் குழந்தையைக் கணவனிடம் கொடுத்தாள்.

“மாமா! பூப்போல தூக்குங்கள், மாமா! அதோ, தலை சாயாமல் பிடித்துக் கொள்ளுங்கள்” என்று கூவினாள் மாலதி. தாய்மையின் பரிவு அவள் குரலில் தொனித்தது.

குழந்தையை வாங்கிய ராஜகோபாலன் அதன் கன்னத்தில் மெதுவாக முத்தமிட்டான். குழந்தையின் பட்டுக் கன்னத்தில் அவன் உதடுகள் பதிந்திருந்தனவே தவிர, அவன் மனம், மாலதி சொன்னாளே ‘பூப் போலத் தூக்குங்கள்’ என்று, அதைச் சுற்றி வண்டு போல் சுழன்று சுழன்று வந்தது. குழந்தையைக் கையால் உயரத் தூக்கிக் கொஞ்சியபடியே “ராஜா! பூ வேணுமாடா, பூ!” என்றான் சிரித்துக் கொண்டே.

“ஐயோ! வேண்டாம் மாமா, பூ! நான் ஒரு பூவைப் பறித்ததும் போதும், நீங்கள் கொடுத்த பரிசும் போதும்” என்று வலது கன்னத்தைக் கையால் தடவிக் கொண்டே கிண்டலாகக் கூறினாள் மாலதி.

மங்களத்துக்கு ஒன்றும் புரியவில்லை. கணவனிடமிருந்து குழந்தையை வாங்கிக் கொண்டே, “ஏன் மாலதி, மாமாவிடம் கன்னத்தில் அறைகூட வாங்கியிருக்கிறாயா?” என்று வியப்புடன் கேட்டாள் மங்களம்.

“ஆமாம்; எல்லாம் நீங்கள் வருவதற்கு முன் நடந்த கதை. வாருங்கள், சொல்கிறேன்” என்று கூறிய மாலதி, மங்களத்தின் கையைப் பற்றி அழைத்துக் கொண்டு வீட்டுக்குள்ளே போனாள்.

அவர்கள் போவதைப் பார்த்துக் கொண்டு நின்ற ராஜகோபாலன், பவளமல்லிகை மரத்

தடியில் கிடந்த சிமின்டு சோபாவில் சாய்ந்தான். கடந்த காலத்தின் நினைவுக் காற்று சில்லென்று அவன் மனத்தில் வீசிச் சென்றது.

2

“ஒன்னே ஒன்னு, கண்ணே கண்ணு” என்று சொல்வார்களே, அதைப்போல விசாலாட்சியின் அருமைப் பிள்ளைதான் ராஜகோபாலன். லட்சாதிபதியான தேவராஜய்யர் இறந்த பிறகு அவனை வளர்த்து வாலிபமாக்கும் பொறுப்பு முழுவதும் விசாலாட்சியின் தலையில் விழுந்தது. அவளும் தன் பிள்ளையைக் கண்ணுக்குள் வைத்துக் காப்பாற்றுவதைப் போல் வளர்த்து வந்தாள்.

இளம் வயதிலிருந்தே பூக்கள் என்றால் ராஜகோபாலனுக்கு ஒரே மோகம். பூச்செடிகளை வீட்டுத் தோட்டத்தில் வைத்து வளர்ப்பதென்றால் அலாதியான கிறுக்கு! பள்ளிக்கூடம் போய்க் கொண்டிருக்கும்போது எங்காவது ஒரு வாடா மல்லிகைச் செடி தனித்து நிற்பதைப் பார்த்து விட்டால் போதும், புதையலைக் கண்ட மாதிரிதான்! பள்ளிக்கூடம் முடிந்து வரும்பொழுது அந்தச் செடியை வேரோடு பிடுங்கி எடுத்துக் கொண்டு வீட்டுக்கு வருவான். இவ்வாறு பூச்செடிகளிடம் தன் பிள்ளைக்கு ஏற்பட்டிருக்கும் காதலை எண்ணி வியந்தாள் விசாலாட்சி.

ராஜகோபாலன் வளர வளரப் பங்களாவைச் சுற்றிலும் பல்வகை புஷ்பச் செடிகளும், கொடிகளும், மரங்களும் தழைக்க ஆரம்பித்தன. அவைகளைப் பராமரிக்கத் தனியாக ஒரு வேலையாளை நியமித்தாள் விசாலாட்சி.



பல ஆண்டுகள், காலம் என்ற பாதையில் உருண்டோடின. அப்போது ராஜகோபாலன் கல்லூரியில் படித்து வந்தான். தாவர சாஸ்திரத்தைப் பற்றிய பாடம் அவன் மனத்தைப் பெரிதும் கவர்ந்து விட்டது.

ஒருநாள் தன்னுடைய நண்பர்களை எல்லாம் அழைத்துக்கொண்டுவந்து, தான் நிர்மாணித்த பூங்காவைக் காட்டினான் ராஜகோபாலன். அதனைக் கண்ணுற்ற அவன் நண்பர்கள் அவனுடைய ஆற்றலையும், அழகுணர்ச்சியையும் வெகுவாகப் பாராட்டினார்கள். ராஜகோபாலனும் ஒவ்வொரு செடியைப் பற்றிய விவரங்களை வர்ணித்துக் கொண்டே வந்தான், தன் செல்வக் குழந்தைகளை அறிமுகப் படுத்தும் ஒரு தந்தையைப் போல!

எல்லாச் செடிகளையும் சுற்றிப் பார்த்த பிறகு ஒரு நண்பன் கேட்டான்:

“ராஜா, வெள்ளை ரோஜா ரொம்ப அபூர்வமாயிற்றே! அது கிடைக்கவில்லையா?”

“அப்படியா? இன்னும் ஒரு மாதத்துக்குள் பார்! எப்படியும் அந்த ரோஜா வகையும் ராஜபவனத்துக்கு வந்துவிடும்” என்று சொன்னான் ராஜகோபாலன்.

வெகு சுலபமாக இப்படிக் கூறிவிட்டானே தவிர, மறுநாள் முதற்கொண்டு வெள்ளை ரோஜாவுக்காகத் தேடி அலைந்த போதுதான் அதன் அருமை தெரிந்தது அவனுக்கு. எங்கு தேடியும் வெள்ளை ரோஜா கிடைக்கவில்லை. வெள்ளை ரோஜா இல்லாத அந்தத் தோட்டம் அவன் கண்களுக்கு வெறித்துப் போய்க் காட்சி யளித்தது! அவன் தாயாருக்கு மகனின் ஆசையைப் பூர்த்தி செய்ய முடியவில்லையே என்ற கவலை! பாவம்! வெள்ளை ரோஜாவுக்கு அவள் எங்கே போவது?

ராஜகோபாலன் செய்த முயற்சி வீண் போகவில்லை. நீலகிரிக்கு உல்லாசப் பிரயாணம் சென்ற ராஜகோபாலன், அங்கிருந்து வெள்ளை ரோஜாக் குச்சி ஒன்றைக் கொண்டு வந்து தன்னுடைய தோட்டத்தில் பதியம் போட்டு வைத்தான்! அப்புறந்தான் மீண்டும் இன்பம் தழைக்க ஆரம்பித்தது.

அதிகாலையில் எழுந்தவுடன் ரோஜாப் பதியத்தின் முன்னால் உட்கார்ந்து கொண்டு ஏதாவது துளிர் விட்டிருக்கிறதா என்று மிகவும் ஆவலோடு பார்ப்பான். ஒவ்வொரு நாளும் துளிர்விடும் இரு இலைகளுக்கு மத்தியில் ஏதாவது மலர் மொக்கு முகிழ்க்கும் அறிகுறிகள் தென்படுகின்றனவா என்றும் உற்று உற்றுப் பார்ப்பான். மொக்கு வருமென்று காத்திருக்கும்போது வெறும் இலைகள் மட்டும் துளிர்த்து விரிவதைக் காணும் பொழுது அவன் அடையும் ஏமாற்றத்தைப் பார்க்க வேண்டுமே!

காலச் சருகுகள் எத்தனையோ மண்ணில் உதிர்ந்து மேல்காற்றால் அடித்துக் கொண்டு போகப்பட்டன. அந்த வருஷம் பி. ஏ. பரீட்சை முதல் வகுப்பில் தேறினான் ராஜகோபாலன். விசாலாட்சியும் அவனுக்குக் கல்யாணத்தைச் செய்து பார்த்துவிட வேண்டும்

என்று விரும்பினான். ராஜகோபாலனுக்குப் பெண் வீட்டார்கள் பலர், "நான், நீ" என்று பெண் கொடுக்கப் போட்டி போட்டார்கள்.

ராஜபவனத்துப் பூங்காவில் உலாவுவதற்கு ஒரு வாழ்க்கைத் துணை கிடைக்கப் போவதை எண்ணி இறுமாந்த வண்ணம் தோட்டத்தை வெகு நாட்களுக்குப் பிறகு சுற்றி வந்த ராஜகோபாலன் அப்படியே ஆச்சரியத்தில் நின்று விட்டான். அப்பா! இத்தனை காலத்துக்குப் பிறகு அந்த வெள்ளை ரோஜாச் செடியின் கிளை யொன்றில் ஒரு வெண்மையான ரோஜா மொக்கு மலரும் தறுவாயில் மாலைக் காற்றில் அசைந்தாடிக் கொண்டிருந்தது!

"அம்மா! அம்மா! இங்கே வந்து பாரேன்! வெள்ளை ரோஜா பூத்து விட்டது!" என்று ஆனந்தம் மேலிடக் கத்தினான் ராஜகோபாலன். விசாலாட்சி பரபரப்புடன் ஓடி வந்தாள். பூவைப் பார்த்ததும் அவள் கண்களும் மலர்ந்தன.

"வீட்டுக்கு விளக்கேற்றி வைக்க ஒரு லக்ஷ்மி வருகிறபோது வெள்ளை ரோஜா பூக்காமல் போய்விடுமா, என்ன?" என்று நாசூக்காக அவன் கல்யாணத்தை நினைவூட்டி மகிழ்ந்தாள் அவள்.

இரவு பூராவும் கனவு உலகில் கொத்துக் கொத்தான ரோஜாப் பூக்களுக்கு மத்தியில் உலவினான் ராஜகோபாலன். விடியற்காலையில் பக்கத்து வீட்டுப் பெண் மாலதி வந்து அவனை எழுப்பினாள்.

"மாமா, மாமா! இன்னுமா தூங்குகிறீர்கள்? இதோ பாருங்கள்! வெள்ளை ரோஜாப் பூ!" என்ற மாலதியின் குரல் கேட்டுச் சட்டென்று விழித்தான்.

மாலதியின் மலர்க் கரத்தில் வெள்ளை ரோஜா மலர்ந்திருந்தது!

அவ்வளவுதான்; ஆயிரம் தேள் கொட்டியவனைப் போலத் துள்ளி எழுந்த ராஜகோபாலன் கோபாவேசத்தோடு மாலதியின் கன்னத்தில் பளீரென்று ஒரு அறை விட்டான். அவள் கையிலிருந்த வெள்ளை ரோஜாப்பூ தரையில் விழுந்து துவண்டது.

"அம்மா!" என்று அலறிய மாலதியின் குரல் கேட்டு மாடிக்கு ஓடி வந்த விசாலாட்சி விஷயத்தை அறிந்ததும், "ஏண்டா, ராஜா! இப்படித்தானா பச்சைப் பிள்ளையை அடிப்பது? மரஞ் செடி கொடிகளோடு பழகிப் பழகி உன் மனம் என்ன, மரத்துப் போய் விட்டதா? குழந்தை ஆசையோடு பூவைப் பறித்ததற்கு அடித்து விட்டாயே, இனி அந்தச் செடி பூக்காமலா போய் விடும்? என்ன இருந்தாலும் உனக்கு இவ்வளவு கோபம் ஆகாது" என்று மகனைக் கோபித்து விட்டு மாலதியை அணைத்தபடியே அழைத்துக் கொண்டு கீழே போய் விட்டாள். தாயாரின் வார்த்தைகள் கூரிய முட்களாக அவன் மனத்தில் தைத்தன. பூவினும் மெல்லிய இதயமுடைய அந்தச் சிறுமியின் மனத்தைப் புண்படுத்தி விட்டதை எண்ணிய பொழுது அவன் கண்களில் நீர் சுரந்தது.

3

"ஏன் இப்படி வெறும் செடியையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்? இப்படிப் பார்த்தால் கண்கள்தான் பூத்துப் போகுமே தவிர, செடி ஒன்றும் திடுதிப்பென்று பூத்து விடாது!" என்று கிண்டலாகக் கூறிக் கொண்டே வந்தாள் ராஜகோபாலனின் மனைவி மங்களம்.

"சரி, சரி! ஆரம்பித்து விட்டாயா! உன் பல்லவியை!" என்று கூறிவிட்டுச் செடியின் அடியிலுள்ள மண்ணைக் கையால் கிளறித் தண்ணீர் விடுவதற்குப் பண்ணை பிடித்தான்.

"ஆமாம், வேலைக்காரச் சுப்பனை விட்டால் தண்ணீர் ஊற்றிவிட்டுப் போகிறான். இதையெல்லாம்! நீங்கள்தான் கவனிக்க வேண்டுமா?" என்று கேட்டாள் அவள்.

"வேலைக்காரன் வேண்டுமானால் தண்ணீரை இறைத்துக் கொட்டலாம். ஆனால் என்னைப் போல், கூட அன்பையும் தரையில் ஊற்றி அவனால் வளர்க்க முடியுமா?"

"ஐய, உங்கள் அன்பைக் கொட்டுவதற்கு இந்த முள் நிறைந்த ரோஜாச் செடிதான் கிடைக்க வேண்டுமா?" என்றாள் மங்களம்.



''மதில் சுவர்களுக்கு அபாயம்!''

சீலம் 1-11-53 இதழில் 'மதில் சுவர்களுக்கு அபாயம்' என்ற தலைப்பில் 56-ம் பக்கத்தில் வெளி வந்த ஸ்ரீ டி. ஆர். வெங்கட்ரமணனின் கடிதத்தைப் பார்வை யிட்டேன். நகர சபை நிர்வாக அதிகாரி என்ற அளவில் இது விஷயமாய் நகரசபை அலுவலகத்தில் ஏற்கெனவே எடுக்கப் பட்டிருக்கும் நடவடிக்கையைப் பற்றித் தங்களுக்குத் தெரியப் படுத்த விரும்புகிறேன். மதில் சுவர் விஷயமாய் இந்த ஆபீஸிற்கு வந்த ஸ்ரீ வெங்கட்ரமணனின் கடிதம் 1-10-53 என்று குறிப்பிட்டிருந்த போதிலும் 3-10-53 அன்றுதான் என் கைக்குக் கிடைத்தது. இப்படியிருக்கத் தங்களுக்கு அவர் 22-10-53 தேதி எழுதியிருக்கும் கடிதத்தில் நகரசபைக் கமிஷனருக்குக் கடிதம் எழுதி ஒரு மாதமாகியும், எவ்வித நடவடிக்கையும் எடுப்பதாகத் தெரியவில்லை என்று கண்டித்திருப்பது வியப்பாய் இருக்கிறது. நண்பர் ஸ்ரீ வெங்கட்ரமணன் இவ் வலுவலகத்துக்குக் கடிதம் எழுதுவதற்குப் பல மாதங்கள் முன்னமேயே, அதாவது சென்ற ஏப்ரல் மாதத்திலேயே ஸ்ரீரங்கம் தேவஸ்தானம் நிர்வாக அதிகாரிக்கு மதில் சுவர்களிலுள்ள மரங்களைப் பற்றியும், அவை அபாயம் விளைவிக்கக் கூடியவை என்பதையும் எடுத்துக் காட்டி, தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தெரிவிக்கப் பட்டது. பிறகு 29-9-53 தேதி அன்று நகர சபைத் தலைவரும், நானும், நிர்வாக ஆபீசர் டிரஸ்டி இவர்களுடன் எல்லா மதில்களையும் பார்வையிட்டோம். அப்போது இது விஷயத்தில் துரிதமாக நடவடிக்கை எடுப்பதாக நிர்வாக ஆபீசர் வாக்களித்தார். 8-10-53 அன்றும், 9-10-53 அன்றும் நிர்வாக ஆபீசருக்கு விவரங்கள் அனுப்பப்பட்டன. இந்த மதில் சுவர்களில் உள்ள செடி, கொடி, மரங்களை அறவே ஒழிப்பதென்பதும், சுவர்களைச் சரிவரப் பாதுகாத்து நல்ல நிலைமைக்குக் கொண்டு வருவதென்பதும், ஏராளமான பணச் செலவு செய்தாலொழியச் சாத்தியமில்லை.

அவ்விதம் செலவு செய்வதற்குக் கோவில் நிதியில் போதிய பணம் இல்லாததற்குக் கோவில் நிர்வாக அதிகாரி என்னிடம் நேரில் வருத்தம் தெரிவித்திருக்கிறார். அதனால்தான் மத்திய சர்க்காரிடமிருந்து புராதனச் சின்னங்கள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் மானியம் கோருமாறு யோசனை தெரிவித்துக் கடிதம் எழுதி இருக்கிறேன்.

ஆகையால் ஒரே மாதத்திற்குள் எல்லா வேலைகளையும், முடித்துவிட வேண்டுமென்று எதிர்பார்ப்பது நியாயமில்லை. மரம், செடிகளை அகற்றும் வேலையைச் சென்ற ஜூன் மாதத்திலேயே சில தெருக்களில் ஆரம்பித்து விட்டதாகத் தேவஸ்தானம் நிர்வாக ஆபீசர் தெரிவித்திருக்கிறார். இதை முனிசிபல் கௌன்சிலர்களும் பார்வை யிட்டிருக்கிறார்கள். ஸ்ரீ வெங்கட்ரமணன் எடுத்துக் காட்டியிருக்கும் குறை உடனடியாக நிவர்த்திக்க வேண்டியதுதான் என்பதை என்னைப் போன்ற அதிகாரிகள் நிச்சயமாக ஒத்துக் கொள்கிறார்கள். ஆனால் நடைமுறையில் மிகவும் சிரமமான காரியமாக இருக்கிறது. அரசாங்க ஆதரவும் பொது மக்கள் ஒத்துழைப்பும் திரவிய சகாயமாக இருந்தாலன்றி எந்த முயற்சியும் பயன்படாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஸ்ரீரங்கம் — எஸ். ராஜகோபாலன்
30-10-53
(கமிஷனர், ஸ்ரீரங்கம் நகரசபை.)

ராஜகோபாலன் மௌனமாக இருந்தான். அவள் மேலும் தொடர்ந்தாள் :

"இது ரோஜாச் செடி இல்லை என்றுதான் நான் நினைக்கிறேன். இருந்திருந்தால் இதற்குள் பூத்திருக்காதா?"

ராஜகோபாலனுக்கு ரோசம் பொத்துக் கொண்டு வந்தது. கோபத்தால் முகம் சிவக்க அவளைப் பார்த்துச் சொன்னான் :

"நீ கூடத்தான் தாயாகவில்லையே?"

மங்களம் வெப்பம் தாளாமல் கண்களில் நீர் மல்க உள்ளே ஓடி விட்டாள். விஷயம் அறிந்த ராஜகோபாலனின் தாயார் வெளியே வந்தாள். "ஏண்டாப்பா, குத்திப் பேசுகிற பேச்சு உன்னை விட்டுப் போகாதா, என்ன? இன்னும் எட்டு மாதத்தில் ஒரு பிள்ளைக்குத் தகப்பனாக வேறு போகிறாய்!" என்று தாயார் கூறியதும் ராஜகோபாலனுக்கு என்னவோ போல் இருந்தது.

4

"மாமா! எழுந்திருங்கள். கங்காஸ்நானம் ஆன களைப்பில் அப்படியே தூங்கிப் போய் விட்டீர்களா, என்ன?" என்ற மாலதியின் குரல் கேட்டுக் கண் விழித்தான் ராஜகோபாலன்.

குழந்தையை ஏந்திய வண்ணம் மாலதியும், அவளுக்குப் பின்னால் மங்களமும் நின்று கொண்டிருந்தனர். கண்களைத் துடைத்துக் கொண்டு எழுந்தான் ராஜகோபாலன்.

"நான் ஊருக்குப் போய் வருகிறேன் என்று சொல்லுடா, கண்ணு!" என்று குழந்தையிடம் கூறிய மாலதி "அடடே! அதே ரோஜாச் செடிதானே இது? ஏன் இப்படிக் கவனியாமல் விட்டிருக்கிறீர்கள்?" என்றாள்.

என்ன ஆச்சரியம்! இளங் காற்றில் செடி அசையும் பொழுது பசுமையான இலை மறைவுக்குள்ளிருந்து ஒரு வெண்மையான ரோஜாப் பூ மெல்ல எட்டிப் பார்த்தது!

"அதோ! இன்னொரு பூ அங்கே ஒளிந்து கொண்டிருக்கிறது! பல நாள் கவனிக்காமல் இருந்தது பார்த்துப் பூக்க ஆரம்பித்திருக்கிறது, பார்த்தீர்களா?" என்றாள் மங்களம்.

ராஜகோபாலனுக்கு ஏற்பட்ட வியப்பும் ஆனந்தமும் சொல்லத் தரமன்று. ஏனெனில் அடுத்த வருஷம் அவன் மனைவியும் ஒரு குழந்தைக்குத் தாயாகப்போகிறாள் அல்லவா?

இதுவரையிலும் மனித இதயத்தை மெல்லிய மலருக்கு உவமித்து எத்தனையோ கவிஞர்கள் பாடியிருப்பதைப் படித்திருக்கிறான் ராஜகோபாலன். ஆனால் இன்றுதான் அவை இரண்டிற்குமுள்ள தோன்றாத் தொடர்பு அவனுக்குத் தெளிவாகப் புரிந்தது.

சட்டென்று எதையோ நினைத்துக் கொண்டவனைப் போல ஆசையோடு ஒரு வெள்ளை ரோஜா மலரைப் பறித்து மாலதியின் இடுப்பிலிருந்த குழந்தையின் கையில் கொடுத்தான். தன் கையில் மலரைப் பற்றிய குழந்தை பொக்கை வாயைக் காட்டிச் சிரித்தது.



ரமண்லால் வஸந்தலால் தேசாய் :: மொழி பெயர்ப்பு : ரா. வீ.

22. அழகுப் போர்

சுதாகர் நாள் தவறாமல் ராதாவுக்குச் சொல்லிக் கொடுக்கப் போய் வரலானான். பரமானந்தரின் விடுதிக்கும் ஜ்வாலாப் பிரஸாதின் பங்களாவுக்கும் வெகுதூரம் இருந்தது. அதனால் அவன் அந்த விடுதிக்கும் பங்களாவுக்கும் போய் வரக்கூடிய சௌகரியம் வேண்டி இரண்டுக்கும் நடுவில் உள்ள ஒரு இடத்தை வாடகைக்குப் பேசிக்கொண்டு அங்கேயே இருக்கலானான். வாரத்தில் இரண்டொரு தடவை பரமானந்தரைச் சந்திக்கப் போவான். அவரிடம் உரையாடிக் கொண்டிருப்பான். அவருடைய ஆலோசனைகள், நல்லுபதேசங்கள் ஆகியவற்றைக் கேட்பான். அதுமட்டும் அல்ல; குயிலியின் இனிய கீதங்களையும் கேட்டு ஆனந்திப்பான். அவளுடைய பாட்டில் அவனுக்கு அலாதிப் பிரமையும் பிரேமையும் உண்டாகி யிருந்தன.

ராதாவின் இலக்கியப் பயிற்சி நாளுக்கு நாள் முன்னேறிக் கொண்டிருந்தது. அவள் சுதாகரின் உதவியைக் கொண்டு, டோஸ்டாவேஸ்கி, கோர்க்கி முதலியவர்களைக் கூடப் படிக்க ஆரம்பித்திருந்தாள். சுதாகரின் சொல்லித் தரும் முறை அவளுக்கு வெகு திருப்தி அளித்தது. எனவே, அவள் அடிக்கடி அவனைத் தன் பங்களாவிலேயே தங்குமாறு கூட வற்புறுத்தினாள். ஆனால் ஏனோ தெரியவில்லை, சுதாகர் அவளுடைய வீட்டில் தங்கச் சம்மதிக்க வில்லை. அவனை உள்ளூற ஏதோ ஒரு இனந்தெரியாத அச்சம் வாட்டிக் கொண்டிருப்பதாகவே தோன்றியது.

ஜ்வாலாப் பிரஸாத் வியாபாரத் துறையில் பெரும் புள்ளியாதலால், அவர் வீட்டில் வெகு அபூர்வமாகத்தான் இருந்து வந்தார். அவருக்கு வெளியில் ஏதாவது வேலை இருந்து கொண்டே யிருந்தது. அவர் வீட்டுக்கு வரும் பொழுதெல்லாம் அவருடைய மனைவி ராதா சுதாகரின் அறிவுத் திறனையும் மேதையையும் பற்றி வெகுவாகப் புகழ்வாள். ஏனெனில் அவர் வீட்டில் இருக்கும்பொழுது சுதாகர் வருவதில்லை. சுதாகர் வரும்பொழுது அவர் வீட்டில் இருப்பதில்லை. ராதாவின் வாய் மொழியாகச் சுதாகரைப் பற்றிய புகழ் மொழிகளைக் கேட்டு ஜ்வாலாப் பிரஸாத், "அப்படியா? நிஜமாகவா? தேவலையே! பேஷ், பேஷ்! பலே பேஷ்!" என்று சொல்லித் தாமும் மகிழ்ந்து தம் மனைவியையும் மகிழ வைப்பார். "விக்கிரமாதித்தனும் பதுமைகளும்" என்னும் கதையைக் கூறும் பொழுது குழந்தைகளைச் சந்தோஷப் படுத்துவதற்காக 'பேஷ்! பலே பேஷ்!' என்று கூறுவது போலத்தான் ஜ்வாலாப் பிரஸாதும் ராதாவின் மனத்துக்கு மகிழ்ச்சியை அளிப்பது ஒன்றையே தம் குறிக்கோளாகக் கொண்டிருந்தார். அவருக்கு என்ன வேண்டும்? அவள் சந்தோஷமா யிருந்தால் அவருக்கும் சந்தோஷம். அவ்வளவுதானே?

சுதாகரின் உதவியையும் ஆலோசனைகளையும் கேட்டு ராதா கட்டுரைகள் எழுதினாள்; கவிதைகள் புனைந்தாள். பிரசங்கங்கள் புரிந்தாள்! அவற்றில் எல்லாம் அவளுக்கு வெற்றி கிட்டியது. புகழும் பெருமையும் கிட்டின. பணத்தைப் பற்றித்தான் அவளுக்கு ஒரு லட்சியமே இல்லையே! ஏனெனில் அவளிடம் இல்லாத பணமா? பேரும் புகழும் அவள் குறிக்கோளாயிருந்தனவே யொழியப் பணம் ஒரு பொருட்டாகவே இல்லை. அவள் பிரசங்கம் செய்யும்பொழுது, அவளுடைய அடுக்குச் சொற்களைக் கேட்டு ஜனங்கள் கைதட்டி விட்டால், அவளுக்குத் தன் ஜன்மமே சாபல்ய மடைந்து விட்டதாகத் தோன்றும். அவள் கவிதையை யாராவது பாராட்டிக் கடிதம் எழுதி விட்டாலோ அல்லது நேரில் வந்து சில வார்த்தைகள் சொல்லி விட்டாலோ அவளுடைய ஆனந்தத்தைப் பற்றிக் கேட்கவே வேண்டாம். எந்தப் பத்திரிகாலயத்திலிருந்தாவது கட்டுரையோ, கவிதையோ, கதையோ அனுப்புமாறு கேட்டுக் கடிதம் வந்து விட்டால் அவளுக்கு ஏற்படும் பூரிப்பைச் சொல்லி முடியாது.

ஆனால் இவ்விஷயங்களில் தன் கையைக் காட்டிலும் சுதாகரின் கைதான் ஓங்கி யிருக்கிறது என்பதை அவள் என்றுமே மறந்த

தில்லை. அவன் இல்லாவிட்டால் தனக்கு ஏது இந்தப் பெருமை என்றே எண்ணி வந்தாள். தன் கவிதை, கட்டுரைகளைப் பற்றி வந்திருக்கும் புகழுரைகளைச் சுதாகருக்குப் படித்துக் காட்டி விட்டு, "நீங்கள் திருத்தம் கொடுத்தது எவ்வளவு அழகாக அமைந்து விட்டது, தெரியுமா?" என்று கூறி அவ்வளவு புகழுக்கும் அவனே காரணம் என்று சொல்லுவாள்.

அவள் ஜ்வாலாப் பிரஸாதின் மனைவி தான். தார்மிகக் காரியங்கள் நடக்கும் பொழுது அவருடன் இருக்க வேண்டிய பிரமேயம் அவளுக்கு அதிகமாகக் கிடைத்திருக்கிறதே யொழிய மற்ற நேரங்களில் அவருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு அவளுக்குக் கிட்டவே இல்லை. கணவன் மனைவி என்ற தொந்தத்தைத் தவிர ஜ்வாலாப் பிரஸாதிடம் நெருங்கிப் பழகி அளவளாவி அவர் உள்ளத்தை அளந்து புரிந்து கொள்ளும் அளவுக்கு அவளுக்குச் சந்தர்ப்பமே அதுவரை சரியாக வாய்த்ததில்லை.

சுதாகர் அவளுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கவென்று நியமிக்கப்பட்டான். அதிக நேரம் அவளுடன் இருந்து பழகினான். அதன் பலனாக அவனுடைய தீர்ந்த அறிவு, பெருந்தன்மை, பழகும் பண்பு ஆகியவற்றை அவள் அருகிலிருந்து உணர முடிந்தது. அவனுடைய அருங் குணங்களுக்காக வேண்டி அவனுக்கு மதிப்பும் மரியாதையும் அவள் கொடுக்க முடிந்தது. அவன் குணங்கள் அவளை வெகுவாகக் கவர்ந்து விட்டன. அவள் சுதாகரை மிகுந்த உயர்ந்த நோக்குடனேயே பார்த்துப் பூரித்து வந்தாள். சுதாகர் கோபித்துக் கொண்டு விடக்கூடாதே என்று கண்ணில் எண்ணெய் விட்டுக் கொண்டு வெகு ஜாக்கிரதையாக அவனுடன் பழகி வந்தாள்.



சுதாகரை அவள் கருத்தாகக் கவனித்து வருகிறாள்

என்பது அவள் செய்யும் பல காரியங்களிலிருந்து தெளிவாயிற்று. படிப்பு விஷயத்தையேதான் எடுத்துக் கொள்வோமே! நாம் சரியாகப் படிப்பில் அக்கறை செலுத்தவில்லை என்று சுதாகர் எங்கு கோபித்துக் கொண்டு விடுவானோ என்ற பயத்தில் படிப்பது – எழுதுவதில் மனத்தை மிகவும் செலவிட்டு வந்தாள். சுதாகரும் கல்வி கேள்விகளில் அக்கறை காட்டிப் படிக்கும் அவளிடம் ஒரு புதுமையைக் கண்டான். அது அவன் உள்ளத்தை வெகுவாகக் கவர்ந்தது. அவளுடைய கள்ளங் கபடமற்ற நேர்மையும் பரிசுத்தமும் உருவான நடவடிக்கைகளைக் கண்டு, பெண்களிடம் அவன் கொண்டிருந்த பெருமை யுணர்ச்சி பல மடங்காக அதிகரித்தது. ஆயினும் அவன் உள்ளத்திலே ஒரு பீதி உணர்ச்சி இடம் பெறத்தான் செய்தது; இருதயம் படபட வென்று துடிக்கத்தான் செய்தது.

ஒரு நாள் தினசரி வழக்கப்படி சுதாகர் வந்ததும் ஜ்வாலாப் பிரஸாதின் அறையில் போய் உட்கார்ந்து கொண்டான். அப்பொழுது ராதாவும் வீட்டில் இல்லை; ஜ்வாலாப் பிரஸாதும் வீட்டில் இல்லை. சிறிது நேரம் உட்கார்ந்திருந்த அவன் எழுந்து போய் விடலாமா என்று கூட எண்ணினான். அவன் தன் எண்ணத்தைச் செயலாக்கும் நோக்கத்துடன் எழுந்திருப்பதற்கும், வேலைக்காரன் வந்து, "அம்மா இருக்கச் சொன்னாங்க. இதோ வந்து விடுவாங்க!" என்று சொல்வதற்கும் சரியாயிருந்தது. எனவே, அவன் தன் காரியத்தைச் செயலாக்க முடியாமல் மறுபடியும் உட்காரும்படியாகி விட்டது. எனவே, தான் உட்கார்ந்திருந்த அதே நாற்காலியில் போய் அவன் மறுபடியும் உட்கார்ந்து கொண்டான்.

மனிதன் பேசாமல் இருக்க நினைத்தாலும் மனம் சும்மா விடுவதில்லையல்லவா? அலுப்புச் சலிப்பு இல்லாமல் அது ஒன்று தானே ஏதாவது வேலை செய்து கொண்டிருக்கிறது? அவன் மனம் சிந்தனையில் ஆழ்ந்தது. அவன் நினைவிலிருந்து மனோரமா இன்று வரை ஒரு கணம் கூட அகன்றதில்லை. அவள் தான் முதன் முதலில் அவன் நினைவுத் திரையில் வந்து நின்றாள். பழைய விஷயங்களையெல்லாம் மனம் கிளறிக் கிளறி என்ன என்னவெல்லாமோ யோசித்தது. அவன் மனோரமாவையும் ராதாவையும் ஒப்பிட்டுப் பார்க்கலானான். இருவருக்கும் இடையில் அவன் நினைவுத் திரையில் குயிலியும் வந்து கலந்து கொண்டாள். குயிலியின் குரல் இனிமை, ராதாவின் புத்திக் கூர்மை, மனோரமாவின் இருதயத்து இனிமை, ஒவ்வொன்றும்

ஒவ்வொரு விதத்தில் அவனுக்கு வெகு உயர்ந்தவையாகத் தோன்றின.

ஒருவரின் ஸ்தானத்தை இன்னொருவர் பெற முடியாத அளவுக்கு அந்தந்தப் பண்புகள் அவர் அவர்களிடம் அற்புதமான முறையில் இடம் பெற்றிருந்தன. எனவே, அவன் உள்ளத்தில், 'எல்லோரிலும் யார் அதிக நல்லவர்கள்?' என்ற கேள்வி இடம் பெற்றது. அவன் அவர்களில் யாரை அதிகமாக விரும்புவது? இருதயத்தை விரும்புவதா, இனிமையை விரும்புவதா, அல்லது அறிவை விரும்புவதா? இது போன்ற கேள்விகளும் மேலுக்கு மேல் அவன் இருதயத்தில் இடம் பெறாமல் இல்லை. உலகத்தில் எத்தனையோ பேர் நல்ல இருதயம் படைத்தவர்களாக இருக்கிறார்கள். ஆனால் அறிவுக் கூர்மை இல்லாமல் இருந்து விட்டால், நாளாவட்டத்தில் அவர்கள் மனத்துக்கு அலுத்து விடுகிறார்கள். அதிகம் பிடிக்காதவர்களாகி விடுகிறார்கள். அது மட்டுமா? இருதய சுத்தத்தின் காரணமாக 'சாதுக்கள், அப்பாவிகள்!' என்ற பட்டப் பெயருக்கும் இலக்காகி விடுகிறார்கள்.

ஆமாம், மனோரமாவிடத்தில் புத்திக் கூர்மை இல்லை என்று யார் சொன்னார்கள்? ராதாவைப்போன்ற நவநாகரிக அலங்காரங்களும் சஞ்சல சுபாவமும் சபல சித்தமும் அவளிடம் இல்லை என்பது என்னவோ உண்மைதான். எப்பொழுதுமே 'குறு குறு' வென்று சஞ்சல சுபாவமும் சபல சித்தமும் படைத்திருந்து விட்டால், அதுவும் எங்கே நன்றாயிருக்கும்? அலுத்து விடாதா? மிகவும் முன்னேற்ற நோக்கமுள்ள, மிகவும் புத்திக் கூர்மை படைத்த ஒரு பெண் நாள் முழுவதும் இருபத்திநாலு மணி நேரமும் தனது மூளையின் மேதையையும், புத்தி சமத்காரத்தையும் மட்டுமே காட்டிக் கொண்டிருந்தால், அவளுடைய இருதயத்தில் உள்ள இனிமை என்னவாகும்? இனிப்பான பழத்தில் உள்ள ரஸம் வற்றிச் சுண்டி உலர்ந்து விட்டால் அதை அப்புறம் யார் லட்சியம் செய்வார்கள்? எனவே, எவர்க்கும் புத்திக் கூர்மை மட்டும் போதாது; இனிய இருதயமும் வேண்டியதுதான்.

ஆனால் பாவம், குயிலி ரொம்ப நேர்மையானவள். ரொம்ப நல்லவள். அவள் தன் வாயைத் திறந்து பாடத் தொடங்கி விட்டால், சொர்க்கலோகமே இறங்கி இந்தப் பூலோகத்துக்கு வந்து விடும். காற்றுக் கூட ஆடாமல் அசையாமல் நின்று அவளுடைய பாட்டைக் கேட்டுக் கிறங்கி நிற்கும். அவளைச் சுற்றிலும் உள்ள சூழ்நிலை அமைதியே உருவாக, பரிசுத்தத்துக்குப் பிறப்பிடமாக ஆகிவிடும். கோபம்–தாபம் முதலிய சகல ராகத் துவேஷங்களும் இருந்த இடம் தெரியாமல் பறந்து விடும். ஆனால் அந்தக் குயிலி யார்? நெறி தவறிய வாழ்க்கை நடத்திய ஒரு குடும்பப் பெண்! ராதா யார்? ஜ்வாலாப் பிரஸாதைப் போன்ற பணம் படைத்த ஒரு குடும்பஸ்தரின் மனைவி. மனோரமா யார்? சுதாகருடைய ஒவ்வொரு ரோமமும், "மனோரமா என்னுடையவள், மனோரமா என்னுடையவள்!" என்று ரோமாஞ்சலி பூத்துக் கூவின; பறை சாற்றின.

வெளியே மோட்டார் காரின் ஹாரன் சப்தம் கேட்டது. சுதாகர் விழித்துக் கொண்டே, கண்டு கொண்டிருந்த கனவிலிருந்து திடுக்குற்று விழித்துத் தன்னைச் சமாளித்துக் கொண்டு உட்கார்ந்தான். இவ்வளவு நேரமும் ஒரு சல்லிக்கு உபயோகமில்லாமல், பிற பெண்களைப் பற்றி நாம் ஏன் யோசித்துக் கொண்டிருந்தோம் என்பதை அவனால் புரிந்து கொள்ள முடியவில்லை. பெண்களின் அழகையும் குணங்களையும் ஒப்பிட்டுப் பாகுபடுத்தி அக்கக்காகப் பிரித்து அவன் பார்க்க வேண்டிய அவசியம் என்ன?



வாலிப முறுக்கேறியுள்ள தன் இருதயம் தனது நன்னடத்தைக்கும் பிரும்மசரியத்துக்கும் எதிராகக் கிளர்ச்சி செய்யத் தொடங்கி விட்டதை அவன் உணர்ந்தான். நம்மையும் மீறி இப்படி யோசனையா? அவனுக்குத் தன் மேலேயே ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. ஆத்திரம் வரட்டும், வராமற் போகட்டும், ஆண் உள்ளம் பெண்களின் அழகைக் கண்டு விட்டால், பிச்சைக்காரனைப் போல் தொடர ஆரம்பித்து விடுகிறது. இதை காளடைவில் எல்லாருமே புரிந்து கொள்கிறார்கள். ஆனால் பெண்கள்தான் முதலில் புரிந்து கொள்கிறார்கள். அந்த அழகு இருதயத்தின் அழகாயிருந்தால் என்ன? புத்தியின் அழகாயிருந்தால் என்ன, உடல் அழகாயிருந்தால் என்ன? அழகு அழகுதானே? காளைப் பருவத்தினனான சுதாகரின் மனம் அழகைப் பின்பற்றிச் சென்று அப்படி அல்லாடியதில் ஆச்சரியம் என்ன?

ராதா நேரே சுதாகர் இருந்த அறைக்குள் தான் முதலில் நுழைந்தாள். சுதாகரைக் கண்டதும் அவள் கண்கள் மலர்ந்தன. முகத்தில் மகிழ்ச்சி கோடிட்டது.

"இன்று வெகுநேரம் ஆகிவிட்டது. மன்னிக்க வேண்டும், சுதாகர்!" என்று கூறியவாறே சுதாகரின் அருகில் இருந்த நாற்காலியில் வந்து உட்கார்ந்து கொண்டாள் ராதா. "வெகு நேரமாகவே 'வரவேண்டும், வர வேண்டும்' என்று துடியாய்த் துடித்துத் தவியாய்த் தவித்துக் கொண்டிருந்தேன். ஆனால் ஜனங்கள் போகவே விடவில்லை. நீங்கள் எங்கேயாவது திரும்பிப் போய் விடுவீர்களோ என்று பயந்து கொண்டேதான் வருகிறேன்!" என்று சொல்லி இதழ்க்கடையில் இளநகையை வருவித்துக் கொண்டாள்.

"ஆமாம். நானும் உட்கார்ந்து உட்கார்ந்து அலுத்து விட்டேன். ஒரு கணம் போய் விடலாமா என்றுகூட எண்ணினேன். ஆனால் வேலைக்காரன் வந்து, நீங்கள் உட்கார்ந்திருக்குமாறு சொல்லிப் போனதாகச் சொன்னான். அதனால்தான் இத்தனை நேரம் உட்கார்ந்திருந்தேன்!" என்றான் சுதாகர்.

"நல்ல காரியம் செய்தீர்கள்! நீங்கள் போய் விடாமல் இருக்க வேண்டுமே என்று பகவானை வேண்டிக் கொண்டேதான் வந்தேன். இன்றைக்கு இனிமேல் எங்கே படிக்க முடியப் போகிறது? நேரமாகி விட்டது. கொஞ்ச நாழிகை பேசிக் கொண்டிருப்போம், வாருங்கள்!"

இவ்விதம் கூறியவள் எழுந்து பக்கத்திலிருந்த மேஜையருகில் சென்றாள். காலையில் வந்த கடிதங்கள் அதன் மேல் வைக்கப்பட்டிருந்தன. "காலையில் வந்த கடிதங்கள் இன்னும் பார்க்காமலேயே கிடக்கின்றன!" என்று சொல்லி, அவற்றை எடுத்து ஒவ்வொன்றாகப் பிரித்துப் படிக்கலானாள். சுதாகர் பேசாமலே உட்கார்ந்திருந்தான். கடிதங்களைப் பார்த்துக் கொண்டே வந்த ராதா ஒரு பாக்கெட்டை எடுத்தாள். அது வெகு அழகாகப் 'பாக்' செய்யப்பட்டிருந்தது. பாக்கெட்டை அவிழ்த்த ராதா அதிலிருந்து ஒரு புகைப்படத்தை எடுத்தாள். தன் புருவங்களைத் தூக்கிக் கொண்டு சிறிது நேரம் வெகு உன்னிப்பாகக் கவனித்தாள். பிறகு அதை வெகு அலட்சியமாக மேஜையின் மேல் போட்டு விட்டாள். சுதாகரும் உட்கார்ந்தபடியே அந்தப் படத்தைக் கவனித்தான். பிறர் பொருளைப் பார்க்கக் கூடாது என்று நியாயம் தெரிந்தவர்கள் சொல்கின்றார்கள்; படித்தவர்கள் பேசுகிறார்கள். ஆனால் நல்ல பொருளை எப்பேர்ப்பட்ட தர்மாத்மாவாயிருந்தால் தான் என்ன? எப்பொழுது பார்க்காமல் இருந்திருக்கிறான்? மனிதன் இயல்பாகவே அழகிய பொருள் என்றால் பார்க்கத்தான் விரும்புகிறான். எத்தனை மனத்தை அடக்கினாலும் அவனுக்குப் பார்க்காமல் இருக்கத் தோன்றுவதில்லை. சுதாகரும் மனிதத் தன்மை படைத்த மனிதன்தானே? அதற்கு அவன் விதிவிலக்கானவன் அல்லவே! அவனுக்கு அதைப் பார்க்க வேண்டும் என்ற ஆவல் எழுந்ததில் வியப்பு என்ன?

எட்டி எழும்பிப் பார்த்தவன் வியப்பினால் துணுக்குற்றான். அது மனோரமாவின் படம். அதை அறிந்ததும், அவனுக்குப் படத்தை வாங்கி ஆசை தீரப் பார்க்க வேண்டும் என்று தோன்றியது. மனோரமா அவனுடைய உள்ளத்தைக் கவர்ந்தவள் தான். ஆயினும் அவளுடைய படத்தை இந்தப் பங்களாவில் வந்து ராதாவிடம் கேட்டு வாங்கிப் பார்ப்பதா? அவளிடம் 'அந்தப் படத்தைக் கொடுங்கள்! பார்த்து விட்டுத் தருகிறேன்!' என்று எப்படிக் கேட்பது? அவள் கண்ணியக் குறைவாக நினைக்க மாட்டாளா? கலகலப்பான சுபாவம் படைத்த சாமர்த்தியசாலியாக இருந்தால் எப்படியாவது நைச்சியமாகப் பேசிக் கேட்டு வாங்கிப் பார்த்திருப்பான்; தன் ஆவலைத் தீர்த்துக் கொண்டிருப்பான். ஆனால் சுதாகரோ சங்கோசி, பண்பு தெரிந்தவன்; நாகரிகம் அறிந்தவன். அவனுக்குப் படத்தைக் கேட்டு வாங்கிப் பார்க்கத் துணிவு உண்டாகவில்லை. படம் மனோரமாவினுடையது தான். ஆனால் அவன் அதை எப்படிக் கேட்டு வாங்குவது? அவன் மனம் அலைபாயத் தொடங்கி விட்டது.

வெளியிலிருந்து இன்னொரு மோட்டார் வரும் சப்தம் கேட்டது. அடுத்த சில வினாடிகளுக்கெல்லாம் ஜ்வாலாப் பிரஸாத் உள்ளே நுழைந்தார். அவர் முகத்திலே பரபரப்பும், துடிதுடிப்பும் கோடிட்டுக் கொண்டிருந்தன. அழகிய மனைவி, அழகிய பங்களா, அளவிட முடியாத ஐசுவரியம் இவ்வளவு இருந்துங்கூட அவருடைய முகத்தின் கடுகடுப்பு கொஞ்சமும் குறையவில்லை; மாறவில்லை.

சேட் ஜ்வாலாப் பிரஸாத் உள்ளே நுழைவதைக் கண்டதும் சுதாகர் எழுந்து நின்று பணிவாக வணக்கம் தெரிவித்தான். ஆனால்

ஜ்வாலாப் பிரஸாத் கடு கடுப்பும் துடி துடிப்பும் நிறைந்த முகத்துடனேயே ஒரு கோடும் சிரிப்புச் சிரித்துப் பதில் வணக்கம் தெரிவித்தார். பிறகு, "படிப்பு நடந்து கொண்டிருக்கிறாற் போலிருக்கிறது. நடக்கட்டும், நடக்கட்டும். பாதகமில்லை. நான் நடுவில் குறுக்கிட்டு அதற்குக் குந்தகம் விளைவிக்க விரும்பவில்லை. இவன் உன்னைப் பற்றி ரொம்ப ரொம்பப் புகழ்கிறான், அப்பா! உபாத்தியாயர் என்றால் அப்படித்தான் இருக்க வேண்டும்!" என்று சொல்லிவிட்டு அங்கிருந்து போகப் புறப்பட்டார்.

அவர் அவ்வளவு அவசரப்பட்டுக் கொண்டு அங்கிருந்து புறப்படுவது ராதாவுக்குப் பிடிக்கவில்லை. "உட்காருங்களேன். வந்ததும் வராததுமாகப் பறக்கப் பறக்க எங்கே புறப்படுகிறீர்கள்? கொஞ்ச நேரம் உட்கார்ந்து களைப்பாறி விட்டுப் போனால் என்ன குடியா முழுகிவிடும்?" என்று கேட்டாள்.

"இதோ போனதும் வந்ததுமாகத் திரும்பி வந்து விடுகிறேன். ரொம்ப ரொம்ப முக்கியமான காரியம் ஒன்று காத்திருக்கிறது. அதை முடித்துக் கொண்டு வந்து உன் சொல்படி உன் அருகிலேயே உட்காருகிறேன்!" என்றார் ஜ்வாலாப் பிரஸாத்.

"அவ்வளவு என்ன அவசரக் காரியம்? உட்காருங்கள், சொல்கிறேன். உங்கள் மில், ஆபீஸ் எல்லாவற்றுக்கும் ஒரு நாள் தீயை வைத்துப் பொசுக்கி விட்டுத்தான் மறு காரியம் பார்க்க வேண்டும் என்று தோன்றுகிறது. எப்பொழுதும் மில், ஆபீஸ் என்று கட்டிக் கொண்டு இப்படி நீங்கள் அழுதால்......" என்று ஆங்காரத்துடன் ஆரம்பித்து விட்டாள் ராதா.

ராதாவைச் சாந்தப் படுத்தும் நோக்கத்துடன் ஜ்வாலாப் பிரஸாத் சிரித்தார். வேண்டும் என்றே ஒருவர் இப்படி பொய்ச் சிரிப்புச் சிரித்தால் அது யாருக்குமே பிடிப்பதில்லை; ருசிப்பதில்லை. விஷமாகத்தான் படுகிறது. ராதாவின் உதடுகள், அவளுக்கு அவருடைய அந்தச் சிரிப்புப் பிடிக்கவில்லை என்பதைக் காட்டிக் கொண்டு விட்டன. அவள் உதட்டை மடித்துக் கடித்துக் கொண்டதைக் கண்டதுமே அவளுக்கு அவருடைய அந்தச் செய்கை பிடிக்கவில்லை என்பதை யார்தான் புரிந்து கொள்ள மாட்டார்கள்?

இவ்வளவு அன்புடன் உட்காருமாறு ராதா வற்புறுத்திக்கூட ஜ்வாலாப் பிரஸாத் உட்காராமல் போனது சுதாகருக்கே கூடச் சரியாகப் படவில்லை. 'இவர் என்ன மனிதர்?' என்றுதான் எண்ணினான். ஜ்வாலாப் பிரஸாத் தன்னை அலட்சியம் பண்ணியதைக் கண்டதுமே ராதாவின் முகம் தொங்கி விட்டது. அவள் தன் வருத்தத்தைக் காட்டிக் கொள்ளாதவள் போல் மற்ற கடிதங்களைப் பிரித்துப் படிக்கலானாள்.

உள்ளே சென்று சில முக்கியமான கடிதங்களை எடுத்துக் கொண்டு ஜ்வாலாப் பிரஸாத் சிறிது நேரத்துக்கெல்லாம் மறுபடியும் அந்த அறைக்கு வந்தார்.

ராதா எழுந்திட்டு அவரைப் பார்க்கவும் இல்லை, வாய்திறந்து ஒரு வார்த்தை பேசவும் இல்லை. ராதா தம் செயலைத் தவறாக எடுத்துக் கொண்டு விட்டாள் என்பதைப் புரிந்து கொள்ள ஜ்வாலாப் பிரஸாதுக்கு நேரம் பிடிக்கவில்லை. எனவே, அறையின் வாசற்படியைத் தாண்டிப் போனவர் திரும்பி வந்தார். நேரே ராதாவின் அருகில் போய்



"பாட்டி! இவர்களெல்லாம் என் நெருங்கிய நண்பர்கள். என் சுகத்திலேயும் சரி, கஷ்டங்களிலேயும் சரி, இவர்களுக்கும் பங்கு உண்டு......"

"அப்படியா? இவர்கள் முகத்தைப் பார்த்தால் இப்பொழுது ஏதோ கஷ்டத்திலே பங்கு எடுத்துக் கொண்டு இருக்கிறாற் போலிருக்கிறதே!"

"நம் வீட்டுத் தீபாவளிப் பக்ஷணம் சாப்பிட இப்பொழுது என்னோடு பங்கெடுத்துக் கொண்டிருக்கிறார்கள்!"

ரயத்துகள் கோரிக்கை

சென்ற கல்கி இதழ்களில் தஞ்சை ஜில்லாவில் நீர்ப்பாசனம் பற்றிப் பிரசுரம் செய்யப்பட்ட கார்ட்டூன் படம், ஸீப் என்ஜினீயரின் கடிதம் முதலியன பார்த்தோம்.

இவ்வூருக்குத் தெற்கு வெளி பங்குகளுக்கு வடிகால் வசதி கிடையாது. ஆதலால் தண்ணீர் வடிய வேண்டுமானால் எங்கள் வாய்க்கால் தலைப்பை அடைப்பதுடன் அருகிலுள்ள இரண்டு வாய்க்கால்களும் அடைக்கப்பட வேண்டும். சாகுபடி ஆரம்பத்தில் இவ்வூருக்கு எந்த வருஷத்திலும் தேவையான தண்ணீர் சப்ளை கிடையாது. இந்த வருஷமும் சென்ற வருஷங்களைப்போல் தண்ணீருக்குத் தந்தியும், தபாலும் அனுப்பியும் பிரயோஜனமில்லை. பிறகு ஆகஸ்ட் மாதக் கடைசியில் வாய்க்காலில் இரு கரையும் ஒரு கரையாகத் தண்ணீர் சப்ளை செய்தார்கள். அதனால் தண்ணீர் வயல்களின் வரப்புகளை உடைத்துக் கொண்டு, ஒரே பிரவாகமாகப் போய் விட்டது. அதன்பின் நாங்கள் எங்கள் வாய்க்கால் தலைப்பை அடைத்துத் தரும்படி லஸ்கரைக் கேட்டதற்கு "தண்ணீர் வேண்டுமென்று தந்தி கொடுத்தீர்களே, நிறையச் சாப்பிடுங்கள்" என்று பதிலுரைத்தார். அதன் பிறகு திருமருகல் ஓவர்ஸியர் அவர்களுக்கு எழுதியதில், எங்கள் கோரிக்கை கிராம முன்ஸீப், கர்ணம் கையெழுத்துடன் வரவேண்டுமென்று சொல்லியனுப்பினார். அப்படிச் செய்தும் ஒருநாள்கூட வாய்க்கால் தலைப்பு அடைக்கப் படவில்லை. இதற்குள் நிலங்களிலுள்ள பயிர்களுக்கு ஏற்படும் சேதம் அவருக்குத் தெரியவில்லை. ஒரு நாள் காய்வதனாலோ, அல்லது ஒரு நாள் அதிகம் தண்ணீர் தேங்குவதினாலோ ஏற்படும் கஷ்டம் ஒரு விவசாயிக்குத் தெரியுமே தவிர அதிகாரிகளுக்குத் தெரியாது.

இந்த நிலையில், தஞ்சையிலுள்ள, சூப்பிரண்டெண்டிங் இஞ்சினீயரையோ அல்லது எக்ஸிக்யூடிவ் இஞ்சினீயர்களையோ ஒரு நடுத்தர விவசாயி நேரில் சந்திக்கவோ அல்லது அவர்களுக்கு ஒவ்வொரு நடவைக்கும் தந்தியோ தபாலோ அனுப்புவதற்கோ முடியுமா? ஒவ்வொரு அதிகாரியையும், விவசாயிகளின் கோரிக்கைகளுக்குச் செவிசாய்த்து வேண்டுவன செய்யும்படி உத்தரவுகள் பிறப்பிக்கும்படி ஸீப் இஞ்சினீயர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறோம்.

சங்கூர் பனங்குடி } கோபுராஜபுரம் வட்டம்
28—10—53 } நன்னிலம் தாலுகா, ரயத்துகள்

நின்றுகொண்டார். ஆனால் ராதா அப்பொழுதும் தலை தூக்கி அவரைப் பார்க்கவில்லை. பேசாமல் மேஜையின் மேல் தலை கவிழ்ந்த வண்ணம் ஏதோ விறுவிறு என்று எழுதிக் கொண்டிருந்தாள். கணவன் மனைவி பிணக்கை உட்கார்ந்து பார்த்துக் கொண்டிருப்பது சுதாகருக்கு உசிதமாகப் படவில்லை. எனவே, வெளியே போக எண்ணி எழுந்தான்.

அதைக் கண்ட ராதா, "சுதாகர்! உட்காருங்கள். எதற்காக எழுந்திருக்கிறீர்கள்? நாம் இன்னும் சிறிது நேரத்துக்கெல்லாம் உலாவப் போகலாம்! இருங்கள்!" என்றாள்.

'ராதா மிகவும் கோபித்துக் கொண்டு விட்டாள். அவள் கோபத்தைப் போக்கிப் பிணக்கைத் தீர்த்துக் கொள்ள நாம் நிஜமாகவே சிரமப்பட்டாக வேண்டியது தான்!' என்று எண்ணினார் ஜ்வாலாப் பிரஸாத். அவள் கோபத்தைக் களையாமல் வெளியே போகக் கூடாது என்றும் தீர்மானித்தார். எனவே, அவள் தலையை வருடியவாறே, "ராதா! நான் உன் சொல்லைக் கட்டாயம் கேட்க வேண்டியவன் தான். உன் சொல்லை மீறாமல் இங்கே தங்க வேண்டியவன்தான். நாம் எல்லோரும் சேர்ந்து உலாவப் போவதில் உள்ள ஆனந்தம் எனக்குத் தெரியாததல்ல. உன்னோடு இருக்க எனக்கும் கொள்ளை ஆசைதான். இருந்தாலும் என்ன செய்வது? நம் காரியத்தைக் கவனிக்க ஒரு நல்ல ஆசாமி கிடைத்து விட்டால் இந்தச் சனியன் பிடித்த தொல்லையிலிருந்து விடுபட்டு விடலாம். இன்று எல்லா மில்களிலும் ஊர்த்தால் நடந்து கொண்டிருக்கிறது. தொழிலாளிகள் சம்பளத்தை உயர்த்தவேண்டும் என்று கோரியிருக்கிறார்கள். நம் மில்லில் கூட இந்தப் புயல் எழும்புவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. எல்லா மில்களையும் போய்ச் சுற்றிப் பார்த்து வரவேண்டும். நிலைமையைச் சரிவரப் புரிந்து கொள்ளாமல் முற்ற விட்டு விட்டால், அப்புறம் ரொம்ப ரொம்ப சிரமப்பட வேண்டியிருக்கும். அதனால்தான் யோசிக்கிறேன். நீ எங்கேயாவது உலாவப் போக விரும்பினால் இன்னொரு மோட்டார் தயாராயிருக்கிறது. நானும் கொஞ்ச நேரத்துக்கெல்லாம் வந்து சேருகிறேன்!" என்று அன்பும் பரிவும் தாண்டவமாடச் சொன்னார்.

ராதா வாய் திறக்கவில்லை. ஜ்வாலாப் பிரஸாதையோ மில் சம்பந்தமான கவலை வாட்டி எடுத்துக் கொண்டிருந்தது. மில்லில் வேலை ஸ்தம்பித்து விட்டால் அவருடைய வாழ்க்கையிலும் அல்லவா வேலையின்மை அதிகரித்து விடும்? அது ராதாவுக்குத் தெரிந்தால்தானே? மில்கள் வேலை செய்யாவிட்டால் லட்சக்கணக்கான ரூபாய்கள் நஷ்டமாகி விடுமே! ராதா பேசாவிட்டால் என்ன? அவள் பேசாத அந்தப்பொழுதும் மிச்சப்படும் அல்லவா? மில்லை அபிவிருத்தி செய்வதில் அந்த நேரத்தைச் செலவிடலாமே! அப்படிச் செய்தால் லட்சக்கணக்காக ரூபாய்கள் வந்து குவியுமே! ராதா இன்று பேசாவிட்டால் நாளை பேசுகிறாள். நாளை பேசாவிட்டால் நாளை நீக்கிப் பேசுகிறாள். அப்படியே அவள் பேசாமை நீடித்தாலும் அவகாசம் கிடைக்கும்பொழுது சிரித்துப் பேசி அவளைச் சரிக்கட்டிக் கொண்டால் போயிற்று! அதற்கும் சரிவரவில்லையென்றால் கொஞ்சம் முகஸ்துதி செய்தால் தானாகச் சரியாகி விடுகிறாள். முகஸ்துதியும் பயன் தரவில்லையென்றால் கடைசி அஸ்திரம் இருக்கவே இருக்கிறது! எல்லாம் என் தப்பு என்று சொல்லி மன்னிப்புக் கேட்டுக் கொண்டால் போயிற்று! எங்கே ஓடி விடுகிறாள்? - ஜ்வாலாப் பிரஸாதின் மனத்திலே இத்தகைய எண்ணங்கள் ஓடிக் கொண்டிருந்தன. (தொடரும்)

ரஸிகமணி டி. கே. சி. அவர்களுக்கு

"கல்கி" காரியாலயத்தார் அளித்த

வாழ்த்துப் பத்திரம்

31 - 10 - 53

ரஸிகமணி டி. கே. சிதம்பரநாத முதலியார் அவர்களுக்கு,

இந்தத் தனிப்பெரும் சிறப்பு வாய்ந்த கம்பர் தரும் ராமாயண அரங்கேற்று விழாவில் தங்களுக்கு எவ்வாறு வாழ்த்துக் கூறுவது என்று தெரியவில்லை. கவிதையில் எழுதலாம் என்றால் கம்பர், வள்ளுவர், மாணிக்கவாசகர் போன்ற மகாகவிகளின் கவிதைகளைத்தான் ஒப்புக் கொள்வீர்கள். வசனத்தில் எழுதலாம் என்றால், "வசனத்தில் என்ன இருக்கிறது! வெறும் உப்புச் சப்பில்லாத காரியம்!" என்பீர்கள்.

கவிதையானாலும் வசனமானாலும் அவற்றின் பின்னால் உண்மையும் உணர்ச்சியும் இருக்குமானால் ஒருவாறு ஒப்புக் கொள்வீர்கள் என்று துணிந்து இந்தச் சில வார்த்தைகளைச் சொல்லுகின்றோம்.

இந்நாளில் கல்வி கேள்விகளில் நல்ல சிறந்தவர்கள் என்று கருதப்படும் ஆங்கிலேயர் நாட்டிலேயே கவிதை என்றால் அநுபவிப்போர் சிலரே தான். "ஆங்கிலேயர் நிறைந்த ஒரு கூட்டத்தை உடனே கலைக்க வேண்டும் என்றால் ஒரு கவிதையை எடுத்துச் சொல்ல ஆரம்பித்தால் போதும்" என்று ஆங்கில நாட்டு இலக்கிய ரசிகர் ஒருவரே கூறியிருக்கிறார்.

அப்படியிருக்கும்போது, தமிழ்நாட்டில் தமிழ்க் கவிதை என்றால் பிரண்டு காத தூரம் ஓடுகிறவர்களே சில காலத்துக்கு முன்பு வரையில் அதிகமாயிருந்ததில் வியப்பு ஒன்றுமில்லை. அந்த நிலைக்கு மாறாக, இன்று தமிழ்க் கவிதையை ஆயிரக்கணக்கான தமிழர்கள் சுவைத்து ரஸிக்கிறார்கள் என்று உண்மையுடன் சொல்லக் கூடியதாயிருக்கிறது. இந்த அற்புதமான மாறுதலைத் தாங்கள் நாற்பது வருஷத்து இடைவிடாத கவிதைத் தொண்டின் மூலமாகச் சாதித்துள்ளீர்கள்.

இந்நாளில் புத்தகங்கள் அச்சகங்களில் அச்சிடப்படுவதைக் காண்கிறோம். நூலாசிரியர்கள் பலமுறை அச்சுத்தாள்களைப் பிழை திருத்திய பிறகு புத்தகங்கள் அச்சாகின்றன. ஆயினும் அனேக அச்சுப் புத்தகங்களில் அச்சுப் பிழைகள் மலிந்திருப்பதைக் காண்கிறோம். புத்தகத்தின் கடைசியில் பிழை திருத்தம் என்று பக்கம் பக்கமாகச் சேர்க்கிறார்கள்.

நமது நாளிலேயே இப்படி இருக்கும்போது, ஏறக்குறைய ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் கம்பர் இயற்றிய மகா காவியத்தை எத்தனை பேர் ஓலைச் சுவடிகளிலே பெயர்த்து எழுதியிருப்பார்கள், எவ்வளவு பிழைகளுடனும் மாறுதல்களுடனும் அவை நமக்குக் கிடைத்திருக்கும் என்று நாம் கற்பனை செய்து கொள்ளலாம். இதுவரை வெளியாகியிருக்கும் சில கம்பராமாயணப் பதிப்புக்களில் பல பாடல்களுக்கு இருபதுக்கு மேற்பட்ட பாடபேதங்கள் தந்திருக்கிறார்கள். ஒரு பாடலுக்கு இருபது பாடபேதம் என்றால், அதை நானூறு விதமாகப் பெயர்த்து எழுதலாம். இந்த நானூறு வகைப் பாடல்களில் எது உண்மையான கம்பர் பாடல் என்று கண்டுபிடிப்பது எங்ஙனம்!

தங்கள் வாழ்நாள் முழுவதும் கவிதை ஆராய்ச்சியும் கம்ப ராமாயண ஆராய்ச்சியும் செய்து உண்மையான கவிதைப் பண்பு வாய்ந்த கம்பர் பாடல் எது என்று கண்டு பிடித்து எடுத்துச் சொல்லத் தாங்கள் உரிமை பெற்றிருக்கிறீர்கள். தங்களுடைய அத்தகைய நாற்பது வருஷத்து இடைவிடாத கவிதைத் தொண்டின் பயன்தான் இன்று "**கம்பர் தரும் ராமாயண**"மாக அரங்கேறுகிறது.

குற்றாலத்துறை முனிவர் பெருமானே!

இன்னும் தாங்கள் தமிழ்த் தாய்க்குச் செய்திருக்கும் தொண்டுகளை விரிவாகச் சொல்ல முற்பட்டால் ஒரு புதிய ராமாயணமே எழுதியாக வேண்டும்.

மூத்தொள்ளாயிரம் முதலிய புராதனமான தமிழ்க்கவிதைச் செல்வங்களைத் தேடி எடுத்துத் தமிழர்களுக்கு வழங்கியிருக்கிறீர்கள். ஒவ்வொன்றும் ஒரு விலையில்லா மாணிக்கம் என்று சொல்லக் கூடிய ஆயிரக் கணக்கான தனித்தமிழ்ப் பாடல்களைக் கண்டு எடுத்துக் கொடுத்திருக்கிறீர்கள். அவற்றின் கவிதை அழகை நாங்கள் உணரும்படி விளக்கம் தந்து உதவியிருக்கிறீர்கள். உயிர் உள்ள தமிழில், உயிர் உள்ள தமிழ் வசனத்தில் "இதய ஒலி" போன்ற நூல்களைத் தந்திருக்கிறீர்கள்.

தமிழிசை இயக்கத்துக்குப் புத்துயிர் அளிப்பதற்கு ராஜா சர். அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் இயக்கம் தொடங்கியபோது அவர்களுக்குத் தாங்கள் அருந் துணையாக நின்று பணியாற்றியதைத் தமிழர்கள் என்றேனும் மறக்க முடியுமா!

தங்கள் வாழ்வு தமிழர்களின் வாழ்வு! தங்கள் நிடம் தமிழர்களின் நிடம்! தாங்கள் நீடுழி வாழ்ந்திருந்து தமிழ்த் தாய்க்கும் தமிழகத்துக்கும் தொண்டு செய்யுமாறு இறைவன் அருளை வேண்டுகிறோம்.

இங்ஙனம்

"கல்கி" காரியாலயத்தார்

ஜானகியின் பரிசு

ராமப்ரியா

"தபால்!" என்ற சத்தம் கேட்டவுடனேயே உள்ளேயிருந்த ஜானகி வாசல் பக்கம் ஆவலோடு ஓடி வந்தாள். ஒரு கடிதத்தைத் தபால்காரர் அவளிடம் கொடுத்து விட்டுச் சென்றார். கையெழுத்தைப் பார்த்ததும் அவள் முகம் சந்தோஷத்தினால் மலர்ந்தது. கதவைத் தாளிட்டுக் கொண்டு உள்ளே வந்து கடிதத்தைப் படித்தாள்.

(முகாம்) மணப்பாறை.

அன்புள்ள ஜானகிக்கு, 24—10—53

நான் அவசரமாக எனது வேலை விஷயமாகச் சென்னை வரையில் போக வேண்டியிருக்கிறது. தற்சமயம் என்னிடம் உள்ள பணம் எல்லாம் செலவழிந்துவிட்டது. பாங்கில் உன் பெயரில் நீ போட்டிருக்கும் பணத்திலிருந்துதான் எடுத்துத் தர வேண்டும். நூற்றைம்பது ரூபாய் அவசரமாக எனக்கு வேண்டும். நான் நாளை மாலை எக்ஸ்பிரஸில் அங்கு வருகிறேன். அதற்குள் பணத்தைத் தயாராக எடுத்து வைத்திரு. இரவு எக்ஸ்பிரஸுக்கு நான் சென்னை போக வேண்டும். அசட்டையாக இருக்காதே. என் சம்பளம் வந்தவுடன் உனக்கு அதைக் கொடுத்து விடுகிறேன். மற்றவை நேரில்.

உன் அன்புள்ள,

சீனிவாசன்.

ஜானகியின் உள்ளம் பூரித்தது. கணவனுக்குச் சமயத்தில் தன்னால் ஒத்தாசை பண்ண முடியும், பண்ணப் போகிறோம் என்றதும் அவளுக்கு ஒரே சந்தோஷமாக இருந்தது. உடனே கதவை இழுத்துப் பூட்டி விட்டு வேலைக்காரியைத் துணைக்கு அழைத்துக் கொண்டு பணத்தை எடுத்துக் கொண்டு வர பாங்குக்குச் சென்றாள். அவள் மனம் ஒரு வருஷத்துக்குப் பின்னால் சென்றது.

பல சிற்றூர்களில் வேலை பார்த்துவிட்டு அப்போதுதான் திருச்சிக்கு வந்தான் சீனிவாசன். வீடெல்லாம் ஒரு மாதிரி சீராக்கின பின்னர் ஜானகி மெதுவாக சீனிவாசனிடம் வந்து நின்றாள். அவள் வந்து நிற்பதைப் பார்த்தவுடனேயே சீனிவாசனுக்கு ஏதோ கேட்கத்தான் அவள் வந்திருக்கிறாளென்று தோன்றியது.

"என்ன வேணும் ஜானகி!" என்றான் சீனிவாசன். அவள் தயங்கி நின்று கொண்டிருந்தாள்.

"இதென்ன இன்றைக்குப் புதிதாக உனக்கு வெட்கம் வந்து விட்டது. என்ன வேண்டும் சொல்லேன்!" என்றான் மறுபடியும்.

"நான் ஒன்று கேட்கப் போகிறேன். நீங்கள் கோபித்துக் கொள்ள மாட்டீர்களே!"

"பீடிகை எல்லாம் பலமாக இருக்கிறதே!, என்றைக்கு உன்னைக் கோபித்துக் கொண்டிருக்கிறேன் சொல்லு!" என்றான் சீனிவாசன்.

"இப்போது உங்களுக்கு முன்னைவிடச் சம்பளம் அதிகமாக வரப்போகிறதோ இல்லையோ!"

"ஆமாம்! அதுதான் அன்றைக்கே நான் சொன்னேனே, அதைத் தவிர நான் மாதத்தில் பதினைந்து நாட்கள் "காம்ப்" போக வேண்டும். அதற்கு வேறே தனியாக வரும்படி உண்டு. எதற்கு இப்படிச் சுற்றி வளைத்துக் கேட்கிறாய்!"

"எவ்வளவு வந்தாலும் செலவழித்துக் கொண்டே போனால் நமக்குக் கொஞ்சமாவது சேமித்து வைக்க வேண்டாமா சொல்லுங்கள். இப்பொழுது நீங்கள் கொண்டுவரும் சம்பளத்தை அப்படியே பீரோவில் வைக்கிறீர்கள். நான் பாட்டுக்கு எடுத்துச் செலவழிக்கிறேன். நீங்கள் பாட்டுக்கு எடுத்துக் கொள்ளுகிறீர்கள். இனி அப்படி இல்லாமல் வீட்டுச் செலவுக்கு என்று என்னிடம் தனியாகக் கொடுத்து விடுங்கள். நீங்கள் மீதியை உங்களுடைய சொந்தச் செலவுக்கு வைத்துக் கொள்ளுங்கள். நான் எனக்கு நீங்கள் கொடுத்த பணத்தில் சிக்கனமாகச் செலவு செய்துவிட்டு அதிலேயே மிச்சப்படுத்தப் பார்க்கிறேன். நீங்களும் அப்படியே செய்ய வேண்டும். ஒரு வருஷம் வரை ஒருவர் கணக்கை ஒருவர் பார்க்கக்கூடாது. ஒரு வருஷம் ஆனபிறகு யார் அதிகம் சேமித்து இருக்கிறார்கள் என்று பார்க்கவேண்டும்" என்றாள் ஜானகி.

சீனிவாசன் ஜானகியின் யோசனைப்படியே அவள் பேரில் ஒரு கணக்கைப் பாங்கில் திறந்து வைத்துவிட்டுப் பாஸ் புத்தகத்தையும் ஜானகியிடமே கொடுத்து விட்டான்.

ஒரு வருஷம் சென்றது. சீனிவாசன் பணத்தைப் பற்றி ஜானகியினிடம் கேட்பதே இல்லை. ஒரு வேளை மறந்து போய் விட்டாரோ என்னவோ!

ஜானகி மாதா மாதம் பாங்கியில் பணம் கட்டி நூற்று எண்பது ரூபாய் சேமித்து விட்டாள். ஒவ்வொரு தடவையும் கணவனிடம் இதைப் பற்றிச் சொல்ல வேண்டுமென்று அவளுக்கு இருக்கும். அவரே 'அதைப் பற்றிக் கேட்கவில்லை' ஒரு வருஷம் ஆனபிறகு திடீரென்று சொல்லி ஆச்சரியத்தில் மூழ்க அடிக்கலாமே என்று நினைத்துப் பேசாமலிருந்து விடுவாள்.

ஜானகியாக ஒருநாள் சீனிவாசனிடம் "உங்களுக்கு நினைவிருக்கிறதோ!" என்று ஆரம்பித்தாள்.

"எது நினைவிருக்கிறதா என்கிறாய்! நீ என் மனைவி என்ற ஞாபகமா! ஓ! நன்றாக நினைவு இருக்கிறது!" என்றான்.

"இந்தக் கேலியும் பரிகாசமும் தான் மிச்சம். இப்படி ஒன்றிலும் ஒரு பற்று, ஞாபகம் ஒன்றும் இல்லாத மனிதரை நான் பார்த்ததே இல்லை!" என்றாள் சற்று சலிப்புடன்.

சொல்வதைப் புரியும்படி சொல்ல மாட்டேன் என்கிறாயே! திடீரென்று நினைவிருக்கிறதோ, என்று கேட்டால் எனக்கு நீ எதைப்பற்றிக் கேட்கிறாயென்று புரியமாட்டேன் என்கிறது. விவரமாகச் சொல்லு!" என்றான் சீனிவாசன்.

"போன வருஷம் நாம் தனித் தனியாகப் பணத்தைச் சேமிக்க வேண்டுமென்று திட்டம் போட்டோமே! நீங்கள்கூட என் பேருக்குப் பாங்கில் கணக்கை ஆரம்பித்து வைத்து 'பாஸ்' புஸ்தகத்தை என்னிடம் கொடுத்தீர்களே! அது நினைவிருக்கிறதோ என்று கேட்டேன்!" என்றாள்.

"ஓ! அதுவா! இப்போதான் நினைவு வருகிறது. இத்தனை நாளாக நான் அறவே மறந்து விட்டேன். ஒரு வருஷம் ஆகிவிட்டதா! நீ எவ்வளவு ரூபாய் சேர்த்திருக்கிறாய்!" என்றான்

"நீங்கள் முதலில் உங்கள் கணக்கைக் காட்டினீர்களானால் நானும் என்னுடைய கணக்கைச் சொல்லி விடுகிறேன்!" என்றாள்.

சீனிவாசன் உடனே தன் இரு கைகளையும் விரித்து உதட்டைப் பிதுக்கியவாறு, "எனக்கு ஒரு பைசாகூடச் சேர்க்க முடியவில்லை, ஜானகி! என் கணக்கையே பாங்கிலிருந்து மூடிவிட்டேன். நீ எவ்வளவு சேர்த்திருக்கிறாய்!" என்றான் மீண்டும்.

"நிஜமாகவே சொல்கிறீர்களா?"

"நிஜத்தைத் தவிர நான் என்றைக்காவது சொல்லியிருக்கிறேனா ஜானகி! நான் அடிக்கடி 'காம்ப்' போவதால் ரொம்பவும் செலவாகி விடுகிறது. உன் கணக்குப் புஸ்தகத்தைக் காண்பி, பார்ப்போம்!" என்றான்.

ஜானகி சந்தோஷம் பொங்கப் பெட்டியிலிருந்து 'பாங்க்' கணக்குப் புத்தகத்தைக் கணவனிடம் கொடுத்துவிட்டு அவன் முகத்தைப் பார்த்தாள்.

சீனிவாசன் அவளுடைய கணக்குப் புத்தகத்தைப் படித்துப் பார்த்துவிட்டு, "அடி கள்ளி! இவ்வளவு சாமர்த்தியம் இருக்கிறதா! எப்படி இவ்வளவு ரூபாய் உன்னால் சேர்க்க முடிந்தது!" என்று கேட்டு ஆனந்தம் தாங்காமல் தவித்தான்.

"அதுதான் என்னுடைய கெட்டிக்காரத்தனம். அதிருக்கட்டும், இந்தப் பணத்தை என்ன செய்யலாம்!" என்றாள்.

"என்ன செய்வார்கள். தூரப் போடுவார்களா! இப்போதைக்கு அதற்குச் செலவு ஒன்றும் இல்லை. அப்படியே பாங்கிலேயே இருக்கட்டும்!" என்றான்.

"இன்றைக்கு அக்டோபர் பதினேழு தேதி. தீபாவளிக்கு இன்னும் எண்ணிப்போல் இருபது நாட்கள் இருக்கின்றன. இந்தப் பணத்துக்கு அப்படியே ஒரு உயர்ந்த கைக்கெடியாரம் வாங்க வேண்டும். யாருக்குத் தெரியுமா!" என்றாள்.

"நீ பேசுவதே புதிராக இருக்கிறது. ஒன்றையும் தெளிவாகச் சொல்லமாட்டேனென்கிறாய்! கடிகாரம் உனக்காகத்தான் இருக்கும்!" என்றான்.

"இல்லை. உங்களுடைய இந்தக் கடிகாரம் ரொம்பப் பழைய மோஸ்தராகி விட்டது. இந்த வருஷம் தீபாவளிக்கு என்னுடைய பரிசாகப் புதிய கடிகாரம் வாங்கி உங்களுக்குக் கொடுக்கப் போகிறேன்!" என்றாள் குதூகலத்துடன்.

"அடேடே! தேவலையே. எனக்கா கடிகாரம் வாங்கப் போகிறாய்!" என்றான்.

"ஆமாம்! இன்றைக்குக் கடைக்குப் போகலாமா!" என்றாள்.

"இன்றைக்கு முடியாது ஜானகி! ஆபீஸ் வேலை தலைக்கு மேலே இருக்கிறது. இருபதாம் தேதி 'காம்ப்' போய்விட்டு இருபத்திநாலாம் தேதி வருவேன். அதன் பிறகு வாங்கலாம்!" என்றான்.

அந்தப் பேச்சு அதோடு முடிந்தது. சீனிவாசனும் தான் சொன்னபடி 'காம்ப்' போய் விட்டான். அவன் திரும்பி வருவதற்குள்ளே தான் அவனிடமிருந்து கடிதம் வந்தது. ஜானகியும் பாங்கிற்குப் புறப்பட்டாள்.

பாங்கிற்கு அருகில் வந்ததும் ஜானகியின் சிந்தனையும் கலைந்தது. உள்ளே சென்று செக் புஸ்தகத்தில் கையெழுத்துப் போட்டுக் கொடுத்துப் பணத்தைப் பெற்றுக் கொண்டு வீடு திரும்பினாள். அவள் மனம் சந்தோஷத்தினால் நிறைந்திருந்தது.

சீனிவாசனின் கடிதத்தை இன்னொரு முறை படித்தாள். "சம்பளம் வந்தவுடன் திருப்பிக் கொடுத்து விடுகிறேன்" என்ற வரிகள் அவள் இதயத்தைத் தொட்டன. "பாவம்! இன்னொரு புருஷனாக இருந்தால் அதிகாரம் செய்து வாங்கிக் கொள்வார். இப் பணம் மட்டும் யாருடையது! அவர் உழைத்துக் கொண்டு வந்து என்னிடம் கொடுத்த பணம்தானே! திருப்பித் தருகிறேன் என்று சொல்ல வேண்டிய அவசியமே இல்லையே! எவ்வளவு பரந்த நோக்கமுடையவர். உண்மையிலேயே நான் அதிர்ஷ்டசாலிதான். பணத்தை எடுத்துத் தயாராக வைத்திருக்கிறேன் என்று அவருக்கு உடனே தெரியப்படுத்திவிட வேண்டும். இன்றைக்குத் தபாலில் சேர்த்து விட்டால் நாளை அவருக்குக் கிடைத்து விடும். நாளைக்கு மறுநாள் தானே அவர் இங்கு வரப்போகிறார், என்ன அவசர வேலையோ தெரியவில்லை! நூற்றைம்பது ரூபாய் செலவழித்து இப்போது சென்னை போவதற்குக் காரணம் என்னவாக இருக்கும்!" என்று பலவாறாக யோசனை செய்தாள் ஜானகி. உடனே ஒரு கடிதம் எழுத ஆரம்பித்தாள்.

திருச்சி; 25—10—53

நமஸ்காரம். உங்கள் கடிதம் கிடைத்தது. பார்க்க ரொம்ப சந்தோஷம். உங்கள் கடிதம் வந்த மறு நிமிஷமே வேலைக்காரியைத் துணைக்கு அழைத்துக் கொண்டு போய்ப் பணத்தை வாங்கி வந்து விட்டேன். ஒரு சமய சந்தர்ப்பத்துக்கு என்றுதானே சிக்கனமாக இருந்து சேர்த்து வைத்து இருக்கிறேன்! அது உங்களுக்குச் சமயத்தில் உபயோகப்படப் போகிறது என்று நினைக்க நினைக்க எனக்கு எவ்வளவு சந்தோஷமாக இருக்கிறது தெரியுமா! "திருப்பிக் கொடுத்துவிடுகிறேன்" என்று எழுதியிருக்கிறீர்கள். என்னை "மார்வாரி" என்று நினைத்துக் கொண்டீர்களா! மற்றவை நேரில். அநேக கோடி நமஸ்காரங்கள்.

தங்கள், ஜானகி.

படித்துப் பார்த்தாள். கவரில் போட்டு மூடி விலாசமும் எழுதி விட்டாள். தபாலில் போடச் சொல்வதற்கு வேலைக்காரியைக் கூப்பிட்டு அவளிடம் கொடுத்தாள்.

இந்தச் சமயத்தில் அவளுக்குப் 'பளிச்' சென்று ஒரு யோசனை தோன்றியது. 'ஆமாம். அது



ஒருவர்:—என்னங்க! நீங்க பிரேக், பெல், லைட், ஒண்ணுமில்லாமல் ஒரு சைக்கிள் வைத்திருந்தீங்களே, அதை இப்பொழுது என்ன பண்ணினீங்க?

மற்றவர்:—அதை நம்ம பக்கத்து வீட்டிலே இருக்கிற போலீஸ்காரரிடமே நல்ல விலைக்கு விற்று விட்டேனுங்க.



தான் சரி!" என்று வாயை விட்டுச் சொன்னான். "இந்தா! முனியம்மா! அக் கடிதத்தைத் தபாலில் சேர்க்க வேண்டாம். அப்படி மேலே அலமாரியில் வைத்துவிட்டு நீ வீட்டுக்குப் போ!" என்றான்.

தனக்குத் திடீரென்று உதயமான யோசனையை நினைத்துத் தானே சிரித்துக்கொண்டான் ஜானகி.

அவர் வந்தவுடன் ஆவலாக "பணம் தயாராக இருக்கிறதா ஜானகி!" என்பார். என் பணத்தைக் கொடுக்க முடியாது என்று சொல்ல வேண்டும். சேச்சே! அப்படிச் சொல்லக் கூடாது. கள்ளங் கபடில்லாத அவர் முகத்தைப் பார்த்தால் அப்படி வெடுக்கென்று சொல்ல மனசு வரவே வராது. பின்னே எப்படி சொல்லுகிறது! பொய் சொல்லச் சட்டென்று ஒன்றும் நினைவு வரமாட்டேன் என்கிறதே! சரி அப்போ எதையாவது சொல்லி அவரை ஏமாற்ற வேண்டும். கொஞ்ச நேரம்தான் வேடிக்கை பார்ப்போமே!" என்று பலவாறாக எண்ணிக் கொண்டிருந்தான்.

சீனிவாசன் எழுதியிருந்தபடி வந்து சேர்ந்தான். வந்த களைப்புத் தீரக் குளித்துவிட்டு நாற்காலியில் உட்கார்ந்தான். சூடாக ஆவி பறக்கும் காப்பியையும் டிபனையும் கொண்டுவந்து கொடுத்து விட்டு நின்றான் ஜானகி.

"அப்பாடா! உன் கையால் இந்த டிபனையும் காப்பியையும் சாப்பிட்டால்தான் உடம்பில் உயிர் வந்ததுமாதிரி இருக்கிறது. ஹோட்டல் சாப்பாடு தலைவிதியை நொந்து கொண்டு சாப்பிட வேண்டி யிருக்கிறது!" என்று சொல்லி அவனைப்பார்த்தான்.

"மெதுவாகச் சாப்பிடுங்கள். இன்னும் கொஞ்சம் எடுத்துக் கொண்டு வருகிறேன்" என்று சொல்லி விட்டு உள்ளே போனான்.

"வந்து ஒரு மணி நேரமாகியும் பணத்தைப் பற்றி ஏன் கேட்கவே இல்லை! தன்னிடம் அவருக்கு அவ்வளவு நம்பிக்கை. அவர் சொன்னால் எதையும் தட்டாமல் உடனே செய்து விடுவேன் என்ற திடத்திறனால் நான் நிச்சயம் தயாராக வைத்து இருப்பேன் என்று அவர் கேட்கவில்லை. இப்படிப்பட்டவரிடம் பொய் சொல்வதா! பொய் என்ன! வேடிக்கைக்காக அவரிடம் கொஞ்சம் ஏமாற்றித்தான் பார்ப்போமே!"

"ஜானகி!" என்றான் சீனிவாசன்.

"இதோ வந்து விட்டேன்!" என்று குரல் கொடுத்தவாறே வந்தான்.

"எங்கே உள்ளே போய் உட்கார்ந்து விடுகிறாய்! இன்று இரவே மறுபடியும் சென்னைக்குப் போக வேண்டி இருக்கிறது. வந்த அலுப்பு கூடத் தீரவில்லை. என்ன செய்வது!" என்றான்.

"சென்னையில் அப்படி என்ன உங்களுக்கு!" என்று கேட்டான் ஜானகி.

"உத்தியோக உயர்வுக்கு ஒரு சந்தர்ப்பம் இப்போது கிடைத்து இருக்கிறது. நேரில் போய்ச் சென்னையில் மேலதிகாரிகளைப் பார்த்து விட்டு வரலாமென்று பார்க்கிறேன். இரண்டு தினங்களில் வந்து விடுவேன்!" என்றான். பிறகு ஏதோ நினைத்துக் கொண்டவன் போல, "ஜானகி! பணத்தை ஒரு பர்சில் போட்டுப் பெட்டிக்கு அடியில் வைத்து அதன்மேல் என் துணிமணிகளை வைத்து விடு!" என்றான்.

"பணமா! ஏது பணம்!" என்றான், ஒன்றும் தெரியாதவனைப் போல் அபிநயித்து.

சீனிவாசன் ஆச்சரியத்துடன் அவனைப் பார்த்தான். "நான் எழுதின கடிதம் உனக்கு வந்து சேரவில்லையா! உடனே உன் கணக்கிலிருந்து நூற்றைம்பது ரூபாய் எடுத்துவை என்று எழுதியிருந்தேனே. நீ தயாராக வைத்திருப்பாய் என்று அல்லவா நினைத்துக் கொண்டிருக்கிறேன்!" என்றான்.

"ஓ! அதுவா! உங்கள் கடிதம் வந்தது. நீங்கள் தான் அந்தப் பணத்தைப் பற்றி ஒன்றுமே கேட்பதில்லை. அதனால் மூக்தா கான் மார்க்கெளிசில் இரட்டை மாங்காயில் சரிகை வேலை செய்த புடவை ஒன்று வாசலில் வந்தது. விலையும் ரொம்ப மலிவு. நூற்று முப்பது ரூபாய்தான் சொன்னான். தீபாவளிக்கு எப்படியும் ஒரு புடவை வாங்கத் தானே வேண்டும் என்று நினைத்து என் கணக்கிலிருந்து பணத்தைக் கொடுத்துவிட்டுப் புடவையை அன்றைக்கே வாங்கி விட்டேன்" என்று பச்சைப் பொய்யாகச் சொல்லிக் கொண்டே போனாள்.

"அன்றைக்கு எனக்கு என்னவோ தீபாவளிப் பரிசாக அந்தப் பணத்திலிருந்து வாங்கப் போகிறேனென்றாய். நீ அதனால் வைத்திருப்பாய் என்றல்லவா நினைத்துக் கொண்டிருந்தேன்! வாசலில் வரும் வியாபாரிகளிடம் வியாபாரம் செய்யாதே, எனக்குப் பிடிக்காது என்று தெரிந்தும் நீ அந்தக் காரியத்தைச் செய்திருக்கிறாய்! புடவையில் ஏகமாய்ப் பணம் போடுவதும் எனக்குப் பிடிக்காது என்று உனக்கு நன்றாகத் தெரியும். உன் மேல் என்ன தப்பு! கைகாலாகாதவன் மாதிரி உன் பணத்தை நம்பிக் கொண்டு வந்தேனே! என்னைச் சொல்ல வேண்டும்" என்று ரொம்பவும் கோபமாகச் சொல்லிக் கொண்டே ஒரு சட்டையை எடுத்துப் போட்டுக் கொண்டு வெளியே போய் விட்டான்.

"இந்தாருங்கள்! ஒரு நிமிஷம் இதைக் கேட்டு விட்டுப் போங்கள்!" என்று வாசல் வரை ஞானி சொல்லிக் கொண்டே வந்தும் திரும்பிக் கூடப் பார்க்காமல் போய் விட்டான் சீனிவாசன்.

கதவைத் தாளிட்டுக் கொண்டு உள்ளே வந்த ஞானிக்கு ஒரே வருத்தமாகப் போய் விட்டது. கட்டிலில் படுத்துக் கொண்டு குலுங்கக் குலுங்க மனம் வெடித்துப் போய்விடும் போல் அழுதாள். அழுது கொண்டே இருந்தாள். மனத்தின் பாரம் குறையுமளவும் அழுதாள்.


'நீ மகா பாபி! கல் நெஞ்சம் படைத்தவள். அலுப்புடன் உழைத்து விட்டு அப்போதுதான் உள்ளே வந்த கணவனை அன்பு வார்த்தைகள் சொல்லிச் சந்தோஷப் படுத்தாமல் பொய் சொல்லி அவரைக் கோபமடையச் செய்து வெளியே விரட்டி விட்டாயே! எந்த விஷயத்தில் விளையாட்டு, வேடிக்கை என்ற கணக்கு கிடையாதா!' என்று அவளுடைய மனச் சாட்சியே அவளைக் குத்திக் குத்திக் கேட்டது.

இரவு ஏழு மணி சுமாருக்குச் சீனிவாசன் வந்தான். கதவைத் திறந்துவிட்டுச் சமையலறைக்குப் போய் விட்டாள். கணவனைப் பார்க்கவே அவளுக்குப் பயமாக இருந்தது. சீனிவாசனும் அவளுடன் பேசவே இல்லை. ஆபீஸ் கட்டுகளை யெல்லாம் ஆராய்ந்து கொண்டிருந்தான்.

ஏதோ எடுப்பதற்காக அலமாரியை யெல்லாம் துழாவினான். மேல் தட்டில் தன் விலாசமிட்ட கவரைக் கண்டதும் அதைக் கையில் எடுத்தான். ஞானியின் கையெழுத்தாக இருக்கவே ஆவலால் தூண்டப் பட்டவாறு பிரித்துப் படித்தான்.

அவன் படிக்கப் படிக்கவும் ஞானி மெதுவாக அவனிடம் வருவதும் ஒன்றாக இருந்தது. ஞானியின் கண்கள் சிவந்து கிடந்தன. முகமெல்லாம் வீங்கி யிருப்பதிலேயே அவள் சாயங்காலமெல்லாம் அழுது கொண்டிருந்தாள் என்று தெரிந்தது.

ஞானி சிரித்துக் கொண்டே, "நான் வேடிக்கை செய்ய வேண்டுமென்ற எண்ணத்துடன் உங்களிடம் பொய் சொல்லி விட்டேன். இதோ, பணம். உங்கள் கடிதம் வந்தவுடனேயே பாங்



க்குப் போய் எடுத்துக்கொண்டு வந்துவிட்டேன். உங்களுக்குத் தெரியாமல் நான் என்றைக்காவது புடவை வாங்கி யிருக்கிறேனா!" என்று சொல்லி அழுது விட்டாள். அடுத்த நிமிஷம் அவள் சீனிவாசனின் அரவணைப்பில் இருந்தாள்.

"சீ! அசடு மாதிரி அழாதே! இப்பொழுது தான் உன் கடிதத்தைப் பார்த்தேன். அதற்குள் நீயே வந்து விட்டாய்! நான் சென்னை போவது கூட நின்று விட்டது." என்றான்.

"ஏன்! பணமில்லையென்று நிறுத்தி விட்டீர்கள். இதோ இருக்கிறது. இப்பொழுது வேண்டுமானாலும் எடுத்துப் போங்கள். உத்தியோக உயர்வுக்குச் சந்தர்ப்பம் கிடைக்கும் போலிருந்தால் அதை நழுவ விடாதீர்கள்!" என்றாள்.

"உன்னுடன் கோபித்துக் கொண்டு நேரே ஆபீஸுக்குப் போனேன். அங்கே எனக்கு அந்த உயர்ந்த பதவிக்கு உத்தரவு தயாராகக் காத்துக் கொண்டிருந்தது. அதிருக்கட்டும். பணம் எதற்குக் கேட்டேன் தெரியுமா!" என்றான்.

தெரியாது என்று தலையசைத்தாள்.

"நானும் இந்த ஒரு வருஷத்தில் உனக்குத் தெரியாமல் நூற்றைம்பது ரூபாய் சேர்த்து வைத்திருந்தேன். சென்னைக்குப் போகப் போகிறோமே அங்கே உன் பணத்தையும் போட்டு முன்பே கேட்டாயே அது மாதிரி முத்து வளையல் வாங்கித் தீபாவளிப் பரிசாக உனக்குக் கொடுக்கலா மென்று நினைத்தேன்!" என்றான்.

"வேண்டாம். முத்து வளையல் தானாக வரும். உங்களுக்குக் கைக் கெடிகாரமும், காமிராவும் இந்த முந்நூறு ரூபாயில் வாங்கிக் கொள்ளுங்கள். என் பேரில் இனி பாங்கில் தனிக் கணக்கு வேண்டாம்" என்று உணர்ச்சியோடு சொன்னாள் ஜானகி.

"நீ கடிதத்தில் எழுதியிருந்ததை ஏன் தபாலில் போடாமலிருந்து விட்டாய்! சரி! போனது போகட்டும். நாளை கடைக்குப் போய் வேண்டியதை வாங்கி வருவோம்!" என்றான் சீனிவாசன்.

"ஆமாம்! நாளைக்குக் கட்டாயம் போகத்தான் வேண்டும். இந்த வருஷம் சாவகாசமாக வாங்கிக் கொண்டால்தான் உண்டு. அடுத்த வருஷம் முடிகிறதோ இல்லையோ!" என்றாள் ஜானகி.

"என்ன இது! தத்துப் பித்தென்று அபசகுனம் மாதிரி உளறுகிறாய்! அடுத்த வருஷம் வாங்கிக் கொள்ள முடியாமல் என்ன! உத்தியோக உயர்வு வேறே ஆயிருக்கிறது!" என்று அவளைக் கடிந்து கொண்டான் சீனிவாசன்.

"நான் ஒன்றும் உளறவில்லை. அடுத்த வருஷம் நமக்குப் போட்டியாக ஒரு பயலோ அல்லது...!" என்று மேலே பேசாமல் வெட்கத்தினால் தலையைக் குனிந்து கொண்டாள்.

"திருடி! என்னிடம் ஏன் இத்தனை நாளாகச் சொல்லாமல் மறைத்தாய்!" என்று செல்லமாக அவள் கன்னத்தைக் கிள்ளினான்.

"அதுதான் முத்துவளை தானாக வரும் என்று சொன்னேன். வளைகாப்புக்கு என்று புரிந்து கொள்வீர்கள் என்று நினைத்தேன்" என்றாள்.

"இனி இன்னும் சிக்கனமா யிருந்து சேர்க்க வேண்டும். ஏனென்றால் நாம் சம்சாரியாகப் போகிறோமோ இல்லையோ!" என்று சிரித்தான்.

"இந்த வருஷம் தீபாவளிக்கு எத்தனை வகைப் பரிசுகள்! கைக் கெடியாரம், காமிரா எல்லாவற்றுக்கும் மேலாக உங்களுக்கு உத்தியோக உயர்வு. இல்லையா!" என்றாள் மகிழ்ச்சியுடன்.

"தீபாவளிப் பரிசில் நம் ராஜாப்பயலைச் சேர்க்க மறந்து விட்டாயே!" என்றான் சீனிவாசன்.

"போங்கன்னா!" என்று பொய்யாகக் கோபித்துக் கொண்டாள் ஜானகி.

இருவர் மனமும் சந்தோஷத்தினால் பூரித்தது.

நல்ல மனிதர்

● "காயமே இது பொய்யடா! காற்றடைத்த பையடா!" என்ற சித்தர் வாக்கு சத்திய வாசகமானது. அன்று வரையில் பேசிக் கொண்டும் சிரித்துக்கொண்டும் ஓடியாடிப் பணியாற்றிக் கொண்டிருந்த ஸ்ரீ ஆர். கே. மூர்த்தி தாம் பழகிய நண்பர்களின் புகழுரைகளுடன் தாங்க முடியாத துயரத்தால் வடித்த கண்ணீருடனும் மேலுலகம் சென்று விட்டார்.



ஸ்ரீ ஆர். கே. மூர்த்தி டி. ஏ. டெயிலர் அண்டு கம்பெனி, சென்னை கைத்தொழில் நிதி கார்ப்பரேஷன் ஆகிய ஸ்தாபனங்களின் டைரக்டர்.

1946-ம் வருஷம் லண்டனில் நடந்த சர்வதேச மகாநாட்டுக்கு இந்தியப் பிரதிநிதியாகச் சென்று வர்த்தகத் துறைக்கு அவர் செய்த சேவை பிரசித்தமானது. இடைக்கால சென்னை ஷெரீப்பாக இருந்து நல்ல முறையில் பணியாற்றினார். மியூஸிக் அகாடமி நிர்வாகக் கமிட்டியின் அங்கத்தினராக இருந்து சங்கீதத்துக்கு அவர் ஆற்றிய பணியை யாரும் மறக்க முடியாது.

அத்தகைய தொண்டாற்றும் குணமும் சிறந்த பண்பும் படைத்தவர் அகால மரணத்துக்கு உள்ளானார் என்பதை நினைக்கும் போது விதியின் கொடூரத்தை எண்ணித்தான் வேதனைப்படவேண்டியிருக்கிறது. அருமை மனைவியையும், ஆசைக் குழந்தைகளையும், உற்றார் உறவினரையும், ஏராளமான நண்பர்களையும் தவிக்கத் துடிக்கும்படி விட்டுவிட்டு அக்டோபர் மீ 16உ மாரடைப்பால் மரணமடைந்தார் என்பது எவ்வளவு கொடிய விஷயம்!

ஸ்ரீ மூர்த்தியின் குடும்பத்தாருக்கு ஆறுதல் கூறுவது யாராலும் முடியாத காரியம். அவர்களுக்கெல்லாம் இந்தத் துயரத்தைத் தாங்கும் சக்தியை இறைவன் அருள வேண்டும்.

14 நாட்களில் மக்ளீன்ஸ் உதவியால் அதிக வெண்மையான பற்கள்



ஏற்கனவே ஆயிரக் கணக்கானவர்களால் ஆமோதிக்கப்பெற்றது.

இப்பொழுது 14 தினங்களுக்குள் அதி வெண்மையான பற்களை நீங்களும் பெறலாம். இதை உறுதியாகச் சொல்லுங்கள் —பிரதிதினமும்—தினசரி இருமுறை உங்கள் பற்களை நன்றாக மக்ளீன் செய்யுங்கள். ஆரம்பமுதலே, மக்ளீன்ஸிலுள்ள விசேஷ பொருள்கள், மிருதுவாகவும் அபாயமில்லாமலும் உங்கள் பற்களின் மேல் உள்ள அவலட்சணமான கறைகளை போக்கி, அவைகள் இயற்கையான ஒளி வீசச் செய்வதைக் காண்பீர். 14 நாட்களுக்குள் — அந்த அதற்கும் குறைவாகவே கூட நீங்கள் பெருமைப்படக்கூடிய பற்களை அடைவீர்கள் — மக்ளீன் வெண்மையான பற்கள், ஆரோக்கியமான பற்கள்.

கிளோரோபில் சேர்ந்ததும் கிடைக்கும்.

பற்களை வெண்மையாக்குவதில் உயர்ந்த சிறந்த மக்ளீன்ஸ் பேராக்ஸைடு பற்பசை. இப்போது அதின் ஆறு நாள் பரிசீலனை கிளோரோபில் சேர்ந்தும் கிடைக்கும்.



மக்ளீன்ஸ்

பெராக்ஸைட் பற்பசை

பற்களை அதிக வெண்மையாக்குகிறது.

MTV 33-TAM

யோகாசன சிகிச்சை

வி. என். குமாரசாமி

8. சந்தேக விளக்கம்

கேள்வி:—நான் 14 வயது மாணவன். நான்காவது படிவம் படிக்கிறேன். உயரம் நாலரை அடி. நிறை 60 ராத்தல். மார்பின் சுற்றளவு 22 அங்குலம்தான். பொதுவாக என் எல்லா அவயவங்களின் வளர்ச்சியும் குறைவாகவே இருக்கிறது. நான் நன்கு வளர்ந்து ஆரோக்கிய தோற்றமுண்டாக என்னென்ன ஆசனங்களைச் செய்ய வேண்டும்? நான் என் சிறு வயதில் சில கெட்ட பையன்களின் சகவாசத்தினால் என் சரீரத் தாதுவைப் போக்கிக் கொண்டேன்.

பதில்:—என்னே பயங்கரம்! கனிதரும் மரம், பூக்கும்போது பூவைக் கசக்கி விட்டால் மரம் எப்படி நல்ல கனிகளைத் தரும்? மரத்துக்கு இக் கதியென்றால் மனிதப் பிறவிக்குச் சொல்ல வேண்டுமா? இம்மாதிரி இவ் வயதில் அறியாது தன் வாழ்நாட்களைப் பாழ்படுத்திக் கொண்டவர்கள் அநேகர். வளர்ச்சி குன்றி, எலும்புந் தோலுமாய்க் கண் குழி விழுந்து, நல்ல ரத்தமின்றி நரம்புகள் தளர்ச்சியுற்று, கண் எரிச்சல், நீர் எரிச்சல், தலைவலி, பசியின்மை, சுறுசுறுப்பின்மை இம்மாதிரி பல சிறுவயதில் ஏற்பட்டு விடுகின்றன. இந்த நிலைமையில் ஜனக்கூட்டங்களுடன் பழகும்போது வீரியமிழந்த சக்தியற்ற மக்கள் எங்கே எங்கே என்று க்ஷயம் போன்ற கொடிய தொற்று நோய்கள் காத்துக் கொண்டிருக்கும். இவ் விஷயங்களில் இன்னும் முன்னேற்ற மடைந்தவர்களுக்குக் குஷ்டம், கிரந்தி, மேக வியாதிகள், புற்றுநோய் முதலியனவெல்லாம் பரிசாகக் கிடைக்கும்.

குழந்தைகளுடைய வயதைத் தாண்டி வாலிப வாயிலில் நுழையும் வயதாகிய பன்னிரண்டு வயது முதல் பதினெட்டு வயது வரை ஒவ்வொருவருக்கும் சோதனைக் காலம். இவ் வயதில் அவயவங்கள் மிகத் தீவிரமாக வளர்ச்சி அடையும். அக்காலத்தில்தான் மிக்க ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும். இவ் வயதில் நடந்து கொள்ளுவதைப் பொறுத்துத்தான் அவர்களின் பிற்காலம் அமையும். இந்த வயதை இரண்டுங் கெட்டான் வயது என்று சொன்னால் மிகப் பொருத்தமாய் இருக்கும். நன்மை தீமை முதலியவைகளைத் தன்னால் பகுத்தறிந்து கொள்ளும் சக்தியில்லாத வயது. இவர்களுக்கு யார் எப்படி விஷயத்தை எடுத்துச் சொல்ல முடியும்? என்னைக் கேட்டால் பெற்றோர்கள் மிகப் பக்குவமாய் அவர்கள் புத்தியில் படும் வண்ணம் இம்மாதிரி கெடுத்தவர்களின் பரிதாபகரமான நிலைமையை எடுத்துச் சொல்லி, கனவிலும் அவ் வழியில் மனம் சடுபடக் கூடாது என்பதைப் பல உதாரணங்களுடன் எடுத்துச் சொல்லலாம். நாம் அவர்களிடம் இக் குறை இருப்பதாக அறிந்து எடுத்துக் காட்டுவதைப் போல் இனி செய்யாதே என்று சொல்லக் கூடாது. பெற்றோர்கள் சம்பாஷணையில், 'இம்மாதிரி ஒரு பையன் நடந்து கொண்டானும். பல கெடுதிகள் உண்டாயிற்றும்' என்று அவர்கள் காதில் படும் வண்ணம் பேசிக் கொண்டாலும் புரிந்து கொள்வார்கள்; ஜாக்கிரதையாய் இருப்பார்கள். அப்படியும் அவர்கள் கேட்கவில்லையானால் தாய்தான் இதற்குத் தகுந்தவள். தாய் நேரடியாகச் சொல்லுவதில் குற்றமில்லை. பெற்றோர்களின் பொறுப்பு மகத்தானது. பெற்றது முதல் ஆளாக்கி உலகில் நல்ல பிரஜையாய்ச் செய்யும் வரை பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும். குழந்தைகள் பராமரிப்பு கடல் போன்ற பெரிய விஷயம். இந்தச் சிறு பகுதியில் தனி கூட விவரிக்க இயலாது. ஆனால் குழந்தைகளும் துஷ்டனைக் கண்டால் தூர விலகு எனும் பழமொழிக்கு ஒப்ப கெட்ட பிள்ளைகள் சகவாசமே செய்யக் கூடாது.

இதற்கு யோக ஆசனங்களால் நிச்சயம் குணம் உண்டு. புஜங்காசனம், பஸ்சிமோத்தானு, ஹலாசனு, சர்வாங்காசனம், மத்ஸ்யாசனம், சிரசாசனம், அர்த்தமத்ஸ்யேந்திராசனம் திரிகோணாசனம், வஜ்ராசனம், சக்தி ஆசனம், நாடி சுத்தி ஆகியவைகளைச் செய்யலாம். பதினாறு வயதுக்கு மேற்பட்டவர்கள் உட்டியானு, நௌலி ஆகிய இரண்டு ஆசனங்களையும் செய்யலாம்.

உணவும் உற்ற உதவியைச் செய்யக் கூடியது. காரம் குறைந்து, முழுத்தவிட்டுடன் கூடிய அரிசியைக் கஞ்சி வடிக்காமல் சமைத்து உண்ண வேண்டும். பீடி, சிகரெட், காப்பி, டீ, போன்ற லாகிரிப் பொருள்கள் கூடாது. வெண்ணெய், பால், தயிர், பழங்கள், பாதம், பேரீச்சை, காய்கறி, கீரை வகைகள் நிறைய சேர்த்துக் கொள்ள வேண்டும்.



தெள்ளுப் பேட்டை ஆயிரவைசியர் மடத்தின் அறநிலைய அஸ்திவாரக் கல்நாட்டு விழா சமீபத்தில் நடந்தது. நிதி மந்திரி ஸ்ரீ சுப்ரமண்யம் அவர்கள் அஸ்திவாரம் இட்டார்கள். ராஜாஜி விழாவுக்கு ஆசி கூறினார்கள். மேற்படி விழாவில் கலந்து கொள்வதற்கு வரும் தலைவர்களை டிரஸ்டி திரு வி. எம். மாணிக்கம் செட்டியார் வரவேற்று அழைத்துச் செல்லுவதைப் படத்தில் காணலாம்.

இம்மாதிரி ஆகாரங்களுடன் ஆசனப் பயிற்சிகளைச் செய்து வந்தால் இழந்த வீரியத்தைப் பெறுவதுடன் உடலிலுள்ள குறைகளெல்லாம் சிறிது சிறிதாக மறைந்து புது மனிதனாகலாம்.

கேள்வி:—நான் ஒரு பதினெட்டு வயதான பெண். ருதுவாகி மூன்று ஆண்டுகள் ஆகின்றன. ஆயினும் சிறு பெண்களைப் போலவே அவயவங்கள் வளர்ச்சியற்று இருக்கின்றன. யார் பார்த்தாலும் கேட்கும்படியான நிலையிலிருக்கிறேன். கலியாண வயதடைந்த என்னை எப்படிக் கலியாணம் செய்து கொடுப்பது என்று பெற்றோர்கள் வருந்துகின்றனர். இதற்கு எந்த ஆசனங்கள் செய்தால் குறை நீங்கும்?

பதில்:—சர்வாங்காசனம், சிரசாசனம் தான் ஏற்றது. முதலில் ஒவ்வொரு நிமிஷமாகத் துவக்கிச் சர்வாங்காசனம் ஏழு நிமிஷங்கள் வீதம் மூன்று தடவையும், மத்ஸ்யாசனம் அதில் கால் பங்கு நேரமும், சிரசாசனம் சர்வாங்காசனத்துக்குச் சம அளவு நேரமும் செய்யலாம்.

கேள்வி:—நான் ஒரு பகுத்தறிவுவாதி. எனக்குத் தலைவலி இருந்தது. பலவித மருந்துகளை உபயோகித்தும், தீராமல் உங்கள் ஆரோக்கிய ரகசியக் கட்டுரைகளைப் படித்துப் பார்த்து ஆசனங்களைச் செய்து போக்கிக் கொண்டேன். யோகம், யோகிகள், கடவுள், சாஸ்திரம் இவைகளிலெல்லாம் எனக்கு நம்பிக்கை கிடையாது. நீங்கள் உடல் நோயைப் போக்கி ஆரோக்யமாய் இருப்பதற்காக எழுதிவரும் கட்டுரைகளில் உண்மை என்னமோ இருக்கிறது என்று தெரிகிறது. ஆசனத்தின் மேல் நம்பிக்கையில்லாதவர்களையும், வெறுப்புள்ளவர்களையும் கூட அவர்கள் கொள்கையை மாற்றி ஆசனம் செய்யத் தூண்டும்படியாக இருக்கிறது, உங்கள் எழுத்து.

எனக்கு ஒரு சந்தேகம். சிலருக்குக் கத்தாழை நாற்றம், அப்பள வாசனை, ரோஜா வாசனை இப்படியெல்லாம் வியர்வை விட்டால் அடிக்கிறது. இதற்கு என்ன வாசனைத் திரவியங்கள் போட்டாலும் போக மாட்டேன் என்கிறது. இம்மாதிரி வாசனை அடிப்பதற்கு என்ன காரணம்? அதை ஆசனங்களால் போக்க முடியுமா?

பதில்:—பகுத்தறிவு வாதி ஆகிய இவர் கேட்ட கேள்விக்குப் பதில் அடுத்த சந்தேக விளக்கப் பகுதியிலேயே வரும் என்று எதிர்பார்த்து ஏமாறுமிருந்திருப்பார் என்று நம்புகிறேன். 28-2-53ல் அனுப்பிய இவருடைய கடிதத்துக்கு இப்பொழுது தான் வரிசைப்படி பதில் எழுத முடிந்தது.

நீங்கள் தலைவலி போக்கிக் கொண்டதற்கு மிக்க சந்தோஷம். உடலின் வாசனை அல்லது வீச்சு முதலியவைகளெல்லாம் பரம்பரையைப் பொருத்த விஷயம். ஒவ்வொரு பரம்பரைக்கும் ஒவ்வொரு வித வாசனையுண்டு. அப் பரம்பரையில் தோன்றினவர்களுக்கு அவ்வாசனையும் தொடரும். மிக நுட்பமாய் வாசனை அறியும் ஆற்றல் உள்ளவர்களால் தான் ஒரு வாசனையை முகர்ந்தால் இது இக்குடும்ப வாசனை என்று சொல்ல முடியும். வாசனை உணர்ச்சி மறந்த சாதாரணமானவர்களால் சொல்லுவது முடியாது. இந்தப் பரம்பரை வாசனையைச் சாதாரணமாய்ப் போக்கடிப்ப தென்பது சாத்தியமல்ல. ஆனால் யோக சிகிச்சையினால் பெரும் அளவுக்கு மாற்ற முடியும். ஆசனங்கள் மட்டும் போதாது. உணவு மாறுதலும் அவசியம்.

அவரவர்கள் உண்ணும் உணவைப் பொருத்து எப்படி மலம் மூத்திரம் நாற்றம் மாறுதல் அடைகின்றதோ அதைப் போல வியர்வை வீச்சிலும் வித்தியாசப்படும். மாமிச உணவு உண்பவர்களுக்கு வியர்வையானது உணவின் குணத்துக்குத் தக நாற்றமெடுக்கத்தான் செய்யும். காய் கறி உணவு உண்பவர்களுக்கு அவ்வளவு வீச்சு இருக்காது. எனவே, காய் கறி முதலிய இயற்கை உணவுகளுடன் ஆசனப் பயிற்சிகளையும் செய்து வந்தால் சில வருஷங்களில் பழைய வியர்வை நாற்றம் விலகி விடும். ஒரு ஆகாரம் இன்று சாப்பிட்டால், அதன் சாரம் நமது உடலில் ஆறு மாதங்கள் வரை இருக்கும் என்று வைத்திய சாஸ்திரம் சொல்லுகிறது. வெறும் பழங்களை மட்டும் சாப்பிடும் யோகிகளுடைய உடல் வாசனை பொருந்தியதாய் இருக்கும் என்று பல யோகிகளின் அனுபவத்திலிருந்து தெரிய வருகிறது.

எனவே, வியர்வை நாற்றம் விலக வேண்டுமானால், உணவு மாறுதல் அவசியம் வேண்டும். யோக ஆசனங்கள் அதன் குணத்தை இன்னும் சீக்கிரமாக்கும். ரத்தத்தைச் சுத்தமாக்கும்.


கேள்வி:—காலைக் கடனை முடிப்பதற்கு அரை மணி நேரமாகிறது. அதன் பின் தண்ணீர் அருந்தி அரை மணி நேரம் பொறுத்து ஒரு மணி நேரம் ஆசனம் செய்கிறேன். பின் சாந்தி ஆசனமும் பிராணாயாமமும் அரை மணி நேரம் ஆகிறது. அதன் பின் ஓய்வு அரை மணி நேரம். ஆக மூன்று மணி நேரம் பொறுத்துத்தான் எதையும் செய்ய முடிகிறது. இன்னும் நேரம் குறைத்துச் செய்யக் கூடிய வழி யிருந்தால் தயவு செய்து விளக்கக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

பதில்:—காலைக் கடனை முடிக்க அரை மணி நேரம் அதிகம். கால் மணி போதுமானது. அப்படி அரை மணி நேரம் எடுத்துக் கொண்டாலும் தண்ணீர் சாப்பிட்டுப் பின் மற்றொரு அரை மணி நேரம் இருக்கிறீர்கள். தண்ணீர் சாப்பிட வேண்டிய அவசியமே யில்லை. அப்படி சாப்பிட்டாலும் அதன் பின் அரை மணி நேரம் வரை வேறு வேலைகளைச் செய்யலாம். எனவே அந்த அரை மணி நேரம் வீண் அல்ல. ஆசனம் ஒரு மணி நேரம் செய்கின்றீர்கள். அது சரியே. சாந்தி ஆசனம் பிராணாயாமம் இவற்றிற்கு அரை மணி நேரம் என்பது அதிகம். சாந்தி ஆசனம் பத்து நிமிஷம் செய்தால் போதும். பிராணாயாமத்துக்கும் பத்து நிமிஷம் போதும். அவரவர்கள் சௌகரியம் இஷ்டத்தைப் பொருத்து அரை மணியோ ஒரு மணியோ செய்யலாம். பின்பு அரை மணி நேரம் ஓய்வு என்பது வேண்டிய தில்லை. சாதாரணமான வேலைகளைச் செய்யலாம். குளிக்கவோ, சாப்பிடவோ வேண்டுமானால்தான் உடனே செய்யப்படாது. இருபது அல்லது முப்பது நிமிஷம் பொருத்துக் குளிக்கவோ சாப்பிடவோ செய்யலாம். எனவே இடையிலுள்ள நேரமும் வீண் அல்ல. ஆக ஆசனம், பிராணாயாமத்துக்காக இவர் ஒதுக்கும் நேரம் ஒன்றரை மணி என்றுதான் ஏற்படுகிறது. பாக்கி ஒன்றரை மணி அவருடைய இஷ்டப்படி வேலை செய்யலாம். காலைக் கடனுக்கு, ஆசனம் செய்தாலும் செய்யாவிட்டாலும் அதற்காக நேரம் செலவிடத்தான் வேண்டும்.

இதையெல்லாவற்றையும் விட வேலை செய்யும் நேரம், படிக்கும் நேரம், சாப்பிடும் நேரம், தூங்கும் நேரம், அரட்டை அடிக்கும் நேரம், இவைகளெல்லாவற்றிற்கும் ஒரு கால அட்டவணை போட்டுப் பார்த்தால் ஆரோக்கிய இன்ப வாழ்வுக்கே அஸ்திவாரமாக இருக்கும் ஆசனப் பிராணாயாமத்துக்காகச் செலவிடும் நேரம் எவ்வளவு சிறிய அளவு என்பது புலப்படும். (தொடரும்)

இந்தக் கட்டுரை ஆசிரியர் விலாசம்: ஸ்ரீ வி. எல். குமாரசாமி,
216, திருவொற்றியூர் ஹைரோடு, தண்டையார்ப்பேட்டை, சென்னை-21

ஆதார சக்தி



நீங்களும் பெறுக

வாட்டர்பரீஸ் காம்பவுண்ட்

தினசரி போஜனத்திற்குப் பிறகு ருசிகரமான வாட்டர்பரீஸ் காம்பவுண்டும் சாப்பிட்டு வந்தால் சொற்பகாலத்திலேயே தென்பும் திடமும் அதிகரிப்பதை காண்பீர்கள். தேக உறுப்புகளுக்கு வலுவூட்ட அவசியமான பொருள்கள் நிறைந்த வாட்டர்பரீஸ் காம்பவுண்ட் உங்களுடம்பின் திராணி அதிகரிக்கச் செய்யும். களைப்பேற்படாமல் தென்பூட்டி ஜலதோஷம், இருமல் வராமலிருக்க அதிக எதிர்ப்பு சக்தியும் பெற உதவுகிறது. இளையோர், முதியோர் யாவருக்கும் சிறந்த ஆரோக்கிய டானிக்.

WATERBURY'S COMPOUND

வாட்டர்பரீஸ் காம்பவுண்ட்

உங்களைத் தென்புடன் வைத்திருக்கும்



NAS 42-53.

கால்கேட்
குளோரோபில் டூத்பவுடர்



குளோரோபிலின் பூரண நன்மைகளை நீங்கள் உபயோகிக் கையில் தருகிறது!

வீரிய குளோரோபில்தான் பலன் தரும்!

வீரிய குளோரோபிலின் நன்மைகளை எல்லாம் புதிய கால்கேட் குளோரோபில் டூத் பவுடர் தருகிறது. வீரிய குளோரோபில் தான் வாய் நாற்றம், கிரிமிகளை நீக்கி ஈறுகளைப் பலப்படுத்துகிறது. கால்கேட் முறையில் குழந்தைகளுக்கு குளோரோபில் கவனிப்பை அளியுங்கள்—அரிய சந்தர்ப்பம்.



வாய் நாற்றத்தை அழிக்கிறது

ஒரு விசேஷ சூத்திரம் காரணமாக கால்கேட் குளோரோபில் டூத்பவுடர் துரிதமாக, திருத்தமாக வேலை செய்கிறது. உங்கள் வாய் அதிகநேரம் புதுமை, இனிமையுடன் இருக்கிறது. அதன் வாசனை ஜோரானது!

கிருமிகளை ஒழிக்கிறது


சாப்பிட்டவுடன் கால்கேட் குளோரோபில் டூத் பவுடரை உபயோகிப்பதால் பற்களைச் சிதைக்கும் அமிலங்கள் ஒழிகின்றன.





ஈறுகளை பலப்படுத்துகிறது

ஈறுகளை குளோரோபில் பலப்படுத்துகிறது. தினசரி கால்கேட் குளோரோபில் டூத் பவுடரை உபயோகிப்பதால் குளோரோபிலின் பூரண நன்மைகளைப்பெற்று ஈறுகளைப் பாது காக்கலாம்.



CTP68



பொன் உள்ளம்

ராகு

'ஜல் ஜல்' என்ற சத்தத்துடன் மாட்டு வண்டி வந்து நின்றது. உள்ளே தாழ்வாரத்தில் வெற்றிலைப் பெட்டியைத் திறந்து கொண்டிருந்த சோமசுந்தரம் பிள்ளை 'சட்' டென்று எழுந்து வந்து பார்த்தார்.

வந்து நின்ற வண்டியிலிருந்து அருணாசலம் கீழே இறங்கினார்.

"ஓ! அண்ணாச்சியா? வாருங்கோ!" என்று வரவேற்றார் சோமசுந்தரம் பிள்ளை.

அருணாசலம் வண்டிக்காரனுக்குச் சத்தத்தைக் கொடுத்து அனுப்பி விட்டுத் திண்ணையில் ஏறி உட்கார்ந்தார். இதற்குள் விஷயமறிந்த பிள்ளையின் மனைவி ஒரு வெள்ளிக் கூஜாவில் தண்ணீரும் வெற்றிலைப் பெட்டியும் கொண்டு வந்து வைத்தாள்.

எதிர்த் திண்ணையில் மேல் துணியால் தட்டி விட்டுப் பிள்ளையும் உட்கார்ந்தார்.

"என்ன அபூர்வமாயிருக்குதே, அண்ணாச்சி! விலைபுலங்களைப் பார்த்து விட்டுப் போகலாமென்று வந்தீங்களா?" என்று கேட்டார் சோமசுந்தரம் பிள்ளை.

"நான் வந்த காரியம் முதலிலே உன்னைப் பார்க்கத்தான், சோமசுந்தரம்" என்று அருணாசலம் சொன்னதும், சோமசுந்தரம் பிள்ளையின் முகத்தில் கவலை படர்ந்தது.

"ஹூம்!" என்று பெருமூச்சு விட்டார்.

"நம்ப மவன் பம்பாய்க்குப் படிக்கப் போயிருக்கானில்லை. பரீட்சைக்குப் பணம் கட்டணும் என்று கடிதாசு போட்டிருக்கான். காற்று, மழையிலே வாழைத் தோட்டம் முழுவதும் போயிடுச்சு. ஏக நஷ்டம். இந்தச் சமயத்திலே நீதான் கொடுத்து உதவணும். வாழையை நம்பி எவ்வளவோ காரியங்கள் செய்து விட்டேன். ஒரே நெருக்கடியாயிருக்கிறது" என்றார் அருணாசலம்.

பிள்ளை ஒன்றும் பேசவேயில்லை. தலையைக் குனிந்து கொண்டிருந்தார்.

"என்ன ஒன்றுமே பேசவில்லை?"

"சொல்றதுக்கு என்ன இருக்கு, அண்ணாச்சி. என் விஷயம் தான் உங்களுக்குத் தெரிந்திருக்கே. பெரியவங்களான நீங்களே நெருக்கடியிலிருந்தால் நான் எந்த மூலைங்க? இப்படி அப்படி திருப்ப முடியலே. பொறுத்ததுதான் பொறுத்தீங்க. இந்த வருஷமும் பொறுத்துக்குங்க. தை பிறந்து அறுவடை முடிஞ்சதும் வட்டியும் முதலுமாய்ப் பணத்தைக் கட்டி விடுகிறேன்."

"ம்... இப்படிச் சொல்லிட்டா ஆயிடுமா?"

"நீங்க பெரிய மனசு வைத்தால் ஆகாத காரியம் உண்டா, அண்ணாச்சி!" என்று கையைப் பிசைந்தார் பிள்ளைவாள்.

அவருடைய உள்ளத்தில் பயம் படர்ந்தது. அருணாசலத்தின் முகத்தில் விடுவிடென்று கடுமை ஏற ஆரம்பித்து விட்டது.

"சோமசுந்தரம், நான் சொல்லுகிறேன் என்று கோவிச்சுக்கப் படாது. நீ கஷ்டப்பட்டபோது வந்து கேட்டாய். நான் 'இல்லை' என்று மறுத்தேனா? கொடுத்தேன்.

இப்போது நான் பெரிய கஷ்டத்தில் சிக்கிக் கொண்டிருக்கிறேன். எப்படியாவது பாதியாவது கொடுத்தால் நல்லது."

"அண்ணாச்சி......"

"அதெல்லாம் எனக்குத் தெரியாது. எனக்குப் பணம் அவசியமாயிருக்கிறது."

இவ்வளவு நேரம் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்த சோமசுந்தரம் பிள்ளை எழுந்து அருணாசலத்தின் முன்பு நின்றார்.

"இதோ பாருங்கள், அண்ணாச்சி. நீங்கள் கஷ்டப்படுகிறீங்கன்னு கேட்டதிலேயிருந்து நான் எவ்வளவு வேதனைப் படுகிறேன் தெரியுமா? என் கஷ்டத்தில் கைகொடுத்து உதவினீங்க. உங்களுக்கு உதவக் கூடிய வகையில் தெய்வம் எங்களை வைக்கவில்லையே என்று வருத்தப் படுகிறேன். நாலு வருஷமா வானம் கண்ணைத் திறக்கவில்லை. உங்களுக்குத் தெரியாதது ஒன்றுமில்லை."



சிறிது நேரம் பலத்த யோசனையிலிருந்த அருணாசலம், திடீரென்று, "சோமசுந்தரம்!" என்று கூப்பிட்டார்.

"அண்ணாச்சி!" என்றார் பிள்ளை.

"இதோ பார். எனக்கோ பணம் அவசியம் தேவையாயிருக்கு. உன்னிடமோ பணமில்லை. பேசாமல் நிலத்தை என் பேருக்குக் கிரயம் பண்ணி விடு. நான் அதை எங்கேயாவது வைத்து வாங்கி உனக்கு மேலே கொடுக்க வேண்டிய பணத்தைக் கொடுத்து விடுகிறேன்" என்றார்.

அருணாசலத்தின் திட்டத்தைக் கேட்ட பிள்ளை அசந்து போய் விட்டார். அவர் ஜீவனம் முழுவதுமே நிலத்தில் அல்லவா இருக்கிறது. அதை விற்று விடுவதா? அவரால் அதை ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

"வேண்டாம், அண்ணாச்சி, வேண்டாம்! இந்த வருஷம் பொறுத்துக்குங்க. தை பொறக்தரும் அவசியம் பணத்தைக் கொடுத்து விடுகிறேன்" என்று சொன்னார்.

"நானும் ரொம்ப நாள் பொறுத்துட்டேன். ஒரு மாசமா, ஒரு வருஷமா? அஞ்சு வருஷம் போய் விட்டது. இன்றைக்கு ஏதாவது ஒரு முடிவு செய்து கொண்டுதான் புறப்படப் போகிறேன். ஒன்று பணத்தைக் கொடு. இல்லாவிட்டால் நிலத்தைக் கிரயம் பண்ணி விடு" என்றார் அருணாசலம் கோபமாக.

அவர்களிடையே சண்டை மூண்டுவிடும் போல் தோன்றவே, பிள்ளையின் மனைவி, "ஏங்க, வந்தவரைத் திண்ணையிலே உட்கார வைச்சுப் பேசிக் கிட்டிருக்கீங்க. குளிச்சு, சாப்பாடு ஆனப்புறம் சாவகாசமாகப் பேசிக்கலாம்" என்றாள்.

அந்தச் சமயத்தில் சிறிது நேரம் அமைதியை விரும்பியது பிள்ளையின் மனம். ஆத்திரத்தில் ஏதாவது சொல்லி விட்டால்?

"ஆமாங்க, அண்ணாச்சி. எனக்குக் கூடக் கழனிக்குப் போய் விட்டு வரணும். குளிச்சுட்டு இருங்க, வந்துடறேன்" என்று சொன்னார் பிள்ளை.

2

குளிப்பதற்காகத் துண்டை எடுத்துக் கொண்டு அருணாசலம் கிணற்றுக்குச் சென்றார். கிணற்றடியில் அவருக்குப் பெரிய ஆச்சரியம் காத்திருந்தது. பதினெட்டு வயது நிரம்பிய பெண் ஒருத்தி கிணற்றிலிருந்து தண்ணீர் இழுத்துக் கொண்டிருந்தாள். ஆளரவம் கேட்கவே அப்பெண் குடத்தை எடுத்துக் கொண்டு திரும்பினாள். அருணாசலத்தைக் கண்டதும், தலையைக் குனிந்து கொண்டு உள்ளே சென்று விட்டாள்.

ஒருகணம்தான் அவளைப் பார்த்தாரென்றாலும், அந்த ஒரு கணத்துக்குள் அவள் உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரை கோட்டமிட்டு விட்டார்.

"ஆண்டாளு!" என்று உள்ளிருந்து பிள்ளையின் மனைவி கூப்பிட்டாள்.

"இதோ வந்து விட்டேனம்மா" என்று பதில் கொடுத்தபடி அவசரமாக உள்ளே சென்றாள் அந்தப் பெண்.

'ஆண்டாள்! சரியான பெயர்தான்' என்றது அருணாசலத்தின் உள்ளம்.

கிணற்றிலிருந்து தண்ணீர் இழுத்துத் துணிகளைத் துவைத்தார். வெயிலில் காய வைத்து விட்டுக் குளிக்க ஆரம்பித்தார்.

ஆண்டாளின் உருவம் அவர் மனத்தில் நன்கு பதிந்து விட்டது. கடைந்தெடுத்த தங்கப் பதுமை போன்றிருந்தாள். இளமை அவள் மேனியில் பூர்ண ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருந்தது. அருணாசலத்தின் நினைவிலிருந்து ஆண்டாளின் அழகு நிறைந்த உருவம் சிறிதும் அகலவில்லை.

அவருக்கு ஒரு யோசனை தோன்றியது. செல்லம்மா இறந்து எட்டு வருஷங்களாகி விட்டன. இதுவரை அவருக்குக் கல்யாணத்தைப் பற்றி எண்ணம் தோன்றவில்லை. ஆண்டாளைப் பார்த்தவுடன் அந்த எண்ணம் மெள்ளத் தலை தூக்கியது. ஆண்டாளை ஏன் மணந்து கொள்ளக் கூடாது? அப்படி என்ன அவருக்கு வயது அதிகமாகி விட்டதா? முப்பத்திரண்டுதானே ஆகிறது. ஆண்டாளை மணந்து கொள்வதால் இருவித அநுகூலங்கள் ஏற்படலாம் அல்லவா?

ஒன்று அவர் கடனுக்கு வழி ஏற்படலாம். அவருக்குத் தற்போது பணத் தொந்தரவு ஒன்றுமில்லை. சோமசுந்தரம் பிள்ளைக்குக் கடன் கொடுத்து ஐந்து வருஷங்களாகி விட்டன. இரண்டு வருஷங்களாக ஊரில் மழை இல்லை. பயிர் சரியாக விளையவில்லை. இந்த வருஷம் பயிர் முழுவதும் சாவியாகி விட்டது. பிள்ளைக்கு ஏகப்பட்ட கடன். ஒரே நெருக்கடி. இந்தத் தொல்லையிலிருந்து விடுபட நண்பரிடம் வந்தார். அருணாசலமும் சோமசுந்தரமும் மதுரையில் ஒன்றாகப் படித்தவர்கள். பிள்ளையின் கஷ்டங்களை உணர்ந்து அருணாசலம் அவருக்கு உதவ முன் வந்தார். பிள்ளையின் மொத்தக் கடன்களான மூவாயிரம் ரூபாய்களையும் தீர்த்துக் கொடுத்தார். அதற்குப் பிரதியாகப் பிள்ளையும் தன்வசமிருந்த ரூபாய் ஐயாயிரம் பெறுமான நிலபுலன்களை அருணாசலத்திடம் அடமானமாக வைத்தார்.



ஐந்து வருஷங்கள் ஓடி விட்டன. கடன் போகவில்லை. வட்டிக்கு வட்டி ஏறியது. அருணாசலம் ஆரம்பத்தில் அடிக்கடி கேட்டு வந்தார். சோமசுந்தரம் பிள்ளையைத் தலை தூக்க வொட்டாமல் தெய்வம் சோதனை செய்தது. மழை இல்லை; பஞ்சம்; சாவி எல்லாம் சேர்ந்து அவரைப் படாதபாடு படுத்தின. பணம் கொடுக்கத் தவணை தள்ளிக் கொண்டே வந்தார்.

இப்போது அருணாசலத்துக்குத் தன் பணம் போய்விடுமோ என்ற பயம் வந்து விட்டது. ஆகவே, ஒன்று பணத்தையோ, அல்லது நிலத்தையோ வசூலித்துக் கொண்டு திரும்புவது என்ற உறுதியில் புறப்பட்டு வந்தார்.

இரண்டாவதாக, சோமசுந்தரத்துக்குத் தொல்லைகள் நீங்கிவிடும். அவர் கஷ்டங்களை மாப்பிள்ளை என்ற முறையில் தீர்த்துவிட அருணாசலம் இருக்கிறாரே!

சோமசுந்தரம் மாட்டேன் என்று சொல்லப் போகிறாரா? நல்ல பணக்கார மாப்பிள்ளை கிடைக்கும்போது அவனுக்கு என்ன குறை! சாப்பாட்டுக்குப் பிறகு சாவகாசமாக சோமசுந்தரத்திடம் அதைப் பற்றிப் பேச வேண்டுமென்று தீர்மானம் செய்தார்.

3

சாப்பிட்டவுடன் சற்று ஆயாசமாய்த் தோன்றவே தலையைச் சாய்த்தார் அருணாசலம். திரும்பவும் கண் விழித்தபோது மணி நான்காகி விட்டது. அசதியில் நன்றாகத் தூங்கிப் போய் விட்டார்.

அவர் எழுந்தபோது பிள்ளை வீட்டிலில்லை. வயலில் கருவேல மரம் ஒன்று விழுந்து கிடப்பதாகவும் அதை வெட்டிக் கொண்டு வர ஆட்களை அழைத்துப் போயிருப்பதாகவும், அசதியிலே தூங்கும் அவரை எழுப்ப வேண்டாமென்றும் சொல்லி விட்டுப் போனதாகப் பிள்ளையின் மனைவி தெரிவித்தாள்.

'சரி, எங்கே போகிறான்? ராத்திரிக்குக் கேட்டுக்கொள்ளலாம்' என்று மனதில் சமாதானம் செய்து கொண்டாள். சோமசுந்தரத்தின் மனைவி கொண்டு வந்து வைத்த டிபனைச் சாப்பிட்டு விட்டுக் காற்றாட உலாவி விட்டு வரலாமென்று கிளம்பினார். அந்தக் கிராமத்தில் அருணாசலத்துக்கு நிறைய நிலபுலன்கள் உண்டு.

கழனிகளில் சுற்றி விட்டு வாய்க்கால் ஓரமாக வந்து பக்கத்திலிருந்த மூங்கில் கொல்லையில் நுழைந்தார். மூங்கில் கொத்துகளைப் பார்வையிட்டு விட்டுப் புறப்பட விரும்பிய அருணாசலத்தின் காதுகளில் யாரோ இருவர் பேசிக் கொண்டிருப்பது கேட்டது. மெல்ல வேலி யருகே வந்து பார்த்தார். பார்த்தவர் பார்த்தபடி நின்று விட்டார்.

வாய்க்காலில் தண்ணீர் எடுத்துச் செல்ல வந்திருந்தாள் ஆண்டாள். குடத்தைத் தேய்த்துக் கொண்டிருந்தாள். அருகில் இருபது வயதுள்ள வாலிபன் ஒருவன் நின்றுகொண்டிருந்தான். அவர்கள் என்ன பேசிக்கொள்ளுகிறார்கள் என்பதை அறிய விரும்பிய அருணாசலம் காது கொடுத்துக் கேட்டான்.

"ராகவா, நாம் இருவரும் ஒன்று சேருவது தெய்வத்துக்கே சம்மதமில்லை போலிருக்கிறது!" என்றாள் ஆண்டாள்.

"என்ன சொல்லுகிறாய், ஆண்டாளு! அசட்டுப் பிசட்டென்று எதையும் சொல்லாதே!" என்று அன்புடன் கடிந்துகொண்டான் ராகவன் என்ற அந்த வாலிபன்.



சிறந்த முறையில் நடைபெற்று வரும் சென்னை நகரசபை உத்தியோகஸ்தர்களின் கோ-ஆபரேடிவ் பாங்கியின் முப்பதாம் ஆண்டு விழா சமீபத்தில் அமோகமாக நடைபெற்றது. வேறு அலுவலினால் விழாவுக்கு வர முடியாதிருந்த ராஜாஜி அவர்கள் அடுத்த வாரத்தில் ஒரு நாள் மேற்படி பாங்கிக்கு விஜயம் செய்து, பாங்கியின் சிறந்த நிர்வாகத்தைப் பாராட்டினார்.

"நான் சொல்கிறது நிஜம்தான், ராகவா! என் அப்பா ஐந்து வருஷங்களுக்கு முன் ஒருவரிடம் நிலங்களை அடமானம் வைத்து மூவாயிரம் ரூபாய்க்குக் கடன் வாங்கினார். திருப்பி அடைக்க முடியவில்லை. அந்த மனிதர் அடிக்கடி பணம் கேட்டு வந்தார். அப்பாவும் தவணை சொல்லி வந்தார். இன்றைக்கு அவர் வந்து விட்டார். பணத்தைக் கொடு, அல்லது நிலத்தை எழுதிக் கொடு என்று பிடிவாதம் பிடிக்கிறார். இந்தச் சமயத்தில் எங்களுக்கு நாலாயிரம் ரூபாய் யார் தருவார்கள்? ஏற்கனவே ஊரெல்லாம் கடன். பேசாமல் நிலத்தைக் கொடுத்து விடலாம் என்று அப்பாவும் அம்மாவும் காலையில் பேசிக் கொண்டனர். இப்போது நாங்கள் ஏழைகள், ராகவா! உன் தகப்பனார் என் சம்பந்தத்தை ஏற்க மாட்டார். நாங்கள் இனி கூலிக்கு வேலை செய்து பிழைக்க வேண்டும். என்னை மறந்து விடு......"

ஆண்டாளின் கண்களில் நீர் ததும்பியது. ராகவன் அவள் தாவணியின் தலைப்பால் கண்களைத் துடைத்து விட்டான்.

"ஆண்டாளு! இதுக்காகவா உன்னை மறந்திடுன்னு சொல்றே? நீ எவ்வளவு கல் நெஞ்சம் பிடித்தவளாயிருக்க வேண்டும்? உன்னை மறக்கறது இந்த ஜென்மத்தில் இல்லை. உன் பணத்துக்காகவா உன்னை நேசிக்கிறேன்? நிலம் போனால் போகட்டுமே! உன் தகப்பனாரை எழுதிக் கொடுத்துவிடச் சொல். உங்களைக் காப்பாற்ற நான் இருக்கிறேன்" என்று சொல்லி அன்போடு அவள் தலையை வருடினான் ராகவன்.

இந்தக் காட்சியைக் கண்ட அருணாசலத்தின் மனம் 'எவ்வளவு தூய உள்ளம் படைத்தவன்' என்று சொல்லியது. அடுத்த விநாடி, "இந்த ஜோடியைப் பிரிக்கத் திட்ட மிட்டாயே!" என்ற கேள்வி எழுந்தது. அவர்களுடைய உண்மைக் காதலுக்கு முன்பு அவர் திட்டம் சிதறுண்டது. ஆண்டாளை மணக்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றியதற்கு வெட்கப் பட்டார்.

ராகவன் எங்கே? அவர் எங்கே? இரண்டு பேருக்குமிடையே மலைக்கும் மடுவுக்கு முள்ள வித்தியாச மல்லவா? யௌவனத்தின் மிடுக்கோடு இருக்கும் ராகவன், மணவாழ்க்கையில் ஊறித் திளைத்துப் போன அருணாசலத்தை விடப் பன்மடங்கு ஆண்டாளுக்கு ஏற்றவன். தெய்வத்தின் கழுத்தில் போட வேண்டிய பூமாலையைக் குரங்கினிடம் கொடுக்க விரும்பினார் அருணாசலம். உரிய சமயத்தில் தெய்வம் அவர் கண்களைத் திறந்து விட்டது. மனத்தில் ஒரு திடமான முடிவுடன் அங்கிருந்து வேகமாக நடந்தார்.

4

மணி ஏழாகியும் வெளியில் சென்ற அருணாசலத்தைக் காணவில்லை. பின்னையும் மனைவியும் கவலையுடன் உட்கார்ந்திருந்தனர். வேறு வழியில்லாமல் நிலத்தை அவர் பெயருக்கே விற்றுவிடுவதென்று அவர்கள் முடிவு செய்திருந்தனர். அப்போது ஒரு பையன் அவர்கள் இருந்த இடத்தை நோக்கி மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்க ஓடிவந்தான்.

"ஐயா, உங்க வீட்டுக்கு வந்திருந்தாரே ஒருவர், அவர் இந்தக் கடிதத்தை உங்களிடம் கொடுக்கச் சொன்னார். அவசரமா எங்கேயோ வேலையிருக்காம். போய் விட்டார்" என்று சொல்லிக் கடிதம் ஒன்றைக் கொடுத்தான்.

"கடிதத்தில் என்னங்க எழுதியிருக்கார்?" என்று அடக்க முடியாத ஆவலுடன் பின்னையின் மனைவி கேட்டாள்.

பின்னை கடிதத்தைப் பிரித்துப் படித்தார்

"சோமசுந்தரத்துக்கு எழுதியது,

நான் மிகவும் கீழ்த்தரமான காரியம் ஒன்றைச் செய்ய இருந்தேன். தெய்வம் தக்க சமயத்தில் என்னைக் காப்பாற்றியது.

ஆண்டாளின் அழகு என் மதியைக் குலைத்து விட்டது. அவளை மணக்க வேண்டுமென்று ஆசை ஏற்பட்டது. பணத்துக்குப் பதில் என்னையே மருமகனாக அடைந்து விடும்படி உன்னை வற்புறுத்துவதென்று காலையில் நினைத்துக் கொண்டிருந்தேன். பகவான்தான் என்னைத் தடுத்துக் கரையேற்றினார்.

மாலையில் வாய்க்காலுக்குப் போகும்போது ராகவனும், ஆண்டாளும் பேசிக் கொண்டிருப்பதைக் கேட்டேன். தூய உள்ளம் படைத்த அவர்கள் காதலைக் கெடுத்து என் விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்ள நான் விரும்பவில்லை. ஆண்டாளுக்கு, உனக்கு, எல்லாருக்கும் பெருந் துரோகம் செய்ய இருந்தேன். அதற்குப் பிராயச்சித்தமாக என்னிடம் அடைமானம் வைத்திருந்த உன் நிலங்களைத் திரும்பவும் உன்னிடமே கொடுத்து விட்டேன். அவைகள் ஆண்டாளின் கலியாணத்தில் சீதனமாக இருக்கட்டும்.

உடனே திருமணத்துக்கு ஏற்பாடு செய். பத்திரிகையைப் பார்த்த பிறகுதான் எனக்கு அமைதி ஏற்படும். நான் செய்யவிருந்த துரோகத்துக்குத் தக்க பிராயச்சித்தம் செய்த பிறகுதான் உங்கள் முகத்தில் விழிப்பேன். உன் அருமைக் குமாரி ஆண்டாளுக்கு என் ஆசிகள்.

அருணாசலம்."

"அண்ணாச்சியின் மனசு தங்கம்னா தங்கம் தான்!" என்றார் பிள்ளை.

கதவு மறைவில் இருந்து இதைக் கேட்டுக் கொண்டிருந்த ஆண்டாளுவின் இரு கரங்களும் தாமாகக் குவிந்தன.

படித்துப் பாருங்கள்!

கவி மணியின் உரைமணிகள்

கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள் ஓர் அருங் கவிஞர்; இன்று நாம் கண்ணாரக் காணக் கூடிய கவிஞர் என்றுதான் அறிந்திருப்பார்கள். ஆனால் தமிழ் ஆராய்ச்சி உலகம், கவிமணி அவர்கள் சிறந்த சாஸன ஆராய்ச்சியாளர் என்பது நீண்ட நாட்களாக அறிந்திருக்கிறது. அவர்களுடைய 'காந்தளூர்ச்சாலை' பற்றிய ஆராய்ச்சியுரை மிகப் பிரசித்தமானது. இது தவிர அவர்கள் கல்வெட்டுகளில் செய்துள்ள பல ஆராய்ச்சிக் கட்டுரைகள் இந்நூலில் அடங்கியிருக்கின்றன. ஆயினும் இந்நூல் தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள், சாஸன ஆராய்ச்சியாளர் மட்டுமல்ல; கவிமணி மட்டுமல்ல; சிறந்த உரைமணி கூடத்தான் என்பதை விளக்குகிறது. ஏனெனில் அவர்கள் பல விஷயங்களில் தீவிர உணர்ச்சி கொண்டிருக்கிறார்கள். திருவிதாங்கூர் தமிழகத்தைப் பற்றி, இன்றைய தமிழ் எழுத்துலகைப்பற்றி, சைவ சமயப் பிரசாரத்தைப் பற்றியெல்லாம் அவர்கள் திட்டவட்டமான கருத்துக்களும், தீவிர உணர்ச்சியும் கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்நூல் எடுத்துக் காட்டுகிறது.

பிரசுரம்: பாரி நிலையம், 59, பிராட்வே, சென்னை விலை: ரூ. 2—8—0

காதல் கண்கள்

உலகத்தை இயக்கும் சக்திகளுள் ஒன்று காதல். இந்த அற்புத சக்தியைப் பற்றிப் பாடாத கவிஞனுமில்லை. படிக்காத ரஸிகனுமில்லை. சமீபகாலம் வரை நம்மிடையே இருந்த உலகம் போற்றும் கவிஞர் ரவீந்திர நாத் டாகூர் பல அருமையான காதற் கீதங்கள் தம் தாய்மொழியில் பாடியிருக்கிறார். அவற்றில் சில ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப் பட்டிருக்கின்றன. ஆங்கில மொழி பெயர்ப்பை ஆதாரமாகக் கொண்டு திரு வி. ஆர். எம். செட்டியார் அவர்கள் எளிய வசன நடையில் தமிழில் மொழி பெயர்த்திருக்கிறார். காதலன் கூறும் பாட்டைப் பாருங்கள்.

"ஒரு ரத்னமாக இருந்தாலும், அதைத் துண்டு துண்டாக உடைத்து உன் கழுத்துக்கு ஒரு முத்தாரம் செய்து தந்து விடுவேன்.

"ஒரு சின்னஞ் சிறு மலராக இருந்தாலும் அதை உடனே செடியிலிருந்து கிள்ளி எடுத்து உனது கூந்தலில் செருகி அலங்கரிப்பேன். ஆனால் எனது இதயம் ஒரு ரத்தினமும் அல்ல; சின்னஞ் சிறு மலரும் அல்லவே. நான் என்ன செய்வது!"

இப்படிப் பல சுவை மிக்க வாக்கியங்கள், பகுதிகள் இந் நூலில் காண்கின்றன.

பிரசுரம்: ஸ்டார் பிரசுரம், 6, புதுச் சந்தை தெரு, காரைக்குடி, விலை; ரூ. 2—8—0.

அண்ணனும் தங்கையும்

இந்தப் புஸ்தகத்திலிருக்கும் தங்கை ரொம்பவும் பொல்லாத தங்கையாக இருக்கிறாள். தன் அண்ணனை அவள் படுத்தி வைக்கும் பாடு கொஞ்ச நஞ்சமல்ல. என்ன என்ன கேள்விகள் எல்லாம் கேட்டுத் தொந்தரவு செய்கிறாள். ஆனால் அந்த அண்ணன் ரொம்பவும் பொறுமைசாலி, ரொம்பவும் விஷயக்ஞராகவும் தோன்றுகிறார். இல்லையானால் அவள் கேட்கும் அத்தனை கேள்விகளுக்கும் எப்படிப் பதில் சொல்லியிருக்க முடியும்!

தங்கை, "அண்ணா, எதையும் தொடர்ந்து படித்துக் கொண்டிருக்கக் கூடாது என்று கூறுகிறீர்களே, காரணம் என்ன!" என்று கேட்கிறாள்.

"எங்களைப் போலொத்த பெரியோர்களுக்கு 45 நிமிஷத்திலும், பதினைந்து வயதானவர்களுக்கு 35 நிமிஷ நேரத்திலும் பன்னிரண்டு வயதானவர்களுக்கு 25 நிமிஷ நேரத்திலும் ஒன்பது வயதானவர்களுக்கு 15 நிமிஷ நேரத்திலும் மூளைக்குச் சோர்வு உண்டாவதாக அறிஞர்கள் கண்டுள்ளார்கள். அதனால் சிறிது சோர்வு கண்டதும் எழுந்து நடந்தால் இரத்த ஓட்டம் நன்றாக நடைபெறும். வெளியில் பார்த்தால் கண்கள் ஓய்வு பெறும்......"

பெரியவர்களுக்கே நாற்பத்தைந்து நிமிஷங்களுக்கு மேல் மனத்தை ஒரு நிலையில் நிறுத்தி விஷயத்தைக் கிரகிப்பது சிரமம் எனில் ஐந்து வயது முதல் பதினாறு வயதுக்குள் இருக்கும் சிறுவர்களையும் சிறுமிகளையும் ஒருநாள் முழுதும் அடைத்து வைத்துப் போதிப்பதைப் பற்றி என்னவென்பது!

சிறியவர்களுக்கும் பெரியவர்களுக்கும் பலநாள் கூடவே வைத்திருந்து படித்துப் படித்துப் பல விஷயங்களைத் தெரிந்துகொள்ள உதவும் புஸ்தகம்.

ஆசிரியர்: திரு பொ. திருகூடசுந்தரம் பிள்ளை, பிரசுரம்: காந்தி நிலையம், தியாகராயநகர், சென்னை-17 விலை: ரூ. 3—0—0

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
No. 20, Dr. Guruswamy Mudaliar Road, Kilpauk, Madras


ஒவ்வொரு நாளும் நீங்கள் அழுக்கிலிருக்கும் கிருமிகளின் அபாயத்துக் குள்ளாகிறீர்கள்
லைப்பாய் சோப்பினால் அழுக்கிலிருக்கும் கிருமிகளை கழுவிக் களையுங்கள்
நீங்கள் இந்த அபாயத்திலிருந்து உங்களைப் பாது காத்துக்கொள்ள வேண்டும்
அதன் ''பாது காக்கும் நுரை'' உங்கள் ஆரோக்கியத்தை காப்பாற்றுகிறது
லைப்பாய் சோப்
தினசரித் தொல்லையான அழுக்கிலிருக்கும் கிருமிகளிலிருந்து உங்களைப் பாதுகாக்கிறது
LIFEBUOY
SOAP

L. 231-50 TM

REGD. No. M 4392
Registered as a newspapers in Ceylon



S. 205-50 TM